Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 102 • 23.07.2017

இலங்கையின்
முதல் தர தமிழ்
வார இதழில் உங்கள்
வணிக விளம்பரங்கள்
நியாயமான விலைகளில்
இடம்பெற வேண்டுமா



உடனே அழையுங்கள்
076 82 555 67 / 60
தீபம் எப்பொழுதும் உங்களுக்கான
தன்னிகரில்லா சேவையை வழங்க முன்னிற்கும்

## தமிழர் நிலத்தில் மறைந்திருந்த சீகிரியா!

அதுவரை வெளிவராத இரகசிய இடம்!

தலைமையை சுற்றவைக்கும் ஈ.பி.டி.பியின் மின்சார நிலுவை!

வரட்சியிலிருந்து தப்புமா வவுனியா?



ஊழல் கூடாரமா மட்டக்களப்பு மாவட்ட செயலகம்?

அதிர வைக்கும் தகவல்கள்



சிவாஜிலிங்கத்திற்கும் பிடித்தது அமைச்சர் ஆசை

## "மாற்று தலைமையா... நானென்ன குப்பையா கொட்டுகிறேன்"

தன்னைத்தானே அறிவிக்க முடியாத நிலையாம்!

தலைமைக் காரியாலயம்
இல. 57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
077 722 6247
கிளைக் காரியாலயங்கள்
வேலணை, வங்களாவடிச் சந்தி
021 221 5472
மல்லாகம். கே.கே.எஸ் வீதி
021 224 3393
சங்கானை, ஓடக்கரை வீதி
021 225 1664


சசிகா லேணர்ஸ்



க/பொ/த/உயர்தர பரீட்சையில்
தோற்றும் மாணவர்களுக்கு வவுச்சர்
பரிசு மேலதிக விபரங்கள் 28 பக்கம்

இல. 821C
மணிக்கூட்டுக் கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி
021 222 8004


யாழ்ப்பாணத்திலிருந்து Airport மற்றும் கொழும்பு மற்றும் அனைத்து
சுற்றுலா இடத்துக்கும் செல்வதற்கு எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்
வான் / பஸ் குளிரூட்டிடப்படட பஸ் என்பன எம்மிடம்...
HOTLINE 077 753 1440


Thillai Wedding Service
உங்கள் வாழ்வில் இடம்பெறும் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா,
பிறந்தநாள் விழா போன்ற மங்களகரமான வைபவங்களுக்கு தேவையான
மணவறை, தங்க மணவறை, பலூன் அலங்காரம் மற்றும் அலங்காரம்,
போன்ற சகல விதமான சேவைகளையும் எம்மிடம் சிறப்பான முறையில்
பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்
Thillai Wedding Service
Contact : 077 889 0428
No-14 Bandaranayaka mawatha, kalubowila, dehiwala Sir lanka.


NO 1 TOPAZ
TOPAZ
No. 01 Shop in Jaffna
திருமண பட்டுச்சேலை காஞ்சி புரம் பட்டுச் சேலை
சுடிதார் மற்றீயல்கள் மற்றும் ரெடிமேட் ஆடைகள்
ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்
மிஸ் சுட்டி மிஸ் பியூட்டியாக வலம் வரும் சுட்டிச்
சிறுமியர்களிற்கான பஷன் ஆடைகள்
We are specialist in in
Wedding suits, Wedding Sarees , Party Sarees,
Wedding Frocks, Party Frocks and all kinds of Items
TOPZ
No 72, Grand Bazaar
Jaffna
Tel 021 222 4743
Fax 021 222 7645
TOPAZ TAILORING
No 80/24, Kasthuriyar Road
Jaffna
Tel 021 222 4643
Email : topazagn@gmail.com
TOPZ MALL
No 195, Power House Road
Jaffna
Tel 021 222 4933
021 221 9933


கண்டியில் அனைத்து வசதிகளுடன்
Sri Pushpadana society (Ltd)
தங்குமிட வசதி,
மற்றும் அனைத்து வசதிகளுடன்
✓ Hall Facilities for Wedding Receptions Functions,
Parties, Exhibition, Seminars & Conferences
✓ Comfortable Rooms
✓ Modern Shopping Complex.
115, D.S.சேனநாயக்க மாவத்தை, கண்டி,
0812223987, 0812202958

## போன மாதம் இல்லை; இந்த மாதம் இருக்கிறது
# சிவாஜிலிங்கத்தை பிடித்தது அமைச்சர் ஆசை!
### உயர்மட்ட குழு வாக்கெடுப்பிலும் சிவாஜி தோல்வி

வடக்கு அமைச்சர் நியமனத்தில் ரெலோ கட்சிக்குள் கடுமையான குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. அமைச்சர் பதவி தேவையில்லையென ஆரம்பத்தில் கூறிய சிவாஜிலிங்கம், பின்னர் அமைச்சர் பதவியை குறிவைத்துள்ளதால் இந்த குழப்பங்கள் எழுந்துள்ளன. ரெலோவின் உயர்பீடம் இதனால் இரண்டுபட்டு குழப்பமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

வடக்கு போக்குவரத்து அமைச்சர் டெனிஸ்வரன் கட்சி கட்டுப்பாடுகளை மீறி செயற்பட்டார் என கருதியதால் அவரை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கி புதிய வரை நியமிப்பதென ரெலோ கட்சி முடிவெடுத்திருந்தது. இதனையடுத்து கடந்த 16ம் திகதி வவுனியாவில் ரெலோவின் உயர்பீடம் கூடி, அடுத்த அமைச்சர் யார் என்பது தொடர்பில் ஆராய்ந்தது. உயர்பீட உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், என்.சிறீகாந்தா, சிவாஜிலிங்கம், விந்தன் கனகரட்ணம், கோவிந்தன் கருணாகரம், இந்திரகுமார் பிரசன்ன, ஹென்றி மகேந்திரன், வினோ நோகராதலிங்கம் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

கட்சிக்கு ஆற்றிய பணியை கருத்தில் கொண்டு விந்தன் கனகரட்ணம் அமைச்சராக்கப்பட வேண்டுமென கிழக்கு மாகாண பிரதி அவைத்தலைவர் ஹென்றி மகேந்திரன், கட்சியின் பொதுச்செயலாளர் என்.சிறீகாந்தா போன்றவர்கள் வலியுறுத்தியுள்ளனர். எனினும், அமைச்சர் பதவி தேவையில்லையென முன்னர் கருத்து தெரிவித்த சிவாஜிலிங்கம், அந்த கூட்டத்தில் அமைதியாக உட்கார்ந்திருந்ததால், அவர் அமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்ள விரும்புகிறார் என கருதப்பட்டதால், அவரை அமைச்சராக்க வேண்டுமென்ற சிபாரிசும் செய்யப்பட்டது. கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் சிவாஜிலிங்கத்தின் பெயரை சிபாரிசு செய்தார்.

இதனையடுத்து போட்டியாளர்களான விந்தன் கனகரட்ணம், சிவாஜிலிங்கம் இருவரையும் கூட்ட அறையை விட்டு வெளியேற்றிவிட்டு, ஏனைய ஆறுபேரும் அமைச்சர் பதவி தொடர்பாக கலந்துரையாடினர். ஒரு மணித்தியாலத்தின் பின்னர் மீண்டும் கலந்துரையாடல் மண்டபத்திற்குள் போட்டியாளர் இருவரும் அழைக்கப்பட்டனர். அங்கு உரையாற்றிய கட்சித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், விந்தன் கனகரட்ணத்திற்கு அமைச்சர் பதவி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவித்தார்.

இதன்போது கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் வெளிநடப்பு செய்தார். அமைச்சர் பதவிக்காக வாக்கெடுப்பு நடந்ததுஎன்பதை பகிரங்கமாக்க வேண்டாம் என்ற கோரிக்கையை சிவாஜிலிங்கம் முன்வைத்ததையடுத்து, விந்தனிற்கு அமைச்சர் பதவி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதென்ற தகவலை முதலமைச்சரிற்கும், பத்திரிகைகளிற்கும் அறிவிக்கும் பொறுப்பு சிவாஜிலிங்கத்திடம் வழங்கப்பட்டது. எனினும் அவர் அதைசெய்யவில்லை. விந்தனின் கடந்தகால செயற்பாடுகளால் அவரை அமைச்சராக்கினால் விமர்சனங்களை சந்திக்க வேண்டியிருக்கும் என முதல்வரிடம் ஆலோசனை சொன்னதாகவும் ஒரு தகவல் வெளியானது. எனினும், சிவாஜிலிங்கத்தை தொடர்பு கொண்டு கேட்டபோது அதை மறுத்தார். விந்தனின் நியமனம் தொடர்பாக முதல்வருடன் எதையும் கதைக்கவில்லையென்றும், செய்திகள் பகிரங்கமாகிவிட்டதால் பகிரங்கமாகவும் அறிவிக்கவில்லையென்றார்.

விந்தனின் நியமனம் தொடர்பில் உடன்பாடற்ற நிலையில் இருக்கிறார் என வெளியான தகவலை கட்சித் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் மறுத்துள்ளார். விந்தன் கனகரட்ணம்தான் ரெலோவின் ஒரே தெரிவென செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டுள்ளார். எனினும், சிவாஜிலிங்கத்துடன் முதலமைச்சர் நெருக்கமாக உள்ளதால் ரெலோவின் முடிவை ஏற்றுக் கொள்ளாமல் விடவும் சாத்தியமுள்ளதாக கூறப்படுகிறது.

# ஒரு கோடியை அண்மிக்கும் ஈ.பி.டி.பியின் மின்கட்டண நிலுவை!; கண்மூடியுள்ள மின்சாரசபை!!
### வேறு அரசியல் கட்சிகளின் அலுவலகங்களிலும் பெருமளவு நிலுவை!

இலங்கை மின்சாரசபைக்கு செலுத்த வேண்டிய பெருமளவு மின்கட்டணத்தை யாழ்ப்பாணத்திலுள்ள ஈ.பி.டி.பி தலைமையகம் செலுத்தவில்லை. பல இலட்சம் ரூபா வரையான மின் கட்டணம் நிலுவையில் உள்ளபோதும், மின்சாரசபையினர் அதை கண்டுகொள்ளவில்லை. சாதாரண மக்களின் மின்கட்டணம் சில ஆயிரங்களை கடந்தாலே, மின் இணைப்பை துண்டித்து அபராதமும் விதிக்கும் மின்சாரசபையின் சட்டதிட்டங்கள் ஏழைஎளிய மக்களிடம் மட்டுமே செல்லுபடியாகுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள சிறீதர் தியேட்டர் மற்றும் அதனோடிணைந்த சில அலுவலகங்களின் மின் கட்டணம் முறையாக செலுத்தப்படுவதில்லையென்ற விடயம் சில மாதங்களின் முன்னர் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. ஈ.பி.டி.பியினால் செலுத்தப்பட வேண்டிய மின்கட்டண நிலுவை இலட்சரூபாக்களை கடந்துவிட்டது என்பதும் கூட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், மின்சாரசபையினர் இந்த விடயத்தில் கண்ணைமூடிக்கொண்டு இருந்துள்ளனர். இந்தநிலையில், தற்போதைய மின்கட்டண நிலுவை தொடர்பான தகவல்களை தீபம் பெற்றுள்ளது.

மின்சாரசபைக்கு 85 இலட்சம் ரூபா வரையான நிலுவையை ஈ.பி.டி.பி செலுத்த வேண்டுமென கூறப்படுகிறது. இதில் மின்கட்டணம் 40 இலட்சம் ரூபா, செலுத்தப்படாத மின்கட்டண வட்டி 45 இலட்சம் ரூபா எனப்படுகிறது. சில வருடங்களாகவே மின்கட்டண மின்கட்டணங்களை முறையாக செலுத்துவதில்லை, அதனால் மின் கட்டணம் எகிறியுள்ளது, அதிகாரிகளும் இந்த விடயத்தில் பாராமுகமாக உள்ளனர் என்கிறார்கள் மின்சாரசபையிலுள்ள ஊழியர்கள்.

இதேவேளை, ஈ.பி.டி.பி தவிர்ந்த வேறும் சில அரசியல் கட்சிகளின் அலுவலகங்களின் மின்சார கட்டணமும் செலுத்தப்படாமல் பெருந்தொகை நிலுவை உள்ளதாக தெரிகிறது. சாதாரண மக்கள் சில ஆயிரம் மின்கட்டணம் செலுத்தாத போது, மின் இணைப்பை துண்டித்து அபராதமும் விதிக்கும் மின்சாரசபையினர் அதிகாரத்தில் உள்ளவர்களிற்கு ஒரு சட்டத்தையும், சாதாரண மக்களிற்கு ஒரு சட்டத்தையும் நடைமுறைப்படுத்துகிறார்களா என்ற கேள்வி எழுகிறது.

# நல்லிணக்கத்திற்கு உதவிய பணி; பாலமாக செயற்படும் உலகத்தமிழர் பேரவை!
### வெளிவிவகார அமைச்சர் பாராட்டு

இலங்கை மக்களிற்கும் புலம்பெயர்ந்த தமிழர்களிற்குமிடையில் தொடர்பை ஏற்படுத்தும் பாலமாக உலகத்தமிழர் பேரவை செயற்படுவதாக கூறியுள்ளார் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க. இலங்கையில் சமாதானம் ஏற்படுத்தப்பட்டு, நிலைபேறான வாழ்க்கை கட்டியெழுப்பப்படுவதில் புலம்பெயர்ந்தவர்களின் பங்களிப்பு அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளார். இலங்கையில் மருத்துவ உதவிகள் செய்வதற்கு விஜயம் செய்த புலம்பெயர் தமிழர்களின் மருத்துவகுழுவிற்கு பாராட்டு தெரிவிக்கும் போதே இதனை தெரிவித்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட களுத்துறை, மாத்தளை மாவட்டங்களை சேர்ந்த மக்களிற்கு புலம்பெயர்ந்த தமிழ் மருத்துவ நிபுணர்கள் சேவை வழங்குவதற்காக விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர். ஐக்கிய இராச்சியம், நோர்வே, கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, பஹ்ரைன், பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய பல்வேறு நாடுகளிலுள்ள தமிழ் மருத்துவ நிபுணர்கள், உள்ளூர் மருத்துவ நிபுணர்களுடன் இணைந்து இந்த மருத்துவசேவையை செய்திருந்தனர். சர்வோதய சிரமதான இயக்கம் இந்த முயற்சிக்கு உறுதுணையாக இருந்தது.

ஜூலை முதல் வாரத்தில் களுத்துறையிலும், அதை தொடர்ந்து மாத்தறை மாவட்டத்திலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்கள், மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள முகாம்களில் இந்த மருத்துவசேவை நடத்தப்பட்டது. பத்து நாட்கள் நடந்த மருத்துவ சேவையால் சுமார் 780 பேர் பயனடைந்துள்ளனர். 300 மூக்கு கண்ணாடிகள் மற்றும் சூரியக்கண்ணாடிகளும் வைத்தியர்களால் வழங்கப்பட்டது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு தன்னார்வ சேவையை வழங்க முன்வந்த சர்வோதயம் இயக்கத்திற்கும், புலம்பெயர் தமிழ் மருத்துவ நிபுணர்களிற்கும் கடந்த ஜூலை 11ம் திகதி வெளிநாட்டு அமைச்சில் பாராட்டு வைபவமொன்றும் நடந்தது. வெளிநாட்டு அமைச்சர் ரவி கருணாநாயக்க, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, நிதி அமைச்சர் மங்கள சமரவீர, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர். அத்துடன் சர்வதேச தொண்டு நிறுவன பிரதிநிதிகளும், பலநாட்டு தூதரக அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

# பிள்ளைகளிற்காக எதையும் செய்ய துணிந்த விவசாயி
### கடைசி சொத்தை 350 ரூபாவிற்கு விற்றார்

நாட்டில் நிலவும் வரட்சியால் விவசாயிகள் எவ்வளவு பாதிப்படைந்துள்ளனர் என்பதை உணர்த்தும் சம்பவமொன்று நடந்துள்ளது. பிள்ளைகளின் பசியை தீர்ப்பதற்காக தன்னிடம் எஞ்சியிருந்த ஒரேயொரு பெறுமதியான பொருளான வெட்டுக்கத்தியை குறைந்த விலைக்கு விற்பனை செய்த சம்பவம் தொடர்பான செய்தி வெளியாகியுள்ளது.

அனுராதபுர மாவட்டத்தில் கடும் வரட்சி நிலவுகிறது. கடந்த நான்கு போகங்களாக பல விவசாயிகளின் பயிர்கள் அழிந்துள்ளன. இதனால் விவசாயிகள் என்றுமில்லாத வகையில் பாதிக்கப்பட்டுள்ளனர். அனுராதபுரம் விளச்சிய பிரதேசத்தை சேர்ந்த விவசாயியொருவர் பிள்ளைகளின் பசியை போக்க பெரும் சிரமப்பட்டு வந்துள்ளார். அண்மையில், தன்னிடமிருந்த ஒரேயொரு பெறுமதியான பொருளான வெட்டுக்கத்தியை விற்பனை செய்ய முயன்றுள்ளார். அதன் பெறுமதி எண்ணூறு ரூபாயென்றபோதும், முன்னூற்றைம்பது ரூபாய்க்கே விற்பனை செய்துள்ளார்.

விவசாயின் நிலைமையை அறிந்த வர்த்தகர், பணத்தை கொடுத்து கத்தியையும் திரும்ப ஒப்படைத்துள்ளார். எனினும், கத்தியை வர்த்தக நிலையத்திலேயே வைத்துவிட்டு விவசாயி சென்றுவிட்டார்.

# "கதைப்பதென்றால் வெளியில் போங்கள்"
### ரஞ்சனை மிரட்டிய ரணில்

அரசாங்கத்தை விமர்சிப்பதாயின் அரசாங்கத்தை விட்டு வெளியேறிச் செல்லுங்கள் என பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு கடும்தொனியில் எச்சரிக்கை விடுத்துள்ளார் பிரதியமைச்சர் ரணில் விக்கிரமசிங்க. கொழும்பு ஹில்டன் விடுதியில் நடந்த ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கம் கள்வர்களை பாதுகாக்கிறதென ரஞ்சன் ராமநாயக்க அண்மையில் பகிரங்கமாக குற்றம்சாட்டியிருந்தார். ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டவர்கள் தொடர்பில் தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகளை ரஞ்சன் ராமநாயக்க தொடர்ந்து விமர்சனம் செய்து வருகிறார். அவரது நடவடிக்கைகள் கட்சிக்குள் பலத்த எதிர்ப்பை கிளப்பி வருகிறது. அண்மையில் கட்சியின் செயற்குழு கூட்டத்திலும் பிரதமர் தனது அதிருப்தியை வெளியிட்டிருந்தார்.

இந்தநிலையில், அண்மைய கூட்டத்தில் ரஞ்சன் ராமநாயக்க தொடர்பில் வெளிப்படையாக பிரதமர் எச்சரிக்கை செய்துள்ளார். "நான் கள்வர்களை காப்பாற்றுவதில்லை. எனது கட்சித்தலைமை மீது நம்பிக்கையில்லாவிட்டால் தயவுசெய்து வெளியேறிச் செல்லவும். வெளியில் இருந்து யாரையும் விமர்சிக்கலாம். ஆளுங்கட்சிக்குள் இருந்துகொண்டு அரசாங்கத்தை விமர்சிக்க முடியாது" என்றுள்ளார்.



# ஊழல் சாம்ராஜ்ஜியமாகும் மட்டக்களப்பு!

## அரச அதிபருக்கும் பங்கா?

## அதிரவைக்கும் ஆதாரங்கள்!!

இன்போர்மர் இசக்கி

இந்த நாட்களில் மட்டக்களப்பு என கூகிள் பண்ணினாலே ஊழல் பற்றிய செய்திகள்தான் வரிசையாகவந்துகொண்டிருக்கின்றன. சமூக வலைத்தளங்களிற்குள் நுழைந்தால், அங்கும் இதே கதைதான். மட்டக்களப்பை ஊழல் பெருச்சாளிகள்தான் நிர்வகிக்கிறார்கள் என்பதை போன்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இங்கு பகிரப்படும் தகவல்களை பார்த்தால், தலை சுற்றும். கிணற்றைக் காணவில்லையென வடிவேல் தேடித்திரிந்ததெல்லாம் சின்ன விடயம். மட்டக்களப்பில் இருப்பவர்கள் மலைவிழுங்கிகள் என்கின்றன இணைய உலகம்.

இணையங்கள் சொல்வது உண்மையா? மட்டக்களப்பில் என்ன நடக்கிறது? யார் யார் ஊழல் செய்கிறார்கள்? இந்த தகவல்களை அறிவதற்காக களமிறங்கினோம். நமக்கே தலைசுற்ற தொடங்கி விட்டது. முழித்திருக்க முழியை தோண்டுவதென்பார்களே... அப்படி தலைசுற்ற வைக்கும் ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகங்கள் நடந்துள்ளன.

**மகிந்த அணி ஆதரவாளர்கள் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிற்கு நிவாரணப்பொருட்களை வழங்கிய செய்திகள் வெளியாகியிருந்தன. இந்த நிவாரணப்பொருட்களில் ஒரு பகுதி மாவட்ட செயலகத்தின் வெள்ள நிவாரண நிதியில் கொள்வனவு செய்யப்பட்டவை.**

மாவட்ட நிர்வாகம் ஊழல் செய்கிறது என இணையத்தளம் முழுக்க நிறைந்துள்ள குற்றச்சாட்டுக்களில் சிலவற்றிற்கான ஆதாரங்களை தீபம் சேகரித்துள்ளது. சற்றும் அனுமதிக்க முடியாத ஊழல்கள் அவை. மாவட்ட அரசஅதிபரே இதற்கு பொறுப்பு கூற வேண்டியவர், அவர் மீதே குற்றச்சாட்டுக்கள் குவிந்துள்ளன என்பதே அதிர்ச்சியானது.

இந்த ஆவணங்களை சேகரிப்பதில் நிறைய சிரமங்கள் இருந்தன. பரந்து விரிந்த மட்டக்களப்பு மாவட்டத்தின் எந்த மூலையில் ஒரு அதிகாரியை, உத்தியோகத்தரை சந்தித்தாலும், யாரோ ஒரு "பிக்பொஸ்" உடைய கண் இரகசியமாக தம்மை கண்காணித்துக் கொண்டிருப்பதாக அஞ்சுகிறார்கள்.

### வெள்ள நிவாரண முறைகேடு

இது மாவட்டத்தில் உள்ள தலையாய முறைகேடுகளில் ஒன்று. 2014 டிசம்பரில் மட்டக்களப்பில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டது. மாவட்டத்தில் உள்ள 14 பிரதேசசெயலாளர் பிரிவிலும் பாதிக்கப்பட்ட மக்களிற்கு நிவாரணமளிப்பதற்காக மாவட்ட செயலகத்திற்கு நிதியனுப்பப் பட்டது. 14 பிரதேசசெயலாளர் பிரிவில்தான் பாதிக்கப்பட்ட மக்கள் உள்ளனர். நிவாரணம் அவர்களிற்குத்தான் பிரிக்கப்பட்ட வேண்டும். 15 ஆவது பிரிவாக மக்கள் கிடையாது. ஆனால் வெள்ள நிவாரண நிதி 14 பிரிவிற்கும் முழுமையாக பிரித்தளிக்கப்படவில்லை. ஒரு தொகுதி நிதி மாவட்ட செயலகத்தில் வைக்கப்பட்டது. அந்த நிதியில் நிவாரணப் பொருட்கள் நகரத்திலேயே கொள்வனவு செய்யப்பட்டு, 14 பிரதேசசெயலாளர் பிரிவிலுமுள்ளவர்களிற்கு நிவாரணம் வழங்கப்பட்டது. இது, முறையாக திட்டமிடப்படாத நடவடிக்கை. ஒருவருக்கு இரண்டுமுறை உதவி கிடைக்கவும், சிலரிற்கு கிடைக்காமல் போகவும் வாய்ப்புண்டு.

அரச சுற்றுநிருபத்தின்படி பிரதேச செயலாளரிற்கு நிவாரணப்பணிகளிற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சமைத்த உணவு மூன்றுநாள் வரை கிராம உத்தியோகத்தர் கொடுக்கலாம். ஏழுநாள் வரை பிரதேசசெயலாளர் கொடுக்கலாம். இதைவிட அதிகமான நாட்கள் கொடுப்பதென்றால்தான் அரசாங்க அதிபரின் அனுமதியை பெற்று, பிரதேசசெயலாளர் வழங்க வேண்டும்.

பிரதேசசெயலகங்களிற்கு ஒதுக்கப்பட்ட பணம் போதாமல் இருந்ததால், மாவட்ட செயலகத்திடம் பிரதேசசெயலாளர்கள் கேட்டுள்ளனர். அவர்களின் கோரிக்கைப்படி பணம் வழங்கப்படாமல், தேவையான பொருட்களின் விபரத்தை தருமாறு மாவட்ட செயலகத்திலிருந்து பதில் அனுப்பப்பட்டுள்ளது. அப்பொழுது கடுமையான வெள்ளப்பெருக்கு எற்பட்டதால் பல வீதிகள் துண்டிக்கப்பட்டிருந்தன. சில வீதிகள் மோசமாக பாதிக்கப்பட்டிருந்தன. நகரத்திலிருந்து பொருளாக தாராமல், பணமாக தந்தால் உள்ளூரிலேயே அரச நிறுவனங்களில் கொள்வனவு செய்யலாமென நகரத்தைவிட்டு தொலைவில் இருந்த பிரதேசசெயலாளர்கள் கேட்டுள்ளனர். எனினும், நகரை அண்டிய தனியார் வர்த்தக நிலையங்களிலேயே பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

இதேசமயத்தில் ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்த சமயத்தில் விநாயகமூர்த்தி முரளிதரன், சாணக்கியன், ஹிஸ்புல்லா போன்ற அப்போதைய மகிந்த அணி ஆதரவாளர்கள் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிற்கு நிவாரணப்பொருட்களை வழங்கிய செய்திகள் வெளியாகியிருந்தன. இந்த நிவாரணப்பொருட்களில் ஒரு பகுதி மாவட்ட செயலகத்தின் வெள்ள நிவாரண நிதியில் கொள்வனவு செய்யப்பட்டவை.

ஜனாதிபதி தேர்தலிற்கு ஒருசில நாட்களின் முன்னர் மாவட்ட செயலகத்தில் இருந்து பிரதேசசெயலகங்களிற்கு ஒரு அறிவித்தல் பறந்தது. நிவாரணப் பொருட்களாக வழங்கப்பட்ட பாய், படுக்கை விரிப்புக்கள் மாவட்டசெயலக நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டதால், அதற்கான கையெழுத்துக்களை வாங்குங்கள் என்பதே அந்த அறிவித்தல். பிரதேசசெயலாளரிடம் வழங்கப்பட்டு, அவரால் நிவாரணமாக வழங்கப்பட்டதாகவே பதிவுகள் அமைய வேண்டும், தப்பித்தவறியும் அரசியல்வாதிகளால் வழங்கப்பட்டதாக பதிவுகள் அமையக் கூடாதென்பதற்காகவே இந்த ஏற்பாடு.

ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ச தோல்வியடைந்ததும், அரசியல்வாதிகளால் வழங்கப்பட்ட நிவாரணப்பொதிகளிற்கான விபரங்களை உடனடியாக தருங்கள் என மாவட்ட செயலாளர் தனக்கு கீழ் பணியாற்றிபவர்களிற்கு அடுத்த அவசர உத்தரவு பிறப்பித்தார். இந்த பொதியொன்று மூவாயிரம் ரூபா குறிக்கப்பட்டிருந்தது. அதில், 5 கிலோ அரிசி, ஒரு கிலோ பருப்பு, ஒரு கிலோ கருவாடு, இரண்டு மின் ரின் என்பன இருந்தன. இந்த பொதிகள் பற்றிய விபரம் பிரதேசசெயலகங்களில் திரட்டப்படாமல், இத்தனை பொதிகளிற்கு விபரம் தாருங்கள் என்ற ரீதியிலேயே மாவட்ட செயலகத்திலிருந்து விபரம் கோரப்பட்டுள்ளது. இதனால், பொதி எண்ணிக்கை கணக்கினூடாக மோசடி நடந்திருக்க வாய்ப்புண்டு.

எனினும், தேர்தல் பிரசாரத்தில் அரசியல்வாதிகளால் வழங்கப்பட்ட நிவாரணங்களை, முறைப்படி அரச நிர்வாகத்தினால் வழங்கப்பட்டதாக மாவட்ட செயலகத்தால் விபரம் சேகரிக்க முடியவில்லை. வி.முரளிதரன், ஹிஸ்புல்லாஹ் நிவாரணம் வழங்கியதாகவே பதிவுகள் இருந்துள்ளன. இந்த விபரங்களை வைத்து மாவட்ட செயலகத்தால் பணம் வழங்க முடியாது. எனினும், மாவட்ட செயலகத்தால் போலியான ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு பணம் வழங்கப்பட்டு கணக்கு முடிக்கப் பட்டுள்ளது. போலியான ஆவணம் எப்படி தயார் செய்யப்பட்டது? பிரதேசசெயலகத்தில் மூலப்பிரதி இருக்கும்போது, அதில் மாற்றங்கள் செய்த பிரதி மூலம் மாவட்ட செயலகத்தில் கணக்கை முடித்ததற்கு உடந்தையாக இருந்தது யார் என்பது விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதி தேர்தல் சமயத்தில் இந்த சம்பவம் நடந்தது. மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலராக கடமையாற்றும் அரசஅதிபர், எந்த வேட்பாளர் அல்லது கட்சி சார்பானவராக நடக்க முடியாது. ஆனால் மட்டக்களப்பு அரச அதிபர் திருமதி சார்ள்ஸ் தனது அரச வாகனம், ஆளணி, மாவட்ட வெள்ள நிவாரண நிதியை ஒரு கட்சி வேட்பாளர் சார்பாக பயன்படுத்தியிருக்கிறார். இது தேர்தல் விதிமீறல்.

அடுத்ததாக, தேர்தல் பிரசார இடங்களில் வழங்கப்பட்ட பொருட்களிற்கான பட்டியலின் அடிப்படையில், மாவட்ட செயலக நிவாரண கணக்கை முடிப்பது குற்றம்.

வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களிற்காக ஒதுக்கப்பட்ட பணம், உரிய முறையில் செலவிடப்படவில்லை. தேவையான பயனாளிக்கு சேர்ந்தது தொடர்பில் உரிய பதிவுகள் இல்லை.

- பிரதேசத்தில் - அரசியல்வாதியால்
- பெறுமதியான - பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன என்ற பதிவுதான் உள்ளது. யாருக்கு வழங்கப்பட்டதென்ற விபரம் இல்லை.

இவை மோசமான குற்றச்செயல்கள்.

(இன்னும் வரும்)

## குறுக்குவழியில் நுழைந்த நீதியமைச்சர்!

ஐக்கிய நாடுகள்சபையின் மனிதஉரிமைகள் மற்றும் பயங்கரவாதம் தொடர்பான விசேட பிரதிநிதி பென் எமர்சன் கடந்த வாரம் இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு புறப்பட்டு சென்றார். யுத்தத்தின் பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்த சர்வதேச பிரதிநிதியொருவர் மிகக்கசப்பான அனுபவத்தை சந்தித்த அனுபவம் இது.

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்சவுடனான சந்திப்பின் இடையிலிருந்து பென் எமர்சன் வெளியேறி சென்றார். மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த வெளிநாட்டு பிரதிநிதிகள் பலர் கிட்டத்தட்ட அரசுடன் மோதல் போக்கை கடைப்பிடித்தனர். அவர்களின் ஒவ்வொரு சொல், செயலும் அரசிற்கு நெருக்கடியை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது. ஆனால், பென் எமர்சன் விஜயதாச சந்திப்பை போன்று ஒன்று நடந்ததில்லை.

பென் எமர்சன் வைத்த குற்றச்சாட்டுக்கள் ஒன்றும் இன்று நேற்று வைக்கப்பட்டவையல்ல. காலம்காலமாக இலங்கை மீது வைக்கப்பட்டு வருபவைதான். இந்த குற்றச்சாட்டுக்களின் மீதுதான் யுத்தத்தின் பின்னரான இலங்கை தொடர்பான சர்வதேச அரசியல் கட்டியெழுப்பப் பட்டுள்ளது. இனமோதலின் இறுதியில் நிகழ்ந்த மனிதஉரிமை மீறல்கள், யுத்தக்குற்றங்கள், யுத்தத்துடன் தொடர்புபட்ட தடுத்து வைத்தல், காணாமல் போனவர்கள் பற்றிய வெளிப்படைத்தன்மை, விசாரணை, பொறுப்புக்கூறல் என்பவைதான் அந்த அரசியலின் உள்ளடக்கம். இந்த அரசியல்தான் இலங்கையில் ஆட்சி மாற்றத் தையும் நிகழ்த்தியது.

மஹிந்த ராஜபக்சவின் ஆட்சி தொடர்வது பிராந்திய, சர்வதேச அரசியல் நலன்களிற்கு உகந்ததல்ல என உலகின் சக்திமிக்க நாடுகள் கருதியதால், இலங்கை தொடர்பான மேற்குறிப்பிட்ட அரசியலை கட்டியெழுப்பினார்கள். இந்த அரசியலின் தத்துப்பிள்ளை தான் இன்றைய ஆட்சி. யுத்தத்தின் பின் தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சனைகளை முன்வைத்து உருவாக்கப்பட்ட "தத்துப்பிள்ளை"கள் கடந்த ஆட்சியாளர்களை போல செயற்பட முடியாது. என்னென்ன பிரச்சனைகளை முன்வைத்து உருவாக்கப்பட்டதோ, அதேவிதமாக புதிய ஆட்சியாளர்கள் செயற்பட முடியாது. அப்படி செய்வார்களெனில் அது வாக்களித்த மக்களை ஏமாற்றும் செயல்.

**தீபம்**

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்
(கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிட தொகுதி)
ஆசிரியர்பீடம்: 0214927562
அலுவலகம்: 0214927561
விநியோகம்: 0214927542
விளம்பரம்: 0768255560, 0768255567
செய்திகளிற்கு: deepamdesk@gmail.com

இந்த சர்வதேச அரசியல் கத்திமுனையில் நடப்பதை போன்ற ஒரு சவாலை உள்நாட்டில் ஏற்படுத்துமென்பது உண்மைதான். இந்த அரசியலின் உள்ளடக்கம் உள்நாட்டில் வேறுவிதமாக நோக்கப்படும் அபாயமும் உள்ளதுதான். மஹிந்த ராஜபக்ச இதை தற்போது வெற்றிகரமாக அறுவடை செய்ய ஆரம்பித்துள்ளார். ஆனால் உள்நாட்டு சவாலை காரணமாக காட்டி, பொறுப்புக்கூறலில் இருந்து இந்த ஆட்சியும் தப்பித்து நடக்குமெனில், எதற்காக மக்கள் மஹிந்த ராஜபக்சவின் ஆட்சியை மாற்ற விரும்பினார்கள்?

உள்நாட்டு சவால்களை சமாளிக்க விஜயதாச ராஜபக்ச தன்னை யொரு தீவிர சிங்கள தேசியவாதியாக இனம்காட்ட ஆரம்பித்து பல மாதங்களாகி விட்டது. கிழக்கில் பௌத்த பிக்குகளின் நடவடிக்கை இனங்களிற்கிடையில் பதற்றத்தை ஏற்படுத்திய சமயத்தில், நீதியமைச்சர் பௌத்த பிக்குகளை சந்தித்திருந்தார். அதன்பின்னர் நீதியமைச்சரின் நடவடிக்கைகள் பௌத்த பிக்குகளை அனுசரித்து. அவர்களை மகிழ்விப்பதாகவே அமைந்து வருகிறது. நீதியமைச்சரோ அல்லது வேறெந்த பொறுப்பான அரச தலைவரோ பௌத்த பிக்குகளையோ அல்லது வேறெந்த மத துறவிகளையோ அனுசரித்து நடப்பதில் எந்த பிரச்சனையுமில்லை. ஆனால், பௌத்த பிக்குகளின் நடவடிக்கைகள் நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்தி, இனங்களிற் கிடையில் பகைமையை தூண்டும் சந்தர்ப்பங்களில், குறிப்பிட்ட ஒரு தரப்பை மட்டும் அனுசரித்து செல்வது மிக மோசமான செயல். அது அநீதியானதென்பதில் இரண்டு கருத்து இருக்க முடியாது.

இன்று பௌத்த பிக்குகளில் ஒரு தரப்பினரின் நடவடிக்கைகள் நாட்டின் பன்மைத்துவம், மத சுதந்திரம், நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு குந்தகம் ஏற்படுத்துவதாக இருக்கிறது என்பதை குறிப்பிடுவதில் எமக்கு எந்த தயக்கமும் இல்லை. இந்த சமயத்தில் நீதியமைச்சர் எனப்படுபவர், நாட்டின் நீதியமைச்சராகத்தான் இருக்க முடியும். பன்மைத்துவ நாட்டில் எல்லா சமூகங்களின் நீதியமைச்சராகவே செயற்பட முடியும்.

இரண்டு இனங்கள் தொடர்புபட்ட சிக்கல்களில் நீதியும், உண் மையும் இரண்டு நோக்குநிலைகளையுடையது. நீதியமைச்சர் இரண்டு உண்மைகளிற்கிடையிலும் சமன்பாட்டை கண்டறிபவராக இருக்க வேண்டும். ஆனால் விஜயதாசா ராஜபக்சவின் அண்மைய செயற்பாடுகள் அப்படியானவையா என்பது தெரியவில்லை. அவர் பௌத்த, சிங்கள தீவிர மனங்களை திருப்திப்படுத்த முனைகிறார் போல தெரியாது. தற்போது அதை மஹிந்த ராஜபக்ச செய்வதற்கும், விஜயதாச ராஜபக்ச செய்வதற்குமிடையில் வித்தியாசமுள்ளது. விஜயதாச அங்கம் வகிப்பது அரசில். அவர் நீதியமைச்சர்.

பௌத்த, சிங்கள தீவிர மனங்களை திருப்திப்படுத்தி னால்தான் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் சாத்தியம். பொறுப்புக்கூறல் என்பது நாட்டிற்கோ, படை யினருக்கோ ஆபத்தில்லாதது என்பதை புரியவைக்க இப்படியான பாத்திரத்தை விஜயதாச ஏற்றுள்ளார் என்ற அபிப்பி ராயமும் உள்ளது. ஆனால்,நல்லி ணக்கத்திற்கு குறுக்குவழிகள் கிடையாதென்பதுதானே யதார்த்தம்!




# வீரமுனை படுகொலைக்கு நீதி தருவது யார்?

✎ மணலாறு விஜயன்

*வீரமுனை தமிழ்கிராமம் இன்று அந்த மக்களிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டது. 1945ம் ஆண்டிலிருந்து 1991ம் ஆண்டுவரை சிங்கள இராணுவத்தி னராலும்முஸ்லீம்களாலும்தொடர் தாக்குத லுக்குள்ளாகி ஆக்கிரமித்து அழிக்கப்பட்டு விட்டது.*

*1945ம் ஆண்டு முஸ்லீம் காடை யர்கள் இந்த கிராமத்தை இரத்தக் களறியாக் கினார்கள். வாள் வெட்டுக்கும், கத்தி வெட்டுக்கும் அஞ்சிய தமிழ்க்குடும்பங்கள் வீரச்சோலை, வளதாப்பிட்டிய, மல்லிகைத்தீவு, மல்வத்தை போன்ற கிராமங்களிற்கு குடிபெயர்ந்தனர்.*

*பின்னர், கொண்டவெட்டுவான் இராணுவ முகாமும் இக்கிராமத்தைச் சூழ இருந்த முஸ்லீம் கிராமங்களும் தமிழர்களுடன் மோதலில் ஈடுபட்டனர்.*

*1990 ம் ஆண்டு ஆனிமாதம் 20ம் திகதி வீரமுனை, வளத்தாப்பிட்டிய, வீரஞ் சோலைக் கிராமங்கள் சுற்றிவளைக்கப் பட்டன. மக்களெல்லோரும் வீரமுனைக் கோயிலடிக்கு செல்லுமாறு கட்டளை யிட்டனர். ஒருசில நாட்களின் முன் கல்முனையில் தமிழர்கள் கொல்லப் பட்டதையறிந்த மக்கள் அச்சத்துடன் ஆலயத்தில் ஒன்று கூடினர்.*

*ஆலயத்தில் வைத்தே கொல்வதற்குரிய வர்களை தெரிவு செய்தார்கள். முதற்கட்ட மாக ஐம்பத்தியாறு ஆண்கள் தெரிவு செய்யப்பட்டனர். சம்மாந்துறை மலைக்காட்டிற்குள் தீ பற்றி எரிந்தது. கைதுசெய்யப்பட்டிருந்தவர்களை சுட்டுச் சுட்டு நெருப்புக்குள் தூக்கி வீசினார்கள்.*

*29ம் திகதி மீண்டும் கைது. எச்சஞ் சொச்சமாயிருந்த ஆண்களில் ஐம்பத்தி யாறுபேரை துப்பாக்கிமுனையில்தள்ளிச் சென்றார்கள். கொண்டைவெட்டுவானில் பெரு நெருப்பெரிந்தது. சுட்டுச்சுட்டு நெருப்புக்குள் எறியப்பட்டார்கள்.*

*கையில் தூக்கிய பொருட்களோடு காரைத்தீவிற்குத் தப்பியோடினார்கள். காரைத் தீவுப் பாடசாலை அகதிமுகாமா கியது. அகதிமுகாமில் வைத்துக் கொலை செய்வதற்குரிய ஆண்களை தெரிந்தெடுத் தார்கள்.*

*இம்முறை காரைத்தீவு விசேட அதிரடிப் படையினர் தங்கள் கைவரிசையினைக் காட்டினார்கள். ஒரு மாதங்கூட மறைய வில்லை ஆடிமாதம் 4ம் திகதி. முதல் தெரிவில் பன்னிரெண்டு ஆண்கள் கைது செய்யப்பட்டனர். ஓரிருநாள் கழித்து படை முகாமுக்குச் சென்ற தாய்மாருக்கு படையினர் கொடுத்த பதில் விசித்திர மானது.*

*பாடசாலையிலிருந்த அகதிமுகாமுக்குள் மீண்டும் 10ம் திகதி விசேட அதிரடிப் படையினர் புகுந்தனர். பதினொரு ஆண்கள் பிடிக்கப்பட்டனர். எஞ் சியிருந்த ஆண்கள் இவ்வளவுதான். எச்சசொச்சமின்றி எல்லோரையுமே கொண்டுபோய் சுட்டுவிட்டு எரித்தார்கள்.*

*1990ம் ஆண்டு ஆடிமாதம் கணவன் மாரைப் பறி கொடுத்த துயரோடு காரைதீவு அகதிமுகாமிலிருந்து தமது கிராமத்துக்கு திரும்பினார்கள். யாரைப்பறி கொடுக்கக் கூடாதென்று காரைதீவுக்கு ஓடினார்களோ அவர்களைக் காரைதீவில் பறிகொடுத்துவிட்டதால் இனிமேல் எது நடந்தால் என்ன என்ற விரக்தியோடு திரும்பினார்கள்.*

*வரும் வழியில் மல்வத்தை இராணுவ முகாமிலிருந்த இராணுவத்தினர் தமது கொலைப்பசியையும் தீர்க்க விரும்பினர். நடந்துவந்தவர்களில் எட்டுப்பேரைப் பிடித்திழுத்துச் சென்றனர்.*

*26ம் திகதி கொண்ட வெட்டுவான் படை முகாமிலிருந்து வந்த படையினர் மல்வத்தை வீரமுனை கலைதிபுரம் புதுநகர் கிராமங்களிலிருந்து எட்டுப்பேரை கைது செய்து சென்றார்கள்.*

*இன்றுவரை அவர்களின் கதையில்லை. மரண அத்தாட்சிக்கு இராணுவத்தினர் கிராமசேவகர்களுக்கு அனுமதி வழங்கிய போதுதான் முடிந்துபோன இவர்களின் கதையும் தெரியவந்தது.*

*ஆனிமாதம் ஆரம்பித்தஇன அழிப்பு ஆடி மாதமும் தொடர்ந்து. ஆவணிமாதத்தில் உச்சக்கட்டத்தை அடைந்தது. ஆவணி மாதம் 8ம் திகதி சிங்களப் படையினருடன், சிங்கள ஊர்காவல்படையினரும் முஸ்லீம் ஊர்காவல்படையினரும் ஓடி ஒழிந்து வாழ்ந்த ஆண்களில் எட்டுப்பேரினைக் கைதுசெய்து கண்டதுண்டமாக வெட்டிக் கிணற்றில் போட்டார்கள்.*

*வீரமுனையிலோ வளத்தாப்பிட்டி யிலோ அல்லது மல்வத்தையிலோ இனிமேல் வாழமுடியாது எனக்கருதிய எமது மக்கள் மண்டூருக்குச் சென்று வாழவிரும்பி கையில் தூக்கிய பொருட்களோடு நடந்தார்கள்.*


*11ம் திகதி சவளைக்கடை இராணுவ முகாமில் அவர்கள் தடுத்து நிறுத்தப்பட் டார்கள். வீதியில் முகாமுக்கு முன்னால் வைத்தே பதினெட்டுப்பேரை வெட்டிக்கொன்றார்கள்.*

*தப்பி ஓடிய மக்கள் மீண்டும் தங்கள் கிராமத்துக்கே வந்து சேர்ந்தனர். சவளைக்கடை இராணுவத்தினரும் தமிழர் களைக் கொல்வதில் தாங்களும் சளைத்தவர் களல்ல என்பதைக் காட்டினார்கள்.*

*கொண்டவெட்டுவான் படையினர் 12ம் திகதி இக்கிராமங்களுக்குள் புகுந்தார்கள். முஸ்லீம் காடையர்களும் துணைக்கு வந்தனர். வீடுகள் தீயிடபட்டன. சொத் துக்கள் சுறையாடப்பட்டன. தப்பி ஓடிய வர்கள் துப்பாக்கிசூட்டுக்கு இலக்காகினர். இருபத்தைந்துபேர் மடிந்தனர்.*

*காயங்களோடு அம்பாறை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட முப்பதுபேரைக் கூட இராணுவத்தினர் விடவில்லை.*

*வைத்தியசாலையை 12ம் திகதி சுற்றிவளைத்து காயமுற்று படுக்கையிலிருந்த அத்தனை பேரையும் தூக்கி ஏற்றிச் சென்று கொன்றனர். நாட்கணக்கில் வாரக்கணக்கில் மாதக்கணக்கில் தொடர்ச்சியாக நடந்துமுடிந்த வீரமுனைக் கிராமமக்களின் துயரக்கதைக்கு நீதி தருவது யார்?*



# ஈ.பி.ஆர்.எல்.எவ் பற்றி பேச சரவணபவனிற்கு தகுதியுண்டா?

**ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் சிவசக்தி ஆனந்தனின் மாற்றுத்தலைமை குறித்த கருத்தை தொடர்ந்து தமிழரசுக்கட்சியின் ஈ.சரவணபவன் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கையின் எதிர்வினையாக இந்த கட்டுரை. தமிழர்களின் அரசியல் போராட்டம், கடந்தகால கசப்பான அனுபவங்கள், தற்போதைய அரசியல், மாற்றுத்தலைமை குறித்த விரிவான உரையாடலை ஆரம்பித்து வைக்குமென்ற நம்பிக்கையுடன் கட்டுரையை பிரசுரிக்கிறோம். இந்த உரையாடலில் பங்குபற்ற விரும்புபவர்கள், உங்கள் கருத்துக்களையும் பதிவுகளையும் அனுப்பி வையுங்கள்.**

**- ஆர்**

தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அண்மையில் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். சிவசக்தி ஆனந்தன் எம்.பி மாற்றுத்தலைமை தேவையென கூறியதை வன்மையாக கண்டிப்பதாக கூறி, ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சி மீதும் கறாரான கருத்துக்களையும் வெளியிட்டிருந்தார். அதில் சரவணபவன் ஒரு கேள்வியை எழுப்பியிருந்தார். அரசியல் தலைமைகளை குறை கூறுவதற்கும், மாற்று தலைமை பற்றி பேசுவதற்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சிக்கோ, சிவசக்தி ஆனந்தனிற்கே எந்த தகுதியாவது இருக்கிறதா என்பதே அந்த கேள்வி.

2009 இன் பின்னர் தமிழர்களின் அரசியலே வேடிக்கை வினோத அரசியலாகி விட்ட பின்னர், இப்படியான வேடிக்கை வினோத கேள்விகளையும் நாம் எதிர்கொண்டுதான் ஆக வேண்டும்.

தமிழர்களின் அரசியல் போராட்டத்தில் ஒரு துரும்பு தன்னையும் தூக்கிப்போடாத, வர்த்தகர் சரவணபவன் இந்தக்கேள்வியை கேட்கிறார். தலைவர் பிரபாகரன் தீர்க்க தரிசி. அதனால்தான் தனது மூத்த போராளி களையெல்லாம் மே 18ம் திகதி தெளிவான முடிவெடுக்க வைத்தார். அவர்களில் யாராவது இன்று இருந்திருந்தால், போராட்டகாலத்தில் ஒரு கறுப்புக்கொடி கட்டவே ஓடிஒளிந்தவர்கள், மக்கள் போராடிக் கொண்டிருக்க எள் எண்ணெய் எரித்துக் கொண்டிருந்தவர்களின் பேச்சை யெல்லாம் கேட்க வேண்டியிருந்திருக்கும்.

எங்களது சமூகத்தின் பொது இயல் பொன்று உள்ளது. எதிலும் ரிஸ்க் எடுக்க மாட்டார்கள். முடியுமானால் மற்றவனை உசுப்பேற்றிவிடுவார்கள், அல்லது பார்த்துக்கொண்டிருப்பார்கள். அதாவது, பிள்ளைகளிற்கு ரணிலின் அலுவலகத்தில் வேலையும் தேவை, தமிழீழமும் தேவை. அப்படியானால்யார் போராடி தமிழீழத்தை எடுத்து தருவார்களாம்? அதற்குதானே ஊரான் பிள்ளை இருக்கிறார்கள்!. பின்னர் நல்ல வக்கணையாகவும் பேசுவார்கள். இந்த மரபின் அசல் தொடர்ச்சிதான் நமது அரசியல்வாதிகள். இப்போது வக்கணை யாக பேசும் தமிழரசுக்கட்சியினர்தான் இந்த இயல்பின் அசல் பிரதிகள். ஆனால் ஒப்பீட்டளவில் ஆயுதஇயக்க பாரம் பரியத்தில் இருந்து வந்தவர்கள் சற்று மாறுபட்டவர்கள்.

சரியோ, பிழையோ எல்லா விமர்சனங் களிற்கும் அப்பால் அவர்கள் ஒரு இலட்சி யத்துடன் புறப்பட்டவர்கள். தமிழர் களின் விடிவிற்காக உயிரையும் விட துணிந் தவர்கள். அப்படித்தான் வாழ்ந்தார்கள். ஆனால் இடையில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களால் அவர்கள் புலிகளுடன் முரண்பட்டார்கள். அதொரு கசப்பான அனுபவம். அந்த சம்பவத்திற்கான பழியை தற்போதுள்ள புலிகள் தவிர்ந்த மற்றைய இயக்கங்கள் மீது மட்டுமே போடுவது, வரலாற்றை அறியாதவர்களின் சிறுபிள்ளைத்தனம். கடந்தகால கசப்பான சம்பவங்களில் தமக்குமிருந்த பொறுப்பை உணர்ந்து, மற்றைய இயக்கங்களுடன் புலிகள் உறவை ஏற்படுத்தியது, புலி களின் இராணுவச் செயற்பாடுகளிற்கு வவுனியாவில் ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, புளொட் இயக்கங்கள் ஆதரவாக இருந்தது, அந்த இயக்கங்களிற்குள் இருந்த பரஸ்பர தொடர்பாடலையெல்லாம் சாதாரண மக்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. விடு தலைப்புலிகளின் வீழ்ச்சிவரை சாதாரண வர்த்தகராக இருந்த சரவணபவனும் அதை அறிந்திருக்காமலிருந்திருக்கலாம்.

2001இல் புளொட்டும், புலிகளும் கூட்டமைப்பிற்காக பேசியது, சில காரணங்களால் புளொட் அதில் உடன்படாமலிருந்தது. அதன்பின்னரும் அவர்களின் தொடர்பு நீடித்ததெல்லாம் வரலாறு.

ஆயுத இயக்கங்களை புலிகள் தடைசெய்தார்கள், புலிகளிற்கு மாற்றான இயக் கங்கள் என்று ஒரு அரசியல் சிறுபிள் ளைத்தனமாக வாதமொன்றை சிலகால மாகவே கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் மூன்றின் மீதும் தமிழரசுக்கட்சியில் புதிதாக இணைந்தவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அரசிய லிற்கு புதியவர்கள். அதனால்தான் அப்படி பேசுகிறார்கள். பழுத்த தமிழரசுக்கட்சிக் காரர்கள் இப்படி பேசுவதில்லை. ஏனெனில், இந்த இயக்க மோதல் காலத்திற்கு முன்னரே அவர்கள் தலையில் துண்டைப் போட்டுக்கொண்டு கொழும்புக்கு பறந்து விட்டார்கள். 1981இலேயே புலிகளின் “மண்டையில் போடுபவர்கள் பட்டியலில்“ அவர்கள் இருந்தார்கள்.

1977 தேர்தலில் தமிழீழ கோரிக்கை வைத்த தமிழர் விடுதலைக்கூட்டணி, தேர்தலில் வென்றதும், தமிழீழ தேசிய மன்றத்தை உருவாக்குவோம், தமிழீழ சட்டத்தை உருவாக்குவோம் என உணர்ச்சி யூட்டி வாக்கு அள்ளினர். ஆனால் தேர்தல் முடிந்த மறுநாளே அதை மறந்துவிட்டனர். இந்த சந்தர்ப்பத்தில்தான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கீழ் இயங்கிய தமிழ் இளைஞர் பேரவை தலைவர்களாக இருந்த இறைகுமாரன், உமைகுமாரன், சந்ததியார் போன்றவர்கள் கட்சித்தலைமையின் இரட்டை அணுகுமுறையால் அதிருப்தி யடைந்து வெளியேறினார்கள்.



1978இல் தமிழர் விடுதலைக்கூட்டணி யின் மாநாடு ஆவரங்காலில் நடந்தது. தமிழர் விடுதலைக்கூட்டணியின் இரட்டை அணுகுமுறையை அம்பலப்படுத்தி துண்டுபிரசுரம் கொடுத்த தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்கள் மீது அமிர்தலிங்கம், சிவசிதம்பரத்தின் கட்டளையின் கீழ் தாக்குதல் நடந்தது. 1981இல் நடந்த மாவட்டசபை தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி போட்டியிட்டது. புலிகள் போட்டியிட வேண்டாம் என கேட்டார்கள். இந்த தேர்தலிற்கு எதிராக ஒட்டுமொத்த மக்களின் உணர்வும் இருந்தது. ஆனால் போட்டியிட்டார்கள். தமிழீழத்தை கேட்டவர்கள் நான்கு வருடத்தில் மாவட்டசபை தேர்தலில் போட்டியிட்டார்கள். இப்படியான வரலாற்றுதுரோகத்தைசெய்தபோது,தமிழர் விடுதலைக்கூட்டணியென்ற பெயரில் இருந்ததால் இலகுவாக தப்பிக்கலாமென்று அல்லது இந்த சம்பவங்களையெல்லாம் அறியாமல் இன்றைய தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் பேசுகிறார்கள். ஆனால் வரலாறு முக்கியம் மக்கள் பிரதிநிதிகளே!

ஈ.பி.ஆர்.எல்.எவ் கொழும்பிற்கு போனது, இந்தியா போனது, திரும்பி வந்ததெல்லாம் உண்மைதான். இது ஈ.பி.ஆர்.எல்.எவ் மட்டுமல்ல புலிகள் வெளியேற்றிய தமிழர் விடுதலைக்கூட்டணி உள்ளிட்ட எல்லா கட்சிகள் இயக்கங்களும் செய்ததுதான். சரவணபவனின் இன்றைய கட்சி தலைவர்களும் இதே பட்டியலிற்குள்தான் வருவார்கள். ஆகவே, யார் வெள்ளை? யார் கறுப்பு? என்ற பட்டிமன்றத்தை செய்ய இன்று யாராலும் முடியாது. மீறி யாரும் செய்வார்களாக இருந்தால், அவர்கள் வரலாற்றை அறியாதவர்களாகவே இருப்பார்கள்.

2001 இல் பகிரங்கமாக தமிழர் விடுதலைக்கூட்டணியுடன் புலிகள் உறவை ஏற்படுத்தினர். ஆனால், மற்றைய இயக்கங்கள் குறைந்தது அதற்கு மூன்று வருடங்களின் முன்னராவது புலிகளுடன் தொடர்பில் இருந்தனர். 1998இல் புலிகளின் கொலைபட்டியலில் சுரேஷ் பிரேமச்சந்திரனோ, சிவசக்தி ஆனந்தனோ இருக்கவில்லை. ஆனால் நீலன் திருச்செல்வமும், சம்பந்தனும் இருந்தார்கள்.




தொடர்ச்சி அடுத்தபக்கம்...




































### பொண்ணு பார்க்கும் ஆணின் பரிணாம வளர்ச்சி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 27 வயதில் | பார்க்க லட்சணமா | அழகா | வசதியான | நல்லா படிச்ச | வேலைக்கு போற | பொண்ணு | வேணும் |
| 28 வயதில் | பார்க்க லட்சணமா | அழகா | | நல்லா படிச்ச | வேலைக்கு போற | பொண்ணு | வேணும் |
| 29 வயதில் | பார்க்க லட்சணமா | | | நல்லா படிச்ச | வேலைக்கு போற | பொண்ணு | வேணும் |
| 30 வயதில் | பார்க்க லட்சணமா | | | படிச்ச | | பொண்ணு | வேணும் |
| 31 வயதில் | பார்க்க லட்சணமா | | | | | பொண்ணு | வேணும் |
| 32 வயதில் | | | | | | பொண்ணு | வேணும் |
| 33க்கு மேல் | | | | | | | வேணும் |

தமிழரசுக்கட்சியின் பெருந்தலைவர்களான அமிர்தலிங்கத்தையும், நீலன் திருச்செல்வத்தையும் புலிகள்தான் சுட்டுக் கொன்றார்கள். அது புலிகளின் சரியான முடிவாகவும் இருக்கலாம். தவறான முடிவாக கூட இருக்கலாம். இந்த பட்டிமன்றங்கள் தேவையில்லையென் பதற்காகத்தான் 2001 இல் பொதுவாக எல்லோருக்கும் புலிகள் புனித தண்ணீர் தெளித்து விட்டார்கள். அவற்றை பற்றி இன்று பேசிக்கொண்டிருக்க தேவையில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் கடந்த காலத்தை போஸ்ட் மோர்டம் செய்ய புறப்பட்டால், தமது கட்சியின் கடந்த காலத்தையும் இவர்கள் போஸ்ட் மோர்டம் செய்வதுதானே நியாயம்? அன்று தமிழர் விடுதலைக்கூட்டணியாக இருந்த அமைப்புத்தான் இன்று தமிழரசுக்கட்சியானது. சங்கரி மட்டும் பிரிந்து சென்றார். பெயர் மாற்றத்தை வைத்து, தமிழரசுகட்சியினர் தப்பிக்க முனைவது, தமிழ் சினிமாவில் கன்னத்தில் மரு வைத்துவிட்டு, மாறுவேடமிட்டு தப்பிக்கும் காட்சிகளிற்கு ஒப்பானது.

புலிகள் உருவாக்கிய கூட்டமைப்பிற்கு மாற்று தேவையில்லைத்தான். இந்த ஒருவரியில் கடந்து செல்லும் விவகாரமல்ல இது. ஆழமான உரையாடலிற்குரியது. ஈ.பி.ஆர்.எல்.எவ் ஏன் மாற்று தேவையென்றது? மற்றைய பங்காளிகள் ஏன் அதிருப்தியில் இருக்கிறார்கள்? தமிழரசுக் கட்சியின் ஏகபோகம்தான் காரணம். முதலில் அதை பேச வேண்டும். தேர்தலில் ஆசன பகிர்வில் ஆரம்பித்து தேசியப்பட்டியல் நியமனங்கள் வரை கூட்டமைப்பிற்குள் நடக்கும் முறையற்ற பங்கீடுகளை பேச வேண்டும்.

கூட்டமைப்பின் போதாமைகள், ஜனநாயக உள்வீடுகள் குறைவாக உள்ளதை சம்பந்தனும் புரிந்து வைத்திருக்கிறார். என்றாலும், இனப்பிரச்சனை தீர்வுவரை இதை இழுத்து சென்றுவிட முயற்சிக்கிறார். அவரிடம் கூட்டமைப்பை உடைய விடக்கூடாதென்ற பொறுப்புணர்வு உள்ளது. ஆனால், இதை புரிந்துகொள்ள முடியாத, அந்த பக்குவமற்ற பல மக்கள் பிரதிநிதிகள் தமிழரசுக்கட்சியிலேயே உள்ளனர்.

வலிகாமத்தில் மக்கள் சொந்த இடங்களிற்கு செல்ல முடியாமல் தவித்துக் கொண்டிருக்க, ஜனாதிபதியை தனது வீட்டுக்கு அழைத்து மகளின் பிறந்தினத்தை கொண்டாடினார் என்ற விமர்சனம் உள்ளிட்ட ஏராளம் விமர்சனங்கள் சரவணபவன் மீது வைக்கப்படுகிறது. உண்மையில் இவற்றைப் பற்றித்தான் அவர் சுய விமர்சனம் செய்ய வேண்டும். அதன்பின் சுரேஷ் பிரேமச்சந்திரனின் தம்பி பற்றி பேசலாம். கூட்டங்களில் சரவணபவன் பேசும் அதிதீவிர தமிழ்தேசியமும் இந்த நிஜமும் வேறுவேறு. எல்லா தமிழர்களும் பிறந்தநாள், நாலாம் சடங்கில் சரத் பொன்சேகாவையும், விஜயதாசா ராஜபக்சவையும், அங்கயன் இராமநாதனையும் கூப்பிடலாமெனில் அது சரவணபவன் முன்னெடுக்கும் அரசியலிற்கு மாறானது. மக்கள் பிரதிநிதிகள் இப்படியான கொண்டாட்டங்களை நடத்தலாமெனில், சலுகைகளிற்காக மகிந்த ராஜபக்சவின் கூட்டங்களிற்கு செல்லும் எளிய மக்களை யாரும் குறைசொல்ல முடியாது. பின்னர் சரவணபவன்கள் முன்னெடுக்கும் அரசியலிற்கும் இடமில்லாமல் போய்விடும். இந்த தர்க்கத்தின் அடிப்படையில் பார்த்தால் சரவணபவனின் வாழ்க்கையும் அரசியலும் வேறுவேறானவை.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் யாருக்கும் வாழ்க்கையும் அரசியலும் வேறுவேறாக இல்லை. போராட்ட பாரம்பரியத்தில் இருந்து வெளிப்பட்டதால் மக்களுடன் இருப்பதை ஒரு வாழ்க்கைநெறியாக வைத்திருக்கிறார்கள். அவர்களை விமர்சிக்கும் தகுதி சரவணபவன் போன்றவர்களிற்கு கிடையாது. மக்கள் விழிப்பாக இருந்து, அரசியல் வியாபாரிகளின் தலையில் குட்டி கொட்டத்தை அடக்கி வைத்திருக்க வேண்டும்.

சிறி.அருளானந்தம்
வவுனியா

# முல்லைத்தீவு காடழிப்பும்... ரிசாட் பதியுதீனின் அரசியலும்!

நம்மாழ்வார்

முல்லைத்தீவின் கடந்தவாரம் தமிழ் இளையவர்களால் ஒரு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருந்தது. முல்லைத்தீவில் திட்டமிடப்பட்டுள்ள குடியேற்றத்திற்கு எதிராக வலுவான எதிர்ப்பை பதிவிட்டுள்ளனர். ஆனால், இந்த ஆர்ப்பாட்டத்தை இனவாத கண்ணோட்டத்தில் சித்தரிப்பதற்கு ஒரு பகுதியினர் முயற்சிக்கின்றனர். இது தவறானது. இது முல்லைத்தீவில் முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்கு எதிரான போராட்டமல்ல. சட்டவிரோத குடியேற்றங்களிற்கு எதிரானது மட்டுமே.

முல்லைத்தீவில் முஸ்லிம்கள் வாழ்ந்தார்கள், அவர்கள் மீள்குடியேற்றப்பட வேண்டுமென்பதெல்லாம் இரண்டாவது வாதத்திற்குரிய விடயங்கள் அல்ல. அவர்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டும். ஆனால் முறையாக மீள்குடியேற்றப்பட வேண்டும். அமைச்சர் ரிசாட் பதியுதீனிடம் அதிகாரமுள்ளதால், தமிழர்களின் நிலப்பரம்பலை குலைத்து, இயற்கை வளங்களை அழித்து முஸ்லிம்கள் குடியேற்றப்படலாமென்ற அச்சம் பொதுவாக தமிழர்கள் மத்தியில் உள்ளது. ஏற்கனவே மன்னாரில் ரிசாட் பதியுதீன் நடந்துகொண்ட விதம் தொடர்பில் தமிழர்களிடம் எதிர்மறையான எண்ணங்களே உள்ளன. இதன் நீட்சியாகவும் தற்போதைய அச்சம் இருக்கலாம்.

**மீள்குடியேற்றமென்ற பெயரில் வழங்கப்பட்டவர்களின் விபரத்தில் ஆயிரம் பெயரளவில் போலியானவை. அந்த காணிகள் யாரிடம் செல்லும்? சக்தி வாய்ந்த யாரோ ஒருவரின் பினாமிகளா அவர்கள்?**






கூழாமுறிப்பு குடியேற்றம் இன்று நேற்று திட்டமிடப்பட்ட குடியேற்றமல்ல. யுத்தத்தின் பின்னர் வடக்கில் மீள்குடியேற்றம் ஆரம்பித்தபோது, திட்டமிடப்பட்டது. ஆனால் ஏழு வருடங்கள் கடந்தும் ஏன் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை?

இங்குதான் முக்கிய புள்ளி உள்ளது. மகிந்தராஜபக்சவின் காட்டாட்சிகாலத்தில் மன்னாரில் நீதிபதியே மிரட்டப்பட்ட சம்பவமெல்லாம் நடந்தது. ஆனால் சில விடயங்கள் சில படிமுறைகளின் ஊடாகத்தான் நகர முடியும். காடழித்து அவசரகதியில் குடியேற்றமொன்றை ஏற்படுத்த முடியாது. காடழிப்பால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக சுற்றுச்சூழல் தொடர்புடைய திணைக்களங்கள் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். சில சமயங்களில் அரசு அந்த நிலத்தில் முழுமையாக கண்வைத்தால், தனக்கு சார்பான குழுவை நியமிக்கலாம். சம்பூர் அனல்மின் நிலைய காணி சுவீகரிப்பிற்கு முன்னர் அப்படித்தான் நடந்தது. ஆனால் முல்லைத்தீவில் இதுவரை குழுவே நியமிக்கப்படவில்லை. சுற்றுச்சூழல் பாதிப்புக்கள் தொடர்பான ஒரேயொரு கூட்டம் மாவட்ட செயலகத்தில் நடந்துள்ளது. குழுவின் ஆய்வு நடந்து, அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர்தான் குடியேற்ற வேலைகள் ஆரம்பிக்கும்.

முல்லைத்தீவில் 1444 முஸ்லீம் குடும்பங்கள் குடியேற்றப்பட வேண்டுமென மாவட்ட செயலகத்திற்கு விபரம் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால், உண்மையில் இது மிக அதிகரித்த தொகை. காணி வழங்கல் தொடர்பான நடமாடும் சேவையில் ஆயிரத்திற்கும் குறைவானவர்கள்தான் வந்திருந்தனர். இந்த ஆயிரம் பேருமே முல்லைத்தீவில் குடியேற தகுதியுடையவர்கள் அல்ல. சுமார் ஐநூறு பேரளவில் குடியேற தகுதியானவர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

மாவட்ட செயலக உயரதிகாரிகளின் தகவல்படி, இந்த ஐநூறு பேரிலும் முறையற்ற பதிவாளர்கள் உள்ளனர். மிக நுணுக்கமாக ஆய்வுசெய்தால், இவர்களில் நூறு தொடக்கம் நூற்றைம்பது பேர் வரையில் நிராகரிக்கப்பட வேண்டியவர்கள் என்றார்கள். இதற்கு ஒருங்கிணைந்த செயற்பாடு அவசியம். முல்லைத்தீவில் இடம்பெயர்ந்ததை, புத்தளம் அகதிகள் முகாமில் வசித்ததை, அங்கு காணிகள் பெறப்படாததை உறுதிசெய்த பின்னர்தான் முல்லைத்தீவில் காணிகள் வழங்க வேண்டும். இதை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தால், வடமாகாணசபையால் தனித்து செய்ய முடியாது. ரிசாட் பதியுதீன் போன்றவர்களின் ஒத்துழைப்பு தேவை.

ஆனால் ரிசாட் பதியுதீன் இந்த விடயத்தில் அரசியல் செய்கிறார் போலவே தெரிகிறது. வவுனியாவில் நடந்த நிகழ்வொன்றில் பேசிய ஹக்கீமும் இதை குறிப்பிட்டிருக்கிறார். முஸ்லிம்கள் மத்தியில் உணர்வூட்டும் அரசியலைத்தான் ரிசாட் செய்கிறார். தேசிய உணர்ச்சியை ஊட்டுபவர்கள் விரைவாக மக்களின் கவனத்தை ஈர்க்கலாமென்ற சூத்திரத்தை சமகாலத்தில் மகிந்த, ரிசாட் ஆகியோர்தான் கச்சிதமாக பயன்படுத்துகிறார்கள்.

தேர்தல் வெற்றிக்காக ரிசாட் மேற்கொள்ளும் இந்த அணுகுமுறை, இரண்டு சிறுபான்மையினங்களிற்குமிடையிலான மோதலிற்கு கொம்பு சீவிவிடுவதாக அமைந்துவிடக்கூடும்.

கிழக்கில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் இப்பொழுது அதிக அக்கறை காட்ட ஆரம்பித்துள்ளனர். முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்துப்பட்ட வன்முறை, முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்கு சிங்களவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள் என்ற இரட்டை குதிரைகளில்தான் அரசியல் முதலீட்டை செய்துள்ளனர்.

வடக்கில் முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்கு தமிழர்கள் தடையாக இருக்கிறார்கள் என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்த ரிசாட் முயற்சித்துக் கொண்டிருக்கிறார். உண்மையில் இது தவறானது. வடக்கில் வாழ்ந்த காணி உரித்துள்ள முஸ்லிம்கள் யாருக்குமே குடியேற தடையிருக்கவில்லை. வடக்கில் வாழ்ந்தேயிருக்காத அடுத்த சந்ததிகூட, வடக்கின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் வர்த்தக நிலையங்களை வைத்திருக்கிறார்கள். வடக்கில் வாழ்ந்த காணியற்றவர்களின் மீள்குடியேற்றத்தில் தான் சர்ச்சை.


முல்லைத்தீவை சேர்ந்த சுமார் 2000 தமிழ் குடும்பங்கள் உத்தியோகபூர்வ காணிப்பதிவை கொண்டிருக்கவில்லை. அவர்களை யாரும் பொருட்படுத்தாமல் இருந்துகொண்டு, முஸ்லிம்களை மட்டும் குடியமர்த்த முயற்சித்தால் குழப்பம் வருவது இயல்புதானே? மீள்குடியேற்ற அதிகாரம் மத்திய அரசில் குவிந்திருக்க, மத்திய அரசின் உதவியுடன் முஸ்லிம்களை மட்டும் ரிசாட் குடியமர்த்தினால், தமிழர்கள் இந்தியாவிற்கு வள்ளமேறுவதா?

மீள்குடியேற்றமென்ற பெயரில் வழங்கப்பட்டவர்களின் விபரத்தில் ஆயிரம் பெயரளவில் போலியானவை. அந்த காணிகள் யாரிடம் செல்லும்? சக்தி வாய்ந்த யாரோ ஒருவரின் பினாமிகளா அவர்கள்? மறிச்சுக்கட்டி மீள்குடியேற்றத்திலும் இதேவிதமான சர்ச்சை எழுந்தது. மறிச்சுக்கட்டி மீள்குடியேற்றத்தை சிங்களவர்கள் எதிர்த்தார்கள் என்பதை மட்டுமல்ல, மீள்குடியேற்றத்தின் பெயரால் அங்கு யார் காணிகளை சுருட்ட முனைந்தார்கள் என்பதையும் புரிந்தகொள்வதே அறிவார்ந்தது. இந்த வகையான சுருட்டல்களே மீள்குடியேற்றத்தை சிக்கலாக்கியுள்ளது. முல்லைத்தீவில் தேவையான காணியைவிட மூன்றில் இரண்டு அதிகமாக கேட்கப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல்வாதிகள், அதிகாரிகள் முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்கு தடையாக இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டில் உண்மையில்லை. தேவையெனில், நாட்டிலுள்ள சட்டங்கள்தான் தடையாக உள்ளன என சொல்லலாம். ஏனெனில், யுத்தத்தின் பின்னர் முல்லைத்தீவில் 184 தமிழர்களிற்குத்தான் காணி வழங்கப்பட்டுள்ளது. நாட்டில் யாருக்கும் புதிதாக காணி வழங்குவதில்லையென்பது அரசின் தீர்மானம்.

ஆட்சி மாறினாலும், காட்சி மாறாமல் எல்லா அரசுகளின் செல்லப்பிள்ளையாகவும் இருக்கும் அரசியல் வித்தையை ரிசாட் பதியுதீன் கற்றுவைத்திருக்கிறார். சொந்த மக்களையே மீள்குடியேற்ற முடியாமல் தமிழ் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் கையைபிசைந்து கொண்டிருக்கிறார்கள். முஸ்லிம் மீள்குடியேற்ற விவகாரத்தையும் தமிழர்களுடன் முடிச்சு போடுவது ஒருவகையான இனவாத வெளிப்பாடுதான். மகிந்தவின் காலத்தில் மீள்குடியேற்றத்திற்காக கூழாமுறிப்பு பகுதியை அடையாளம் கண்டவர்களால் தொடர்ந்து ஏன் குடியேற்ற பணிகளை முன்னகர்த்த முடியவில்லை? கிடைத்த நம்பகரமாக தகவல்களின் அடிப்படையில், கூழாமுறிப்பு குடியேற்ற பணிகள் கடந்த ஏழு வருடமாக தேக்கமடைந்திருந்த நிலையில், மாவட்ட செயலக தமிழ் உயரதிகாரிகள் சிலர்தான், கொழும்பிற்கு இந்த விடயத்தை கொண்டு சென்று பணிகளை முன்னகர்த்தியுள்ளனர். சுற்றுச்சூழல் ஆய்வறிக்கை பணிகள் முன்னெடுக்கப்படாமல் இருந்தபோது, அதற்கு உயிரூட்டியுள்ளனர். ஆகவே, கண்ணாடி வீட்டிற்குள்ளிருந்து கல்லெறியும் அரசியலை ரிசாட் கைவிட வேண்டும்.

ரிசாட் பதியுதீன் என்ற தனிமனிதனின் நலனை விட, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்ற கட்சியின் நலனை விட, முஸ்லிம் சமூகத்தின் நலன் பெரியது. சொந்த நலன்களிற்காக இன்னொரு இனத்துடன் முறுகலை ஏற்படுத்த கொம்பு சீவிவிடுவதை காலம் மன்னிக்காது. வடக்கு குடியேற்றங்களில் ரிசாட் பதியுதீன் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும்.



# 'மாகாணசபை குழப்பத்திற்கு பிறகு நிறைய ஓடர் வருகிறது!'

## அவைத்தலைவர் சிம்மாசனத்தின் சுவாரஸ்ய கதை

செல்வம்

கடந்த யூன் மாதம் 14ம் திகதி. அன்றுதான் வடமாகாணசபைக்குள் அரசியல் அணுகுண்டு வெடித்தது. அமைச்சர்கள் மீதான விசாரணைக்குழு அறிக்கை பற்றிய விவாதத்திற்கான சிறப்பு அமர்வு என்றுதான் அது குறிப்பிடப்பட்டது. ஆனால் அப்படியெதுவும் நடக்காமல், தமது தீர்ப்பை முதல்வர் வாசிக்கத் பின்னர் நடந்ததெல்லாம் சம்பவங்களல்ல, வரலாறு.

இந்த பிரளயத்திற்குள் பலரும் கவனிக்காமல் விட்ட விடயம் அவைத்தலைவரின் புதிய சிம்மாசனம். அதுவரை பாவித்த சிம்மாசனம் அகற்றப்பட்டு, புதிய சிம்மாசனமொன்றில் உட்கார்ந்திருந்து அன்றைய அமர்வை வழிநடத்தினார் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம். அன்றைய அமர்வில் மாகாணசபைக்குள் புயல் புக, புதிய சிம்மாசனத்திற்கும் மாகாணசபைக்கும் ஏழாம் பொருத்தம் என இணையத்தளங்களில் ஒரு குறூப் அடித்து விட்டது. சமூகவலைத்தளங்களிலும் ஒரு சுற்று வந்தது இந்தக்கதை.

புதிய சிம்மாசனத்திற்கும் மாகாண சபைக்கும் ஏழாம் பொருத்தம் கிடையாதென்பது அடுத்தடுத்த அமர்வுகளில் தெரிந்துவிட்டது. ஏதோ கண்ணூறு கழிந்ததை போல, ஆசுவாசப்பட்டு கொண்டனர் மாகாணசபை உறுப்பினர்கள்.

மாகாணசபை சர்ச்சைகளிற்கு நிகராக பேசப்படுகிறதே என, சிம்மாசனத்தை பற்றி அறிய கிளம்பினோம். அதிலும் ஒரு சுவாரஸ்ய கதையுள்ளது.

இது அவைத்தலைவரிற்காக தயாரிக்கப்பட்ட மூன்றாவது ஆசனம். இதற்கு முன்னர் தயாரிக்கப்பட்ட இரண்டு சிம்மாசனங்களும் அவைத்தலைவர் உட்கார்வதற்கு வசதியாக இருக்கவில்லை. அதனால்தான் மூன்றாவதாக இந்த ஆசனம் தயாரிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியிலுள்ள மரவேலைக்கூடமொன்றில்தான் இது தயாரிக்கப்பட்டுள்ளது. அங்கு நாம் சென்ற போது, அழாதகுறையாக வரவேற்றார் சிம்மாசனத்தை தயாரித்த ஆசாரி. பத்திரிகைகாரர்கள் தன்னை தேடி வரத்தொடங்கி விட்டார்கள், அவர்களுக்கு பேட்டி கொடுப்பதிலேயே பொழுது கழிவதாக கூறியவர், இனி யாருடனும் பேசமாட்டேன் என திரும்பி உட்கார்ந்துவிட்டார். போனவாரம் யாரோ வந்து கதைத்து அதை தொலைக்காட்சியில் போட்டுவிட்டார்கள், ஏதேனும் அரசியல் பிரச்சனை வருமோ தெரியாதென பயந்தார்.

சிம்மாசனத்தைகொண்டுசென்றுவைத்த மாகாணசபையே அமைதியாகிவிட்டது, தயாரித்த உங்களிற்காக பிரச்சனை வரப்போகிறது, பயப்பிடாதீர்கள் என அவரை அசுவாசப்படுத்தி பேச வைத்தோம்.

முதிரை மரத்தில், சிற்ப வேலைப்பாடுகளுடன் தயாராகியுள்ளது. சோழர் கால சிற்ப வேலைப்பாடுகளுடன் தயாரான சிம்மாசனம் என சமூகவலைத்தளங்களில் அடித்துவிடப்பட்டது உல்டா. தனது கற்பனைக்கெட்டிய விதத்தில் சிற்பங்களை செதுக்கியதாக சிம்மாசனத்தை செதுக்கியதாக சொன்னார். இரண்டு அன்னப் பறவைகளை செதுக்கி, அதற்குள் வட மாகாணசபை சின்னங்களை செதுக்கியுள்ளனர். அது சோழர்கால சிற்ப வேலைப்பாடுகளாக யாரோ ஒரு அறிஞனிற்கு தெரிந்திருக்கிறது!

வன்னிக்காட்டில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட முதிரை மரத்தில் தயாராகியுள்ளது. சிம்மாசனத்தை தயாரிக்க பத்துநாட்கள் ஆனதாம்.

இப்படியான கதிரைகளை வேறு யாரெல்லாம் செய்கிறார்கள் என கேட்டோம். இப்படி வேலைப்பாடுகளுடன் கூடிய முதிரை கதிரைகளை எப்பொழுதாவதுதான் செய்கிறார்களாம். கிறிஸ்தவ பாதிரிகள் சிலர் இதேவிதமான கதிரைகளை கொள்வனவு செய்கிறார்களாம். அவர்கள் என்ன தேவைக்கு பயன்படுத்துகிறார்கள் என ஆசாரி கேட்கவில்லையாம். அவைத்தலைவரின் சிம்மாசனத்தின் பெறுமதி அறுபதாயிரம் ரூபாவாம். முதிரையில் செய்யப்பட்டதென்பதால், இன்னும் ஐம்பது வருடத்திற்கு மேல் பயன்படுத்த முடியுமென்றார்.

உங்களால் தயாரிக்கப்பட்ட சிம்மாசனத்தை மாகாணசபைக்குள் கொண்டுவந்த அன்றே இவ்வளவு களேபரங்கள் நடக்குமென நினைத்தீர்களா என கேட்க, "ஏன் தம்பி பற்ற வைக்கிறீர்கள்" என்றார் அப்பாவியாக.

மாகாணசபை சர்ச்சை நடந்ததன் பின்னர், ஊடகங்களில் தானும் பிரபலமாகி கொழும்பு போன்ற பல இடங்களில் இருந்து ஓடர்கள் வருவதாக சொன்னார். கலகத்திலும் ஒரு நன்மையென வைக்கலாம்!

**தீபம் வழங்கும் மாபெரும் பரிசு திட்டம்.**

**தீபம் வாங்கினால் பெறுமதிமிக்க பரிசுகள் காத்திருக்கின்றன.**

ஒவ்வொரு மாதமும் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் 20 வாசகர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள்.

**London metropolitan college**

வழங்கும் 4500 பெறுமதியான கற்கைநெறி கட்டண கழிவினை பெறுவதற்கு அரியசந்தர்ப்பம்.

**நீங்களும் எமது பரிசு மழையில் இணையலாம்.**

முறை 1. கூப்பனை நிரப்பி எமது முகவரிக்கு அனுப்பலாம் அல்லது நேரில் கையளிக்கலாம்.

முறை 2. கூப்பனை நிரப்பி எமது பத்திரிகை முகவர் இடம் கொடுக்கலாம்.

முறை 3. கூப்பனை நிரப்பி எமது facebook.com/deepamweekly/ பக்கத்திற்கு அனுப்பலாம்

குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படும் வாசகர்கள் பெயர்கள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் எமது பத்திரிகையில் வெளியிடப்படும்.

**Issue Number 102**

Full Name :........................................

Address :........................................

Nic :........................................

Phone Number :........................................



# மட்டக்களப்பில் ஒரு சிகிரியா!

## ஆய்வுகளின்றி மலைக்குகையை கையகப்படுத்தும் சிங்களவர்கள்




குகையின் வெளிப்புறம்



குகையின் உட்புறம்



கட்டடத்தின் அடித்தளம்



கல்ப்படுக்கை



சுவாமி மலை

அல்போன்ஸா அபூபக்கர்

இந்த தலையங்கத்தை பார்த்ததும் நீங்கள் குழப்பமடையலாம். அப்படியொரு இடம் மட்டக்களப்பில் இருக்கவே வாய்ப்பில்லையென்றுதான் நீங்கள் சொல்வீர்கள். ஆனால், அப்படியொரு இடத்தை உங்களிற்கு அறிமுகப்படுத்தவுள்ளோம்.

மட்டக்களப்பில் படுவான்கரையில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலேயே மக்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. வெல்லாவெளியில் தமிழ் மொழியிலான கல்வெட்டொன்று கண்டெடுக்கப்பட்டிருந்தது. படுவான்கரையில் வாழ்ந்தவர்கள் தமிழ்பேசும் சமணர்கள் என்று நம்பப்படுகிறது.

படுவான்கரையில் பட்டிப்பளை பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ளதுதான் கச்சக்கொடி பிரதேசம். மட்டக்களப்பு நகரத்தில் இருந்து அண்ணளவாக நாற்பது கிலோமீற்றர்கள் தொலைவானது. மட்டக்களப்பு அம்பாறையின் எல்லையோர கிராமம். இதற்கு அருகில் உன்ன புளுகுணாவ, கெவுளியாமடு போன்ற கிராமங்கள் முற்றாக சிங்களக் குடியேற்றங்களாக்கப்பட்டு விட்டன. அருகிலுள்ள கச்சக்கொடி பிரதேசம் காட்டுப்பகுதி. காட்டோரமாக மிகச்சில குடும்பங்கள் வசிக்கின்றன.

அங்குள்ள சிறிய மலைதான் சுவாமி மலை. அங்குதான் சிகிரியாவை ஒத்த மலைக்குகை காணப்படுகிறது. மேலோட்டமாக அவதானித்தாலே, அந்த பகுதியில் கட்டிடங்கள் அமைத்து மனிதர்கள் வாழ்ந்ததற்கான தெளிவான சான்றுகள் காணப்படுகின்றன.

மலையடிவாரத்தில் கட்டிடம் அமைந்திருந்ததற்கான சான்றுகள் தென்படுகின்றன. சுமார் பத்து அடி இடை வெளியில் இரண்டு வரிசையில் தூண்களின் அடித்தளம் உள்ளது. முறையான கட்டிட அமைப்பொன்று அங்கிருந்ததென்பதற்கான தெளிவான சான்று அது.

அதற்கருகில் கல் படுக்கையொன்று உள்ளது. பிரமாண்ட கல்லில் தட்டையான படுக்கையொன்று அமைக்கப்பட்டுள்ளது. மரநிழலில் கற்களின் மீது வைக்கப்பட்டுள்ளது. படுக்கையாகவோ, அல்லது தியானம் செய்யும் இடமாகவோ, ஓய்வெடுக்கும் இடமாகவோ அது இருந்திருக்கலாம்.

குன்றின் மீது ஏறிச்செல்வதற்கு முன்னர் படிகள் இருந்திருக்கவேண்டும். இப்பொழுது பல இடங்களில் சிதைவடைந்து விட்டது. மலையேறும் இடத்தில் கற்களால் ஆன படிகள் போன்ற அமைப்பு உள்ளது. சில இடங்களில் முறையான கற்படிகள் உள்ளன.

குன்றின் மேல்பகுதியில் மலைக்குகையொன்று உள்ளது. பிரமாண்ட மூன்று கற்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இயற்கையாக அமைந்ததா அல்லது மனிதர்களால் உருவாக்கப்பட்டுள்ளதா என்பது தெரியவில்லை.

படுவான்கரையின் மேற்கில் புளுகுணாவ, கச்சக்கொடிமலை பிரதேசங்களில் பிரமாண்ட கற்பாறைகள் உள்ளன. புளுகுணாவ குளத்தில் நிறைந்துள்ள கற்பாறைகளை பூதங்கள் கொண்டு வந்து வைத்ததாக மக்களிடம் ஐதீகம் உள்ளது. பூதங்கள் எனப்படுவது அந்த பிரதேசத்தில் வாழ்ந்த உடற்பலம் மிகுந்த, தொழிலாளிகளான இனக்குழுமம் ஒன்றாக இருந்திருக்கலாமென்று ஊகிக்கப்படுகிறது. இலக்கிய ஆதாரங்கள், வழக்கிலுள்ள கதைகள் இதற்கு ஆதாரமாக உள்ளன. சோதையன், நீலாசோதையன் வழிபாடு கிழக்கில் உள்ளது. சோதையன்கட்டு, சோதையன்குளம் என்ற இடங்கள் இன்றும் கிழக்கில் உள்ளன. கிரான் பிரதேசத்தை அண்டிய வயல்வெளிகளில் சோதையன்கட்டு என்ற பெயரில் பெரிய மண் அணைகள் உள்ளன. சோதையன்கள் எனப்படுபவர்கள் பிரமாண்டகுளங்கள், அணைகளை கட்டிய குடிகளாக இருக்கலாமென்ற அபிப்பிராயமும் உள்ளது. இவர்களையே ஆரம்பத்தில் பூதங்கள் என குறிப்பிடப்பட்டதா என்பதையும் ஆராய வேண்டும்.

இந்த பின்னணியில் பார்த்தால், இந்த கல் குகை மனிதர்களாலும் அமைக்கப்பட்டிருக்கலாம். குன்றின் மேல் பகுதியில் கட்டிடம் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. அத்துடன் சிறிய குளமொன்றும் காணப்படுகிறது.

கச்சக்கொடி பிரதேசம் அடர்ந்த காடாக இருக்கிறது. ஆனால் சுவாமிமலையின் கல்குகையை அண்டிய பிரதேசத்தில் புற்காடாக இருக்கிறது. இது இயற்கையான நில அமைப்பா அல்லது மனிதர்கள் வாழ்ந்த சமயத்தில் உருவாக்கிய புல் தோட்டமா என்பது தெரியவில்லை. எனினும், அந்தப்பகுதி புதர் மண்டி, காடுகளாக காணப்படுகிறது. முறையான ஆய்வின் மூலமே அங்கு மறைந்துள்ள ஏனைய தடயங்களை கண்டறிய முடியும்.

அந்த பகுதி யானைகளின் கூடாரம். அங்கு செல்லும் வழியெல்லாம் யானை எச்சரிக்கை அறிவித்தல்களும், மின்சார வேலிகளுமே உள்ளன. ஆனால் மலையடிவாரத்தில் ஒரு பௌத்த பிக்கு அண்மைய சில வருடங்களாக குடியிருக்கிறார். அவரது குடியிருப்பை சூழ மின்சார வேலியமைக்கப்பட்டுள்ளது.

அந்தப்பகுதியில் மருந்திற்கும் தார் வீதி கிடையாது. அண்மையில் உள்ள தாந்தாமலை முருகன் ஆலயத்திற்கு பயணிக்கவே முடியாத மண் வீதியுள்ளது. ஆனாலும் பதுளை வீதியிலிருந்து பௌத்த பிக்குவின் வாழ்விடம் வரை காப்பெற் வீதி அமைக்கப்பட்டுள்ளது.

அந்த மலைக்குகை பௌத்தர்களின் தொல்லியல் சின்னமென்பது பௌத்த பிக்குவின் வாதம். பூரணை தினங்களில் அந்த பகுதிக்கு பௌத்தர்கள் வாகனங்களில் வருவதையும் அவதானிக்க முடிகிறது. எனினும், அது சமணர்களின் வழிபாட்டிடமாக இருக்கலாமென்பதும் வரலாற்றாய்வாளர்களின் கணிப்பு. முறையான ஆய்வு செய்யப்படாமல் பௌத்தர்கள் உரிமைகொண்டாடுகிறார்கள் என்கிறார்கள் அவர்கள்.


முறையான ஆய்வுகள் செய்யப்பட்டால்தான் வரலாற்றை முழுமையாக மீட்டெடுக்கலாமென்பது குறிப்பிடத்தக்கது.



படிக்கட்டு




பௌத்த பிக்குவின் வசிப்பிடம், வாசல் வரை காபெற் வீதி



# "மாற்று தலைமையா... நானென்ன குப்பைகொட்டிக் கொண்டிருக்கிறேனா?"

## அதிர வைக்கிறார் ஆனந்தசங்கரி



தனி செல்வம்

தமிழ் அரசியல் சோர்ந்திருக்கும் சமயங்களில் கலகலப்பூட்டுபவர் ஆனந்தசங்கரி. ஒருகாலத்தில் அரசியலில் கோலோச்சியவர் இன்று நகைச்சுவை பாத்திரம் போல மாறிவிட்டார். கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிற்கு அடிக்கடி கடிதம் எழுதுவது, கூட்ட மேடைகளில் ஏறி "ஒன்டிக்கு ஒன்டி வரியா" என தம்ஸ் கட்டுவது, முதலமைச்சரை சந்தித்து கட்சியை பொறுப்பேற்க சொல்வதென அரசியல் பணியாற்றிக் கொண்டிருந்தவரை சந்தித்து பேசினோம்.

**தீபம்: இன்றைய அரசியல்சூழல் எப்படியிருக்கிறது?**

**ஆனந்தசங்கரி:** செல்வநாயகம் இறந்து 28 வருடத்திற்கு பிறகு தமிழரசுக்கட்சி கடையை திறந்திருக்கிறார்கள். திறக்கச் சொல்லி செல்வநாயகம் சொன்னவரா? தமிழரசுக்கட்சியை இல்லாமல் செய்யும் வில்லைத்தானே?

**ஆனந்தசங்கரி:** 2004 தேர்தலில் கள்ள வாக்கு போட்டு பரம்பரை பரம்பரையாக புகழோடு இருந்த கட்சியை புதைத்துவிட்டு வந்தவர்தான் சம்பந்தன். ஊடகங்கள் இதையெல்லாம் மூடி மறைத்து அவரை பெரிய ஆளாக காட்ட முயற்சிக்கின்றன. கள்ளவாக்கு போட்டுத்தான் இருபத்தியிரண்டு பேரும் தெரிவானார்கள். அந்த தேர்தலில் நான் வாக்களிக்கவில்லை. ஒரு பாராளுமன்ற தேர்தலில் முப்பத்து ஆறாயிரம் வாக்குகள் பெற்று முதலிடத்தை பெற்றதையும் ஞாபகப்படுத்துகிறேன்.

**தீபம்: தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பதவியை ஏற்குமாறு வடக்கு முதலமைச்சரிடம் கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். ஏன் அவரை தேர்வு செய்தீர்கள்?**

**ஆனந்தசங்கரி:** முதலமைச்சர் விக்னேஸ்வரன்தான் எமது கட்சியை மீண்டும் மக்கள் மத்தியில் கொண்டுசெல்ல பொருத்தமானவர். தமிழர்களின் நம்பிக்கைக்குரியவராக அவர்தான் இருக்கிறார். மக்கள் அவரை முழுமையாக நம்புகிறார்கள். பதவி ஆசையில்லாமல் மக்கள் பிரச்சனைகளை உரத்து பேசி வருகிறார். அவர் எமது பொறுப்பேற்றால் மீண்டும் கட்சியை நல்ல நிலைமைக்கு கொண்டு வரலாம். அவரும் நானும் பழைய நண்பர்களும் கூட.

**தீபம்: விடுதலைப்புலிகளிற்கும் உங்களிற்கும் என்ன பிரச்சனை? திடீரென இரண்டு தரப்பும் ஏன் பகைவர்களாகினீர்கள்?**

**ஆனந்தசங்கரி:** என்ன பிழை செய்திருந்தாலும் சரி, அதையெல்லாம் விட்டுவிட்டு ஒரு பெயரில், ஒற்றுமையாக தேர்தலை சந்தியுங்கள் என்றார் பிரபாகரன். அவரது பேச்சைக்கேட்டு எல்லாக்கட்சிகளும் ஒன்றாக கூடினர். இதில் சிலர் என்னை ஒதுக்கினார்கள். என்னை விலக்கும் எண்ணம் பிரபாகரனிடம் இருக்கவில்லை. சேனாதிராஜாவிடமும், தமிழ்ச்செல்வனிடமும்தான் என்னை ஒதுக்கும் எண்ணமிருந்தது. அரசாங்கத்துடன் பேச்சு நடத்த ஏகப்பிரதிநிதியாக யாரையும் நான் ஏற்காததே தமிழ்செல்வன் என்னை ஒதுக்க காரணம். நான் செய்த பெரிய குற்றம் இதுதான்.

**தீபம்: வடமாகாணசபைக்குள் இவ்வளவு குளறுபடிகள் நடக்க காரணம் என்ன?**

**ஆனந்தசங்கரி:** திறமைசாலிகளை விட்டுவிட்டு, தமக்கு சேவகம் செய்பவர்களை அரசியலுக்கு கொண்டுவந்ததால்தான் இவ்வளவு பிரச்சனைகளும் வந்தது. மாகாணசபை உறுப்பினர்களை அவர்களது பாட்டில் விட்டால் பிரச்சனை வராது. பின்னாலிருந்து இயக்குவதுதான் பிரச்சனைக்கு காரணம்.

**தீபம்: மாற்றுதலைமை பற்றி இப்போது பேசப்படுகிறது. இதை எப்படி பார்க்கிறீர்கள்?**

**ஆனந்தசங்கரி:** மாற்றுத்தலைமை என்றால், அறுபது வருடமாக நான் என்ன குப்பை கொட்டினேனா? ஏன் மாற்று வர வேண்டும்? நீதி தவறாமல், நேர்மை தவறாமல் உருவாக்கப்பட்ட பெருங்கட்சி கட்சி செல்வநாயகம், பொன்னம்பலம் போன்றவர்களால் உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக்கூட்டணி இருக்கிறது. அதில் எல்லோரும் இணைந்து செயற்படுங்கள். பிறேகேன் புதுக்கட்சி தேடி போக வேண்டும்? நான் தேவையில்லையென்றால் ஒதுங்கிச் செல்கிறேன். நான் பாராளுமன்றம் வருவதுதான் இவர்களின் பிரச்சனையென்றால், நான் வரவில்லை. இரண்டு பெருந்தலைவர்களால் உருவாக்கப்பட்ட கட்சியை அழிக்காதீர்கள் என்பதைதான் நான் சொல்கிறேன். எல்லோரும் ஒன்றாக சேர்வதுதான் மாற்றுக்கட்சி.

**தீபம்: அப்படியானால் மாற்றுத் தலைமை என்பது நீங்களா? நீண்ட அரசியல் அனுபவமுள்ள நீங்கள், மாற்றுத் தலைமையாக உங்களை உங்களது அரசியலை கருதுகிறீர்களா?**

**ஆனந்தசங்கரி:** கட்சிக்குள் நான் வரலாமென்பதை சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்றவர்கள் சொல்லலாம். நான் சொல்ல முடியாதே. ஆனால் அவர்களிற்கும் தலைமையில் கண் வைத்துவிட்டார்கள். மாற்று தலைமை நான்தான் என நான் சொல்ல முடியாது. நான் எதற்கு ஆசைப்படவில்லை. மாவை சேனாதிராசாவிற்கு இரண்டு முறை எம்.பி பதவியை விட்டுக்கொடுத்தவன் நான்.

வேலையைத்தான் இப்போது செய்து கொண்டிருக்கிறார்கள். புலிகளை பற்றி பேசி வாக்கெடுத்து விடலாமென கூட்டமைப்பு நினைக்கிறதே ஒழிய, உருப்படியான ஒன்றையும் செய்யவில்லை.

தமிழ் அரசியல்கட்சிகளை ஒன்றுசேருமாறு 2004 ஜனவரியில் ஒரு அறிக்கை வெளியிட்டேன். 2005 ஜனாதிபதி தேர்தலில் சமஷ்டி தருவதாக ரணில் சொன்னார். அவருக்கு 49.5 வீத சிங்கள வாக்குகள் கிடைத்தது. தமிழரசுக்கட்சி ரணிலுக்கு எதிராக வேலை செய்தது. தமிழர்கள் அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தியிருந்தால், பிரச்சனையை தீர்த்திருக்கலாம். முட்டாள்தனமான வேலை பார்த்து கவிழ்த்து கொட்டிவிட்டார்கள்.

இரண்டு அரசியல்சாசனம் உருவாக்கிய போது பாராளுமன்றத்தில் இருந்தவன் நான். நான் ஜனாதிபதியிடம் சொல்லியுள்ளேன் உங்களால் அரசியல் சாசனம் உருவாக்க முடியாதென. மூன்றில் இரண்டு பெரும்பான்மையுள்ள சிறிமாவோவால் முடியாததை செய்ய முயலாதீர்கள் என்றேன். எந்தெந்த பிரச்சனைகளை தீர்க்க வேண்டுமென விரும்புகிறீர்களோ அதை மட்டும் திருத்தச் சட்டங்களாக கொண்டு வாருங்கள் என்றேன். தென்னாபிரிக்காவில் சிறந்ததொரு அடிப்படை உரிமை சட்டமுள்ளது. அதை அப்படியே அமுல்படுத்தினால் காணிப்பிரச்சனை, வேலையில்லா பிரச்சனை உட்பட எல்லாவற்றிற்கும் தீர்வாக அமையும். இதற்குமேல் போக இந்தியா விடாது. அதனால் இந்த அரசியல் சாசன முயற்சி வெற்றியளிக்காது.

**தீபம்: நீங்கள் என்னதான் சொன்னாலும், கடந்த தேர்தல்களில் மக்கள் அங்கீகாரம் உங்களிற்கு கிடைக்க**




செல்வநாயகம், பொன்னம்பலம் போன்றவர்களால் உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக்கூட்டணி இருக்கிறது. அதில் எல்லோரும் இணைந்து செயற்படுங்கள். பிறேகேன் புதுக்கட்சி தேடி போக வேண்டும்? நான் தேவையில்லை என்றால் ஒதுங்கிச் செல்கிறேன்.




▶ முல்லைத்தீவு புதுக்குடியிருப்பை சேர்ந்த நான்கு மாவீரர் குடும்பங்களிற்கு வாழ்வாதார உதவிகளை வழங்கியுள்ளார், சுவிற்சர்லாந்தில் வசிக்கும் சந்திரமோகன். உதவும் இதயங்கள் அமைப்பின் ஊடாக வழங்கப்பட்ட இந்த உதவியை, வலிவடக்கின் முன்னாள் தவிசாளர் சஜீவன் வழங்கி வைத்தார்.



▶ அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டியில் தேசிய மட்ட நாடகப்போட்டியில் மட்/மமே/ காரடியனாறு மகா வித்தியாலய மாணவர்கள் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளனர்.




## ஓடினார்கள்... ஒளிந்தார்கள்

# பிக்பொஸ்

### இது பார்ட் - ii

காட்டுப்பூச்சி

ஒரு பிக்பொஸ் நிகழ்ச்சி ஹிட் அடித்தால் போதும். வெவ்வேறு மொழிகளில் தயாரிப்பார்கள். போதாததற்கு, பிக்பொஸ் வீட்டிற்குள் உள்ள புதுப்புது கட்டுப்பாடுகள், நடத்தை முறைகள் சேர்த்து அடுத்த வெர்சன் எடுத்து விடுவார்கள். மொத்தத்தில் யாரோ ஒரு பிக்பொஸ் உண்மையிலேயே ஒளிந்திருக்கிறார் என மக்களை நம்ப வைத்து விடுவார்கள்.

கடந்தவாரம் ஒரு பிக்பொஸ் நிகழ்ச்சி நடத்தியிருந்தோம் இந்தவாரமும் பிக்பொஸ் இருக்கிறது. அதே வெர்சன்தான். நூறுநாள் இந்த வீட்டிற்குள்ளேயே குப்பைகொட்ட வேண்டும். முப்பது கமராக்கள் இரவு பகலாக கண்காணிக்கின்றன. முக்கியமாக பிக்பொஸ் ஒருவர் போட்டியாளர்களை தொடர்ச்சியாக கண்காணித்துக் கொண்டிருப்பார். பிக்பொஸ் தொடர்ச்சியாககண்காணித்துக்கொண்டிருக்கிறாரா, யார் அந்த பிக்பொஸ் என்பதையெல்லாம் நீங்கள்தான் ஊகித்துக்கொள்ள வேண்டும்.

**டிக்ளஸ் மேவானந்தா:** பிக்பொஸ் வீட்டின் ஒரு பகுதியில் இயற்கையான தரைத்தோற்றம் இருந்தது. அங்கே மணல் குவிக்கப்பட்டிருந்தது. உடனே பிக்பொஸ்ஸை தொடர்புகொண்டு மணல் ஏற்ற அனுமதி கேட்டார். கமராவில் பலர் பார்த்திருக்க மண் பிஸ்னஸ் செய்யக் கூடாதென கடிந்துகொண்டார் பிக்பொஸ். ஓரிஜினல் பிக்பொஸ்ஸில் கவிஞர் சினேகன் தமிழ் சொல்லிக்கொடுத்தார். இங்கு இவர்தான் தமிழ் சொல்லிக் கொடுத்தார். உப்புத் தின்றால் தண்ணீர் குடிக்கத்தான் வேண்டும், அழுதாலும் பிள்ளையை அவள்தான் பெற வேண்டுமென கன்னாபின்னா தத்துவ பழமொழிகளை சொல்லிக்கொடுத்து தமிழ் புலமையை நிரூபித்தார். போதாதற்கு பிக்பொஸ்ஸையும் அழைத்து தமிழ்சொல்லிக் கொடுத்தார். பிக்பொஸ் முன்னர் "ஆன்பான தெழிள் மக்ளே.. பாயங்காரவாதத்தை ஒழித்தேன்" என செந்தமிழில் பேசபவர்தானே. அவரது வாயில் தமிழ் தட்டுப்பட, வீடே அதிர்ந்தது. பிக்பொஸ் தமிழ் பேசிவிட்டார், நமக்கு இனி என்ன குறைஞ் ஆடி போய் ஆவணி வந்தால் மினிஸ்டர் போஸ்ற்தான் உச்சி குளிர்ந்தார்கள் நிகழ்ச்சியை பார்த்துக்கொண்டிருந்த தோழர்கள்.

**திநாயகமூர்த்தி குரளிதரன்:** பிக்பொஸ் வீட்டுக்குள் நுழைந்ததில் இருந்தே, பிக்பொஸ் போல ஒருவர் கிடைப்பாரோ என புகழ்ந்தபடியே இருந்தார். உட்கார்ந்தால், எழுந்தால், சாப்பிட்டால், தூங்கினால், சண்டை பிடித்தால் என எதை செய்தாலும், பிக்பொஸ்ஸை புகழ்ந்தபடியே இருந்தார். வீட்டுக்குள் இருந்த பிரச்சனையை அவர்தான் தீர்த்தார், அதனாலே பிக்பொஸ்ஸை எல்லோரும் குறிவைக்கிறார்கள் என நிகழ்ச்சிக்கு சம்பந்தா சம்பந்தமில்லாமல் எல்லாம் பேசிக்கொண்டிருந்தார். நமக்கு வாய்த்த அடிமைகளில் மிகச்சிறந்த அடிமை இதுதான் என பிக்பொஸ்ஸே மெய்சிலிர்த்துப் போகும் அளவிற்கு விசுவாச விசுவலிங்கமாக இருந்தார். சக போட்டியாளர்கள்தான், வாங்கின காசுக்கு மேலாக கூவுறானே என உள்ளுக்குள் எரிந்து கொண்டிருந்தனர். பிக்பொஸ் வீட்டிற்குள் இருந்த தலைவரை கவிழ்ப்பதற்கு, இன்னொருவருடன் டீல் பேசி வழக்கமான தனது அக்மார்க் முத்திரையையும் பதித்தார்.

**கோனந்தபங்கரி:** பிக்பொஸ் நிகழ்ச்சி திட்டமிடப்பட்டபோதே, நிர்வாகத்திற்கு கடிதத்திற்கு மேல் கடிதம் எழுதி இடம்பிடித்தவர். எதைக் கேட்டாலும் "எழுபது வருசமாக பீல்ட்ல இருக்கிறன்" என்றுதான் பதில் சொன்னார். பிக்பொஸ் வீட்டு தலைமை தனக்குத்தான் தரப்பட வேண்டும் என அடம்பிடித்தார். வயசான காலத்தில் ஓரமாக உட்காருங்கள் என மற்றவர்கள் சொல்லியும் கேட்காமல், எல்லா விளையாட்டிலும் கன்னை பிரிக்க நின்றார். என்டர்ரெயின்ற்மென்ற் விளையாட்டுக்களில் மட்டும் யாராவது சிலர் இவரை சேர்த்துக்கொண்டாலும், சீரியசான விளையாட்டுக்களில் காய் வெட்டி விட்டனர். வெறுத்துப் போனவர், தானே ஒரு அணியுடன் களமிறங்கி வதைபட்டார். அதற்கு பிறகு ஐம்பது வருசத்திற்கு முன்னைய ப்ரெண்ட் என ஒருத்தரை கண்டு, கட்சியை பொறுப்பெடுங்கள் என வாங்கின கடனை வசூலிக்க திரிந்தவரை போல பின்னாலும் முன்னாலும் திரிந்தார். அடிக்கடி "நான் பிக்பொஸ்ஸையே திட்டினவன். என்கிட்டயா? ஒத்தைக்கு ஒத்தை வரியா?" என பேட்டை ரௌடி மாதிரி நாக்கை துருத்திக்கொண்டுமிருந்தார். எந்த ஐடியாவும் கைகொடுக்காத நிலையில், கடைசியில் மூலையில் உட்கார்ந்து கட்சியை பொறுப்பேற்கச் சொல்லி ஒரு நாளைக்கு ஒன்பது கடிதம் வீதம் பிக்பொஸ்ஸிற்கு அனுப்பிக்கொண்டிருந்தார்.


**மசில் தாஜபக்ச:** வீதியால் நடந்து சென்றாலே அடிக்கொரு சிசிடிவி கமரா பொருத்தி கண்காணிக்க வேண்டும். இட்ட அடிக்கும் எடுத்த அடிக்குமிடையில் உள்ள சரளைக்கல்லை கூட ரெண்டர் கோல் பண்ணி, பத்துவீத கொமிசன் வைத்து தள்ளிவிடக்கூடியகில்லாடி. அண்ணனின் பெருமைகள் அப்படி. முப்பது கமராக்கள் எம் மாத்திரம்? போதாதற்கு பிக்பொஸ்ஸே பிக் பிரதர் என்றால்? நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களிற்கிடையில் தானே ஒரு போட்டி வைக்கப் போவதாக அறிவித்தார். பிக்பொஸ்ஸின் பிரதர் ஆயிற்றே... எல்லோரும் கைகட்டி நின்றனர். 30 சிசிடிவி கமராக்கு டென்டர் கோல் பண்ணினார். பிக்பொஸ்ஸே ஆடிப்போய் விட்டார். எல்லோரும் நிகழ்ச்சியில் மும்முரமாக இருக்க, வீட்டிற்குள் இருந்த பொருட்களை விலை மதிப்பிட்டபடி இருந்தார். வீட்டுக்குள் ஒரு போட்டி வைத்தார்கள். ஒவ்வொருவரும் ஏதாவது பொருள் செய்து காட்ட வேண்டும். ஆளாளுக்கு ஒவ்வொன்றை செய்து காட்டினார்கள். நம்மாள் மட்டும் ஒரு பில்லை செற்றில் பண்ணினார். என்ன பில் என்று பார்த்தால்ஞ் பிக்பொஸ் வீட்டுக்குள் காப்பெற் றோட் போட்டாராம்!

**பிஸ்புல்லாஹ்:** பிக்பொஸ் வீடு சவுதி அரேபிய வீட்டுப்பாணியில் அமைந்திருக்க வேண்டுமென அடம்பிடித்தார். வீடு இலங்கை முறையில்தான் அமையும், நீங்கள் சவுதி முறையில் வாழலாமென சொன்ன பின்னர்தான் நிகழ்ச்சிக்கு வந்தார். சிசிரிவி கமரா உள்ள பகுதியில் சவுதி பாணியிலும், கமரா இல்லாத பகுதியில் ஐரோப்பிய பாணியிலும் நடந்துகொண்டார். கேட்டால் "அரசியல்ல இதெல்லாம் சகஜமப்பா" என்றார். நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்னரே சவுதி செல்வந்தர் ஒருவருடன் வீட்டுக்குள் பேரீச்ச மரங்கள் வைக்க பேசினார். செல்வந்தர் கொடுத்தது பத்து மரம். "நான் ஒரு தடவை வைச்சால் அது பத்து தடவை வைச்ச மாதிரி"என பஞ்ச் பேசி ஒரு மரத்தை மட்டும் நாட்டினார். பிக்பொஸ் வீட்டுக்குள் நடந்த தேர்தலில் தோற்றுபோனார். ஆனாலும், எப்படியோ வென்றதாக அறிவிக்கப்பட்டது. சவுதி செல்வந்தர் ஒருவர் பிக்பொஸ்ஸிடம் கொடுக்க வேண்டியதை கொடுத்து, முடிவை மாற்றி வெளியிட்டதாக ஒரு பேச்சு எழுந்தது.

பிக்பொஸ் நிகழ்ச்சி இப்படியே தாறுமாறு தக்காளிச் சட்னியாக போய்க் கொண்டிருக்க, ரசிகர்கள் காறித்துப்பிவிட்டு எழுந்து போகத் தொடங்கி விட்டார்கள். பிக்பொஸ் கவிழ்ந்து கொட்டுப்பட்டது. பொஸ்ஸாக இருந்தேனே தவிர, உள்ளே என்ன நடக்கிறதென எட்டிப்பார்க்காமல் விட்டு விட்டேனே என பிக்பொஸ் புலம்பிக்கொண்டு கோயில்கோயிலாக படியேற தொடங்கினார்.

# மக்கள் கலைஞன் வீர சந்தானம்

பால்நிலவன்



வீர.சந்தானம் எனும் ஓவியப் புயல் கரையைக் கடந்துவிட்டது. கும்பகோணத்தில் ஓவியக்கல்லூரி மாணவராக தொடங்கிய கலைவாழ்க்கையிலிருந்தே தமிழ் நிலப்பரப்பில் மிகப்பெரிய தாக்கத்தை உருவாக்கியவர் அவர்.

சாதாரணமாக கவிதை புத்தகங்களைப் பார்த்தால் முதலில் கவனத்தை ஈர்க்கக் கூடியது ஓவியங்கள்தான். வழக்கமான புத்தகங்களிலிருந்து இது மாறுபட்டது என்பதைத் தெரிவிக்கும் வகையிலான இந்த ஓவியங்களை சில புத்தகங்களைக் காணும்போது 'அட வித்தியாசமாக உள்ளதே' என்று புத்தகத்தைப் புரட்டிப் பார்க்க வைத்துவிடும்.

ஆனால் கலைநுட்பத்தோடு தீட்டக் கூடிய சிரத்தைமிகுந்த இந்தக் கோட்டோவியங்களுக்குச் சொந்தக்காரர்களை அவ்வளவாக நாம் ஏனோ கண்டுகொள்வதில்லை.

நான் பல நல்ல புத்தகங்களை உண்மையில் அதன் இலக்கிய அடர்த்திக்காக மட்டும் அல்லாமல் அந்த ஓவியங்களுக்காகவும் நேசித்தது உண்டு. இந்நாட்களில் அட்டைப்படங்கள் கிராபிக்ஸ் வடிவமைப்பில் வெளியாகும் புத்தகங்கள் பெருமளவில் ஈர்க்காமல் போனதற்கும் இதுவும் ஒருகாரணமாக இருக்கலாம். அப்படியே அந்த ஓவியங்களை நேசித்தாலும் அதை வரைந்தவர்கள் பற்றி அறியும் ஆர்வம் ஏதும் இல்லாமல் கடந்துவந்த அந்த நாட்களை சற்றே குற்ற உணர்ச்சியோடு நினைத்துப் பார்க்க வேண்டியுள்ளது.

உடனே நினைவுக்கு வரவில்லையென்றாலும் இலங்கை எழுத்தாளர் கே.டேனியலின் நூல்கள் அனைத்தும் மறுபிரசுரம் செய்யப்பட்டபோது அதற்கான ஓவியங்களை வீர.சந்தானம் வரைந்திருந்ததை ஒருசேர காணநேர்ந்தது. அழுத்தப்பட்ட மக்களின் கைகள் கூட்டத்திலிருந்து முஷ்டியை உயர்த்தும் வீறுகொண்ட எழுச்சியை அந்த புத்தகங்களில் வரைந்திருப்பார்.

அவரது ஓவிய ஆர்வம் கலைஈடுபாட்டுக்கெல்லாம் காரணம் என்னவென்று அறிய முயன்றபோது இரண்டு செய்திகள் கிடைத்தன. ஒன்று அவர் கும்பகோணம் உப்பிலியப்பன் கோவிலில் பிறந்தது. இரண்டாவது அவர் கூலித்தொழிலாளியின் மகனாக வளர்ந்தது.

குடந்தையின் அத்தனை கோயில்களும் சைவ, வைணவ தெய்வங்கள் வீற்றிருக்கும் கோயில்கள் மட்டுமல்ல. அவை அத்தனையும் கலைக்கோயில்கள். சாரங்கபாணி கோயிலில் உள்ள சுற்றுப்பிரகார 300 இராமாயண கதை. சுதை ஓவியங்களை எத்தனைமுறை வேண்டுமானாலும் சென்று ரசிக்கலாம்.

அதேபோல குடந்தையின் தாராசுரத்தின் ஐராவதீஸ்வர் கோயில் பிரகாரத்தில் நடந்துசெல்லும்போது மனம் சஞ்சலத்தில் திக்குமுக்காடும். இந்த அற்புத சிற்பங்களைச் செதுக்கிய கலைஞன் எங்கே யார் அவன் அவர் பெயரைத் தெரிந்துகொள்ளமுடியவில்லை என்றெல்லாம் நம் மனம் ஆர்ப்பரிக்கும். பொதுவாக தஞ்சை, அதிலும் குடந்தை ஒரு சிறந்த கலைஞனை ஈன்றெடுத்ததில் எந்தவித வியப்பும் இல்லை.

அதிலும் குடந்தை ஓவியக்கல்லூரி நல்ல ஓவியர்களைத் தந்த மிகச்சிறந்த கல்லூரி. அங்கிருந்து வந்த வீர.சந்தானத்தின் ஓவியங்கள் பெரும்பாலும் மையநீரோட்ட ஆன்மிக தாக்கம் இன்றி நாட்டார் கலைஅம்சங்களை அடிப்படையாகக் கொண்டே வெளிப்பட்டன.

இளவயதிலேயே மும்பையில் உள்ள நெசவாளர் பணிமையத்தில் வடிவமைப்பாளராக பணியில் சேர்ந்த வீரசந்தானம், தமிழினத்திற்கான போராட்டங்களில் தன்னை ஐக்கியப்படுத்தி கொள்வதற்காக விருப்ப ஓய்வு பெற்றார்.

ஓவியங்கள் பதிந்த அளவுக்கு அவரது பெயர் பதியாத நாட்களுக்கு அப்புறம் சில காலம் கடந்து அவரைக் காணநேர்ந்தது. சில பத்தாண்டு காலமாகவே காவிரி நீர், இலங்கைத் தமிழர் பிரச்சனை, மீனவர் பிரச்சனை, கனிம வள சுரண்டல்களினால் தமிழகம் பெரும்பாலும் தார்மீக எழுச்சியின் களமாகவே இருந்து வந்துள்ளது.

அப்படியான ஒரு சிந்தனையாளர் அரங்கத்தில் ஒரு சிங்கம் கர்ஜித்துக் கொண்டிருந்ததைக் காண நேர்ந்தது. சக நண்பர் பின்னாளில் பாடலாசிரியராக பரிணமித்த கவிஞர் யுகபாரதியோடு கூட்டத்திற்கு வெளியே நின்று பேசிக் கொண்டிருந்தபோது அவர் வந்தார். அவர் உண்மையில் யாரென்று தெரியாதநிலையில் அவரது உணர்ச்சிவசப்பட்ட பேச்சை விமர்சன ரீதியாக அல்லாமல் விவாதமாக அவரிடம் நானும் அதே உணர்ச்சிவேகத்தில் உரையாட நேர்ந்தது.

சட்டென்று தம்பி யார் என்று கவிஞராகிய நண்பரிடம் அவரும் என்னைப் பற்றி கேட்க நானும் அவரைத் தெரிந்து கொள்ளவிரும்ப, ஒரே நேரத்தில் அறிமுகப் படுத்தப்பட்டபோது தெரியவந்தது அவர் தான் நான் தொடர்ந்து ஆர்வத்தோடு கவனித்துவந்த எனது ஆதர்ச ஓவியர் வீர.சந்தானம் என்று. மனம் ஒருகணம் துள்ளியது. ஆனால் அந்த நேரத்தில் அவரது ஓவியங்களைப் பற்றி பேசமுடியாமல் விவாதமாகவே அந்த சந்திப்பு வளர்ந்தது.

பின்னர் பலகாலம் அவரைக் காணும் போதெல்லாம் சிக்கலாகிவிடக்கூடாது என்கிற ரீதியில் அவரது நிலைப்பாடுகளைத் தெளிந்து, கவனத்தோடு உரையாடுவேன். ஆனால் ஏனோ அவரது ஓவியங்களைப் பற்றி அவருடன் பேச சந்தர்ப்பமே வாய்க்காமல் போய்விட்டது.

ஏற்கெனவே "சந்தியா ராகத்"தில் அவர் ஓவியராகவே நடித்திருந்தாலும் பின்னர் பரவலாக பல்வேறு கதாபாத்திரங்களில் திரையில் வெளிப்பட ஆரம்பித்தார். "அவள் பெயர் தமிழரசி"யில் என்றென்றும் மறக்கமுடியாத பாத்திரத்தை வீரசந்தானத்திற்காக செதுக்கித் தந்திருப்பார் இயக்குநர் மீரா.கதிரவன்.

பாவைக்கூத்து எனும் பாரம்பரிய கலையை பசியிலும் வறுமையிலும் வளர்த்தெடுக்கும் ஒரு மனிதராக அப்படத்தில் வருவார். காலமாற்றம் அக்கலையை மறந்து வேகமாக செல்லும்போது அதை நம்பியிருந்த கலைஞர்களும் வாழ்க்கையிலிருந்து தூக்கியெறிப்படும்விதமான அமைந்த அவரது பாத்திரம் மனதை விட்டு அகலாதது. அதில் கலைவாழ்வின் உண்மைத்தன்மையை உணர்ந்த அவரது பங்களிப்பு நினைக்கும் போதெல்லாம் நெஞ்சை கனக்கச் செய்யக்கூடியது.

**இளவயதிலேயே மும்பையில் உள்ள நெசவாளர் பணிமையத்தில் வடிவமைப்பாளராக பணியில் சேர்ந்த வீரசந்தானம், தமிழினத்திற்கான போராட்டங்களில் தன்னை ஐக்கியப்படுத்தி கொள்வதற்காக விருப்ப ஓய்வு பெற்றார்.**

உடைந்து கிடக்கும் சமூகங்களை ஒன்றாக இணைக்கும் முயற்சியின் அரசியல் இணைப்புப் பாலமாக அவர் திகழ்ந்ததை தமிழகம் மறக்காது. ஆனால் அதன்பிறகு நேர்ந்த காதல் மறுப்பு எனும் சாதிஆதிக்கப் போக்குகள் அந்த இயக்கங்களை என்றென்றும் ஒன்றாகிவிடாமல் ஆக்கிவிட்டன. இதையெல்லாம் கண்டு எப்படி அவரது மனம் கொந்தளிக்காமல் இருக்கமுடியும்.

பிற ஓவியர்களைப் போல கலையை வெறும்தொழில்சார்ந்த கைவினைப்பேறாக அவர் கருதவில்லை. மக்கள் சமூகத்துக்கு அப்பால் இருந்துகொண்டு உப்பரிகையில் அமர்ந்தும் தூரிகையை எடுத்தவரில்லை அவர். வாழ்வின் நெரிசலில் புழங்கியவாறே அவர் தனக்கான நண்பர்களைக் கண்டடைந்தார்.

அதன்வழியேதான் சமூக இயக்கங்கள், அரசியல் வெளி வட்டங்கள், திரைத்துறைப் பயணங்கள் யாவும் அவருக்கு பாதை அமைத்துத் தந்தன. அப்படியாகத்தான், இன்று விழிப்படைந்துள்ள இளைய சமுதாயமே கண்ணீர் விட்டு அவரை வழியனுப்பிவைக்கும் அவரது இந்த இறுதிப் பயணமும் கூட.







# சின்னத்திரை



## காய்த்ரிகாக மன்னிப்பு கேட்ட அம்மா!

விஜய் டிவியின் பிக் பாஸ் நிகழ்ச்சி எதிர்பார்த்ததை போலவே நாளொரு பரபரப்பை கிளப்பிக் கொண்டிருக்கிறது. டி.ஆர்.பிக்காகத்தான் இப்படி செய்கிறார்கள், முன்கூட்டியே திட்டமிட்ட நிகழ்ச்சியென்ற குற்றச்சாட்டுக்கள் ஒரு பக்கம் வந்தபடியிருக்கிறது. நிகழ்ச்சியில் இப்பொழுது அதிகம் சர்ச்சையில் சிக்கியுள்ளது காயத்ரி ரகுராம். நிகழ்ச்சியின் ஒரு இடத்தில் எச்சை என்ற வார்த்தையை பயன்படுத்தினார். இன்னொரு சமயம் சேரி பிஹேவியர் என திட்டினார். இது பரவலான எதிர்ப்பை ஏற்படுத்தியது. இதற்கு காயத்ரியின் அம்மா கிரிஜா மன்னிப்பு கேட்டுள்ளார். தெரியாமல் மகள் அப்படி பேசியிருப்பார் என்றுள்ளார். பிக் பாஸில் கலந்து கொண்டுள்ள மற்றையவர்கள் நடிக்கிறார்கள், எனது மகள் நடிக்காமல் இயல்பாக இருக்கிறாள், அதனால் இப்படி நடந்துவிட்டதென்றுள்ளார்.

## விஜய்யின் பழைய நட்பை நினைக்கும் துளசி!

சன் டிவியின் தென்றல் சீரியலில் துளசியாக நடித்தவர் ஸ்ருதி ராஜ். இப்பொழுது அபூர்வ ராகங்கள் சீரியலில் பவித்ராவாக நடித்து வருகிறார். விஜய் சினிமாவில் புகழ்பெற ஆரம்பித்த சமயத்தில் சிறுமியாக நடிக்க ஆரம்பித்துள்ளார் இவர். விஜய் நடித்த மாண்புமிகு மாணவன் படம்தான் இவரது முதல்படம். அப்பொழுது விஜய் தன்னுடன் பாசமாக பழகியதாக கூறியுள்ளார். தங்கை இறந்த சோகத்தை தன்னுடன் விஜய் பகிர்ந்துகொண்டதாகவும் கூறியுள்ளார். விஜய் வீட்டிற்கே சென்று பிறந்தநாள் வாழ்த்தெல்லாம் கூறி, பெற்றோருடன் ஒன்றாக இருந்தாராம். பின்னர் தான் படிப்பில் கவனம் செலுத்த ஆரம்பித்தபின், அந்த தொடர்பு இல்லாமல் போய் விட்டதென்றும், விஜய் தன்னை நினைவில் வைத்திருப்பாரோ தெரியாதென்றும் கூறியுள்ளார். அவரை மீண்டும் சந்தித்து பழைய நினைவுகளை பேசவிரும்புவதாக கூறியுள்ளார்.



## பொம்மை வாங்கும் ஹீரோ!

விஜய் டிவியின் கிங்ஸ் ஒவ் கொமடி நிகழ்ச்சியில் ஹீரோ கெட்டப்பில் வந்து அசத்திக்கொண்டிருப்பது சுசீல். முன்னணி நடிகர்களின் முக்கிய வேடங்களில் வந்து அசத்திக்கொண்டிருக்கிறான். தற்போது முதலாம் வகுப்பில் படிப்பவர், 300 இற்கும் மேற்பட்ட டப்மாஷ் செய்துள்ளானாம். சினிமா பார்ப்பதென்றால் சாப்பாடு, தூக்கமில்லாமல் உட்கார்ந்து விடுவான் என பெற்றோர் தெரிவித்துள்ளனர். ஜல்லிகட்டு போராட்டத்தில் தினமும் கலந்து கொண்டுள்ளானாம். நிகழ்ச்சியில் கிடைக்கும் பணத்திற்கு முழுமையாக பொம்மை வாங்கிவிடுவானாம். நிறைய படவாய்ப்புக்கள் வந்து கொண்டிருந்தாலும், படிப்பு கெட்டுவிடும் என ஏற்றுக்கொள்ளவில்லையென்கிறார்கள் பெற்றோர். கிங்ஸ் ஒவ் கொமடி நிகழ்ச்சி முடிந்த பின்னர் சினிமாவில் நடிப்பதை பற்றி பரிசீலிக்கலாமென்றுள்ளனர்.



## மருகள் ரகசியத்தை சொல்லும் தெய்வத்திருமகள்!

விஜய் டிவியில் பகல் நிலவு சீரியலிலும், சன் டிவியின் தெய்வத் திருமகள் சீரியலில் பொறுமையான மருமகள் திவ்யா பாத்திரத்திலும் நடித்து வருகிறார் சிந்து ஷியாம். இப்படியொரு மருமகளை பார்க்க முடியுமா என ரசிகர்களே அவரை பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். சில நேரங்களில் மிக பொறுமையாக நடிப்பதை போன்ற காட்சிகளில் தன்னைப்பார்த்து தனக்கே பாவமாக இருப்பதாக அவர் கூறியுள்ளார். தனது பாத்திரத்தை இயக்குனர் அப்படி வடிவமைத்துள்ளார், அதற்கு நியாயம் செய்யும்விதமான நடிப்பை வெளிப்படுத்துவேன் என்றுள்ளார். சினிமாவிலும் நடித்து வருகிறார். என்றாலும், சினிமாவை விட சீரியலில் நடிப்பதன் மூலமே மக்களுடன் விரைவில் நெருக்கமாகலாம் என்றுள்ளார்.

## ஹாய் மட்டும் சொன்ன காஜலும் அக்சராவும்!

அஜித்தின் விவேகம் ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. ஹொலிவூட் தர தொழில்நுட்பத்தில் படம் தயாரிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. தற்போது இறுதிக்கட்ட பணிகள் நடந்துவரும் நிலையில், முக்கிய காட்சிகளை பார்த்த அஜித் தனது திருப்தியை வெளியிட்டுள்ளாராம். படத்தில் அஜித்தின் மனைவி காஜல் அகர்வால். இன்னொரு நாயகி அக்சரா ஹாசன். காஜலைவிட இவருக்கு குறைவான காட்சிகளாம். இருவரும் படப்பிடிப்பில் ஒன்றாக சந்தித்ததும் மிகக்குறைவாம். ஏற்கனவே இவர்களிற்குள் அறிமுகம் இருக்கவில்லை. இதனால் படப்பிடிப்பில் சந்தித்தபோது ஹாய் சொல்லியதுடன் நிறுத்திக்கொண்டு விட்டனராம். கடைசிநாள் படப்பிடிப்பு முடிந்து விடைபெற்றபோது, ஒரு செல்பி எடுத்துக்கொண்டு விடைபெற்று சென்றுவிட்டனராம்.

## தனுஷின் குடும்பத்தில் பிரச்சனையில்லையாம்!

தனுஷின் "3" படத்தின் மூலம் இயக்குனராகியவர் அவரது மனைவி ஐஸ்வர்யா. அடுத்து வை ராஜா வை படத்தை இயக்கினார். ஐஸ்வர்யாவின் தங்கை சௌந்தர்யா, கோச்சடையான், வேலையில்லா பட்டதாரி 2 ஆகிய படங்களை இயக்கினார். இதில் தனுஷ் நடிப்பதுடன், படத்தயாரிப்பு பணிகளையும் கவனித்து கொள்கிறார். இதன் பாடல் வெளியீடு அண்மையில் மும்பையில் நடந்தது. கடந்தவாரம் சென்னையில் பத்திரிகையாளர் சந்திப்பும் நடந்தது. இந்த நிகழ்ச்சிகளில் தனுஷ், சௌந்தர்யா, கஜோல் பங்குபற்றினர். ஆனால் இரண்டு நிகழ்விலும் தனுஷின் மனைவி ஐஸ்வர்யா கலந்துகொள்ளவில்லை. இதையடுத்து தனுஷின் குடும்பத்தில் புகைச்சல் என்ற செய்தி பரவியது. அதற்கு சௌந்தர்யா ஒரு விளக்கம் கொடுத்துள்ளார். புதிய படமொன்றிற்காக ஸ்கிரிப்ட் எழுதும் பணிகளில் தீவிரமாக இருப்பதால் கலந்துகொள்ளவில்லை, குடும்பத்தில் எந்த பிரச்சனையும் இல்லையென்றுள்ளார்.

## சமந்தா காதலில் குண்டுபோட்ட வில்லன்!

நாகசைதன்யா சமந்தா திருமணம் வரும் ஒக்ரோபரில் நடக்கவுள்ளது. நாகசைதன்யா ரேஸ் பைக், ரேஸ் கார் பிரியர். சமந்தா அண்மையில் நாகசைதன்யாவிற்கு ரேஸ் பைக் பரிசளித்திருந்தார். இந்தநிலையில் அண்மையில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தார். பாகுபலி வில்லன் ராணாவும் கலந்து கொண்டு, நாகசைதன்யாவை சிக்கவைக்கும் கேள்விகள் கேட்டார். நாகசைதன்யாவிற்கு மிகவும் பிடித்தது எதுவென கேட்டு, இரண்டு தெரிவுகள் கொடுத்தார். ஒன்று சமந்தா, மற்றையது பைக். இந்த கேள்வியால் திணறிப்போன சைதன்யா, பின்னர் சமாளித்துக்கொண்டு பதிலளித்துள்ளார். "சமந்தா எனக்கு வீட்டில் முக்கியம். வீட்டைவிட்டு வெளியில் போனால் பைக் முக்கியம்" என பதில்சொல்லி, தப்பித்துக்கொண்டார்.

## கடைசியில் பிகினியை நம்பிய நடிகை!

படவாய்ப்புக்கள் இல்லாத நடிகைகள் கவர்ச்சிப்படங்களை வெளியிட்டு நம்மை திரும்பிப்பார்க்க வைப்பது வழக்கம். இதைதான் பல நடிகைகள் செய்து வருகிறார்கள். ரியா சென்னும் இந்த உத்தியை பயன்படுத்தியுள்ளார். தமிழில் தாஜ்மஹால் படத்தில் நடித்தார். பின் பிரசாந்துடன் குட்லக்கில் நடித்தார். அதன்பின் தமிழில் வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. இந்திக்கு சென்று முன்னணி நடிகையாக இடம்பிடித்தார். தற்போது அங்கும் மார்க்கெட் டல் அடிக்க தொடங்கியுள்ளது. இந்த நிலையில் தனது பிகினி படத்தை அண்மையில் வெளியிட்டுள்ளார். இது தற்போது வைரலாக பரவி வருகிறது. இந்த படத்திற்காகவே சில படவாய்ப்புக்கள் கிடைக்குமென அவர் எதிர்பார்க்கிறாராம்.





## கத்தி கூட்டணி மீண்டும் சேர்கிறது!

சினிமாவில் ஒரு கூட்டணி வெற்றிகரமாக அமைந்துவிட்டால் அதை தொடர்வது வழக்கம். காலம்காலமாக அதுதான் நடக்கிறது. இதற்கு சமீபத்திய நல்ல உதாரணம் அஜித், சிவா. வீரம், வேதாளம், விவேகமமென ஒன்றாக பயணிக்கிறார்கள். இந்த போர்முலாவை இப்பொழுது விஜய் பின்பற்ற ஆரம்பித்துள்ளார். தெறி படத்தின் பின் மெர்சல் படத்தில் அட்லீயுடன் இணைந்துள்ளார். துப்பாக்கி, கத்தி படங்களின் பின் ஏ.ஆர்.முருகதாசுடன் அடுத்து இணைய உள்ளார். இவர்களுடன் அனிருத்தும் இணையவுள்ளார். கத்தி கூட்டணியே நன்றாக இருக்குமென தயாரிப்பாளர் தரப்பில் விரும்பியதால், இந்த கூட்டு உருவாகியுள்ளதாம். முருகதாஸ் தற்போது இயக்கும் ஸ்பைடர் படம் செப்ரெம்பர் மாதத்தில் முடிந்ததும், விஜய் பட வேலைகள் ஆரம்பிக்கவுள்ளதாம்.

# நாவலரும் சைவ வெள்ளாள மேலாதிக்கமும்

அருளினியன்

யாழ்ப்பாணத்தை சேர்ந்த அருளினியன் தற்போது இந்தியாவில் பத்திரிகையாளராக பணிபுரிகிறார். கேரளாவின் பல்வேறு பகுதிகளிற்கும் சென்று அவர் எழுதிய தொடரின் பகுதி இது.



வெரிய பம்பல் என்னவென்றால், தடித்த இந்து மனுதர்மக் கோட்பாட்டின் பிரகாரம் சூத்திரர்கள் என்ற அடிமட்ட சாதிப் படிநிலைக்குள்தான் வெள்ளாளர்கள் அடக்கப்பட்டுள்ளனர். எங்களது சாதிமான்களின் ஈகோவைச் சீண்டும் விஷயம் இது. வர்ணத்தின் அடிப்படையில், விவசாயம் செய்யும் வெள்ளாளர்களை, மனுதருமம் இறுதி நிலையிலேயே வைத்துள்ளது . மனுதருமத்தின் பிரகாரம், பிராமணர்கள், போர் செய்யும் சத்திரியர்கள், வணிகம் செய்யும் வைஷிகர்களுக்குப் பிறகே, விவசாயம் செய்யும் வெள்ளாளர்கள் வருகிறார்கள். தனக்கு மேலுள்ள மூன்று வர்ணத்தினருக்கும் சேவை செய்வதுதான் சூத்திரர்களான வெள்ளாளரின் கடமை என்கிறது மனுதர்மம்.

ஒடுக்கப்பட்ட மக்கள் இந்த மனுதர்மத்தின் எந்தப் பிரிவுகளுக்கும் அடங்குவதில்லை. அவர்களை தீண்டத்தகாதவர்களாக, வர்ண முறைகளுக்குள் அடங்காத அவர்ணர்கள் எனப் பழிக்கிறது மனுதர்மம். ஆதி இந்து வாழ்க்கையில் இல்லாத சாதி வேறுபாடுகளும், ஒடுக்கப்பட்டவர்கள் மீது கொடிய வன்முறை இன்றளவு பிரயோகிக்கப்படவும் இந்து மதத்தில் இடையில் புகுத்தப்பட்ட இந்த மனுதர்மமே மூல காரணமாகிறது.

இந்த மனுதர்மத்தை வெட்டி ஒட்டி கொஞ்சம் டிங்கரிங் செய்து, சூத்திரர்களான வெள்ளாளர்களை உயர்ந்தவர்களாக நிறுவியதுதான் ஆறுமுக நாவலர் செய்த பெரிய சாதிக் கடமையாகும். மனுதர்மத்தில் சூத்திரர்களாக ஒடுக்கப்பட்ட வெள்ளாளர்களை சமூக ஆன்மீக தளத்தில் உயர்ந்தவர்களாக மாற்ற அவர் மனுதர்மத்தின் வழியையே தேர்ந்தெடுத்தார்.

சைவ வினாவிடை உள்பட நாவலரின் நூல்கள், முதல் ஸ்தானத்தை பிராமணர்களுக்கு வழங்கிவிட்டு, இரண்டாவது ஸ்தானத்தை வெள்ளாள சாதிக்கு கொடுக்கின்றன. சிவ தீட்சை என்ற ஒன்றைப் பயன்படுத்தி, சூத்திரர்களான வெள்ளாளர்களை, பிரமாணர்களுக்கு நிகரானவர்களாகக் கட்டமைத்தார். மனுதர்மத்தைப் போல, நாவலரின் சைவப் பிரிவுகளிலும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு இடமே இல்லை. இதனால்தான் சைவ வினாவிடையை நவீன மனுதர்மம் என்கிறேன். ஒடுக்கப்பட்ட மக்கள் சைவர்களாக இருந்தாலும், நாவலரின் சைவ வரைவிலக்கணக்கத்தில் அடங்க மாட்டார்கள். அதாவது நாவலரின் கண்களில், ஒடுக்கப்பட்டவர்கள் சைவர்களும் கிடையாது. மனிதர்களும் கிடையாது.

சூத்திரர்களான வெள்ளாளர்களை, ஆசாரிகளாக்க ஆறுமுக நாவலர் டெக்னிக்கலாக யோசித்தார். சைவ வினாவிடையின் கீழ் வரும் கேள்விகளைப் பார்ப்போம்.

**131. ஆசாரியராதற்கு யோக்கியர் யாவர்?**

பிராமணர் முதலிய நான்கு வருணத்தாருள்ளும், மனக்குற்றங்களும், உடற்குற்றங்களும் இல்லாதவராய், நிகண்டு கற்று, இலக்கியவாராய்ச்சி செய்து இலக்கணமுந் தருக்கமும், நீதிநூல்களு... சிவபுராணங்களும் படித்தறிந்தவராய், தேவார திருவாசங்களைப் பண்ணோடு ஓதினவராய், சைவாகமங்களை ஓதி அவைகளால் உணர்த்தப்படும் நான்கு பாதங்களையும் அறிந்தவராய், சீடர்களுக்கு நல்லொழுக்கத்தையுஞ் சைவ சமயத்தையும் போதித்தலின்கண் அதிசமர்த்தராய் உள்ளவர்.

*134. இன்ன இன்ன வருணத்தார் இன்ன இன்ன வருணத்தாருக்கு ஆசாரியராகலாம் என்னும் நியமம் உண்டோ?*

ஆம். பிராமணர், பிராமணர் முதலிய நான்கு வருணத்தாருக்கும், க்ஷத்திரியர், க்ஷத்திரியர் முதலிய மூன்று வருணத்தாருக்கும், வைசியர், வைசியர் முதலிய இரண்டு வருணத்தாருக்கும், சூத்திரர், சூத்திரருக்குஞ்சங்கரசாதியருக்கும் ஆசாரியராகலாம். இந்நியமங் கிரியாகாண்டத்தின் மாத்திரமேயாம். ஞான காண்டத்திலோ வெனின், நான்கு வருணத்துள்ளும் உயர்ந்தவருணத்தாருக்குத் தாழ்ந்த வருணத்தாரும் ஆசாரியராகலாம்.

134 வது கேள்வியில் சூத்திரியர்களான வெள்ளாளர்கள், பிராமணர்களுக்கும் ஆசாரியாகலாம் எனக் கூறுவதன் மூலம், வெள்ளாள சாதியை சமூக ஆன்மீக தளத்தில் உயர்த்துகிறார். மனுதர்மத்தில் வந்த இந்தியப் பிராமணர்களிடம் "ஒரு சூத்திரியர் உங்களுக்கு ஆசாரியாகலாமா?" எனக் கேட்டுப் பாருங்கள்

டென்சனாகி விடுவார்கள். மனுதர்மத்தை கொஞ்சம் டிங்கரிங் செய்து, தனது வெள்ளாள சாதிக்குத் தகுந்ததுபோல அதை நாவலர் மாற்றிக் கொண்டார். வெள்ளாளர்கள் ஆசாரிகளாகலாம் என நிறுவியதன் மூலமாக, வெள்ளாளர்களை, சைவ ஆன்மீக தளத்தில் உயர்த்தினார்.

ஆறுமுக நாவலர் வாழ்ந்த காலம் அப்படி, சாதிக் கொடுமைகள் நிறைந்த காலம் என்றால், அவர் வாழ்ந்த அதே காலத்தில்தானே வள்ளலாரும் வாழ்ந்தார்? "சாதி வேறுபாடு கூடாது. எல்லோரும் இறைவனின் குழந்தைகள்" என்று சொன்ன வள்ளலாருடன் தானே கொடுக்குக் கட்டிக் கொண்டு போர் செய்தார் நாவலர்.

ஆறுமுக நாவலரோ இல்லை அவரின் அடிப்பொடிகளோ, யாழ்ப்பாண மருத்துவ வரலாற்றில் ஒரு சிறு பங்களிப்பையேனும் வழங்கவில்லை. பணம் கொழுத்த கோவில்களை எல்லாம் கைவசம் வைத்திருந்த நாவலர் அந்தக் கோவில்களை மையமாக வைத்து எந்த விதமான சுகாதாரக் கட்டமைப்புகளையும் ஏற்படுத்தவில்லை. மருத்துவமனை கட்டினால், குறைந்த சாதிக்கும் மருத்துவம் பார்க்க வேண்டி வருமே என நாவலர் ஐயா அங்கலாய்திருக்கலாம். மிஷனரிகளுடன் கொடுக்குக் கட்டிப் போர் செய்த நாவலரும் அவரது அடிப்பொடிகளும் வருத்தம் துன்பம் என்றால் அதே மிஷனரிகளின் மருத்துவமனைக்கே சென்றனர்.

இயற்கை வழிபாடும் சிறுதெய்வ வழிபாடும் நிறைந்திருந்த யாழ்ப்பாணத்தில் எங்களது மண்ணுக்கு சிறிதும் தொடர்பில்லாத ஆகம வழிபாட்டைப் புகுத்தியவரும் நாவலரே. கண்ணகி கோவில்கள், கண்ணகி அம்மன் கோவில்களாக்கப்பட்டன. வேல் கோட்டங்கள், முருகன் கோவில்களாக்கப்பட்டன. பெரும்பாலான சிறுதெய்வக் கோவில்கள் இவரால் ஆகம முறையிலமைந்த பெருங் கோவில்களாக மாற்றப்பட்டன.

சிறுதெய்வ வழிபாடு யாழ்ப்பாணத்தில்

> **சாதிக் கொடுமைகள் நிறைந்த காலம் என்றால், அவர் வாழ்ந்த அதே காலத்தில்தானே வள்ளலாரும் வாழ்ந்தார்? "சாதி வேறுபாடு கூடாது. எல்லோரும் இறைவனின் குழந்தைகள்" என்று சொன்ன வள்ளலாருடன் தானே கொடுக்குக் கட்டிக் கொண்டு போர் செய்தார் நாவலர்.**




இன்று கிட்டத்தட்ட முற்று முழுதாகவே சிதைக்கப்பட்டுவிட்டது. சிறு தெய்வக் கோவில்கள் எல்லாம் ஆகம முறைப்படி அமைந்த பெருந் தெய்வக் கோவில்கள் ஆக்கப்பட்டுவிட்டன. கண்ணகி, ஐயனார், கறுப்பண்ணசாமி, சுடலை முனி, மாடசாமி, கன்னிமார், முனியப்பர், அண்ணன்மார் போன்ற பல சிறுதெய்வங்கள் இவரால் காணாமல் போகச் செய்யப்பட்டன. இதன் மூலம் எமது மண்ணின் ஆன்மாவை நீர்த்துப்போகச் செய்தார்.

எனது பரம்பரை மதம் மாறாமல் நான் இன்னும் ஆதி இந்துவாக இருப்பதற்கு,

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

ஸ்ரீதர் சுவாமிநாதன்



'உரிமைக்குரல்' படத்தில் எம்.ஜி.ஆர். | 'உழைக்கும் கரங்கள்' படத்தில் உழைக்கும் கரங்களுக்கு சொந்தக்காரர்.

எம்.ஜி.ஆர் 100

நெடுந்தொடர் 65

# ஏழைப் பங்காளர்!

**எம்ஜிஆர்.** ஏழைப் பங்காளராகவும் எளியோரின் துயர் துடைப்பவராகவும் படங்களில் நடிப்பார். அதற்குக் காரணம், அடிப்படையிலேயே அவர் ஏழை எளியோருக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். அதனால், தனது குணநலனுக்கு ஏற்பவே, தான் நடிக்கும் பாத்திரங்களை தேர்வு செய்தார். அதோடு, சாதாரண மக்கள், தொழிலாளர்கள், விவசாயிகளுக்கு ஆதரவாக எம்.ஜி.ஆர் பேசும் வசனங்கள் இன்றைய சூழலுக்கும் பொருந்துவதாக இருக்கும்.

எந்த விவசாயியும் உயிரே போனாலும் தன் நிலத்தைவிட்டுக் கொடுக்க மாட்டான். வெள்ளிவிழா படமான 'உரிமைக்குரல்' படத்தில் நிலத்துக்காக போராடி உரிமைக் குரல் கொடுக்கும் விவசாயியாக எம்.ஜி.ஆர் நடித்திருப்பார். கதைப்படி, கடனுக்காக நம்பியார் குடும்பத்திடம் எம்.ஜி.ஆரின் நிலம் அடகு வைக்கப்பட்டிருக்கும். அடகு வைக்கப்பட்ட நிலத்தை வஞ்சகமாக அபகரிக்க நம்பியார் முயற்சிப்பார். நிலம் ஏலத்துக்கு வரும். நகைகளை அடகு வைத்து பணத்தை எம்.ஜி.ஆர் கொண்டுவருவார்.

ஏலம் முடிவதற்குள் பணத்தைக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவும் தனது கோபத்தைக் காட்டும் வகையிலும் ரேக்ளா வண்டியை வேகமாக ஓட்டி வந்து, வண்டியில் அமர்ந்தபடியே பணத்தை ஏலம் நடத்தும் அதிகாரியின் மேஜை மீது எம்.ஜி.ஆர் வீசும் ஸ்டைலே தனிதான்!

ஏலம் முடிந்துவிட்டதாகச் சொல்லி தனக்குத்தான் அந்த நிலம் சொந்தம் என்று நம்பியார் உரிமை கொண்டாடுவார். நிலத்தில் உழச் செல்லும் எம்.ஜி.ஆரையும் தன் அடியாட்களுடன் வந்து தடுப்பார். கிளைமாக்ஸ் சண்டையில் கலப்பையை சுழற்றியபடியே எம்.ஜி.ஆர் சண்டை போடும் அந்த வேகத்தையும் லாவகத்தையும் அவரால்தான் காட்ட முடியும்.

அந்த சண்டைக்கு முன்பாக தனது நிலத்துக்காக உணர்ச்சிபூர்வமாக எம்.ஜி.ஆர் பேசுவார். படத்தில் நம்பியாரின் பெயர் துரைசாமி. வசனத்தைப் பேசுவதற்கு முன் நம்பியாரை கோபத்துடன் 'டேய் துரைசாமி' என்று அழைத்து ஆரம்பிப்பார். தனி வாழ்க்கையில் மட்டுமல்ல; பொதுவாக படத்திலும்கூட எம்.ஜி.ஆர் யாரையும் 'வாடா, போடா' என்று பேசமாட்டார்.

ஆனால், இந்தக் காட்சியில் நம்பியாரை அவரே 'டேய்' போட்டு பேசுகிறார் என்றால், தாயாக மதிக்கும் தனது நிலத்தை அபகரிக்க முயற்சிப்பவன் மீதான விவசாயியின் நியாயமான கோபம் அதில் தெரியும்.

'உரிமைக்குரல்' படத்தில் ரசிகர்களின் உற்சாக அலப்பறைகளுக்கிடையே, மானமுள்ள விவசாயியின் குரலாக ஒலிக்கும் எம்.ஜி.ஆரின் குரல் அப்படியே இங்கேஞ்.

"எங்க பரம்பரைக்கே சோறு போட்டு வளர்த்த பூமி இது. மானம், மரியாதை உள்ள எவனும் உயிர் போனாலும் தன் நிலத்தை மத்தவங்களுக்கு விட்டுக்கொடுக்க மாட்டான். என் தாய் எனக்கு பாலூட்டி வளர்த்தாங்க. இந்த நிலத்தாய் எனக்கு சோறூட்டி வளர்க்கறாங்கடா. இந்தத் தாயை விட்டுக் கொடுக்கற அளவுக்கு நான் கோழை இல்லடா.

ஒரு பிடி மண்ணுக்காக எந்த தியாகத்தையும் செய்யற பரம்பரையில வந்தவன்டா நான். நூறு என்ன? ஆயிரம் என்ன? லட்சம் பேரை கூட்டி வந்து படை எடுத்தாலும் இந்த மண்ணுலே இருந்து என்னைப் பிரிக்கவே முடியாதுடா. என் ரத்தம் வடிஞ்சா இந்த மண்ணில்தான் கலக்கும். என் உடல் கீழே விழுந்தால் இந்த மண்ணைத்தான் அணைக்கும். என் உயிர் போனாலும் இந்த மண்ணில்தான்டா போகும்.

ஆனா, அந்த நேரத்துல நான் எழுப்பற உரிமைக்குரல், இங்க மட்டுமில்ல, எங்கெங்கே உழைக்கிறவன் இருக்கானோ, எந்தெந்த மண்ணுல அவன் வியர்வைத் துளி விழுதோ, அங்கெல்லாம் என் உரிமைக்குரல் ஒலிச்சுக்கிட்டேதான்டா இருக்கும்."

அதிமுகவை எம்.ஜி.ஆர் தொடங்கிய பின், 1974ம் ஆண்டு வெளியான படம் 'உரிமைக் குரல்'. அந்த காலகட்டத்தில் எம்.ஜி.ஆர் மீது தாக்குதல் முயற்சிகள் நடந்தன. மேலே உள்ள எம்.ஜி.ஆர் பேசும் வசனம், அதற்கு மறைமுகமாக அவர் பதில் சொல்வது போலவும் இருக்கும். அதோடு, இன்றைய சூழலுக்கும் அந்த வசனம் பொருந்தும். மீத்தேன் திட்டம், ஷேல் கேஸ் திட்டம், கெயில் நிறுவனத்தின் குழாய் பதிக்கும் திட்டம் ஆகியவற்றால் நிலம் பறிபோவதைக் கண்டு தர்மாவேசம் அடைந்த விவசாயி பேசுவதுபோலவே இருக்கும்.

அதுதான் எம்.ஜி.ஆர் படங்களுக்கு... இல்லை, இல்லை பாடங்களுக்கு உள்ள சிறப்பு.

தொடரும்...

எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்தபோது, சுமார் ரூ.325 கோடி விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்தார். பாசனத்துக்கு நிலத்தடி நீரைப் பயன்படுத்த, புதிதாக 3.31 லட்சம் பம்ப் செட்களுக்கு மின் இணைப்பு கொடுக்கச் செய்தார். மேலும் பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் முறையை எம்.ஜி.ஆர் அமல்படுத்தினார்.



'உரிமைக்குரல்' படத்தில் கலப்பையை சுமந்தபடி சண்டைக் காட்சியில் எம்.ஜி.ஆர். சுழல்கிறார்.



'விவசாயி' படத்தில் எம்.ஜி.ஆர்.

---

நாவலர் ஐயாவின் பங்களிப்புக் காரணமாக இருந்திருந்தால் நான் அதற்குத் தலை வணங்குகிறேன். ஆனால், நாவலர் ஐயாவால் யாழ்ப்பாணத்தில் பரப்பப்பட்ட சைவ வெள்ளாளக் கருத்தாக்கத்தை நாங்கள் அனைவரும் மறுக்க வேண்டிய காலத்தில் நிற்கிறோம்.

பேராசிரியர் ரத்ன ஜீவன் கூல் ஆறுமுக நாவல்லரைத் திட்டி எழுதிய கட்டுரையுடன் எனது இந்தக் கட்டுரையை நீங்கள் கோர்க்கக் கூடாது. ரத்ன ஜீவன் கூலில் பூட்டன் ஆறுமுக நாவலருடன் சமய, சமூகத் தளத்தில் மோதி, யாழ்ப்பாணிகள் எல்லோரையும் கிறித்தவர்களாக மாற்ற முடியவில்லையே என்ற அந்தரிப்புடன் செத்துப் போனவர். அவரின் பேரன், நாவலரைத் திட்டுவது இயல்பு. ஆனால், என் கதை வேறு. நான் நாவலரின் பாரம்பரியம் என நம்பப்படும் பாரம்பரியத்தில் வந்தவன். வீட்டிலும், நான் படித்த பாடசாலையிலும் நாவலரின் பங்கு மிகப் பெரியதாக இருந்தது. எனது சிறுவயது சிந்தனைப் போக்கில் நாவலரின் பங்கு மிகப் பெரியது. சைவ பரிபாலன சபை வைத்த அத்தனை பரீட்சையிலும் நான் தோற்றியிருக்கிறேன். நாவலர் பேச்சுப் போட்டிகளில் பதக்கங்களைப் பெற்றுள்ளேன். எனது பிரச்னை, இன்று யாழ்ப்பாணத்தில் தாண்டவமாடும் வெள்ளாள சாதிக் கொழுப்புகளுக்கு நாவலர் காரணமாக இருந்துள்ளார் என்பதுதான். அதை எதிர்க்க வேண்டியது எங்களது கடமை.

ஒடுக்கப்பட்ட மக்களின் பெரும் பங்களிப்புடன் நடைபெற்ற விடுதலைப் போராட்டம்; கொடுமையான முறையில் மௌனமாக்கப்பட்ட பிறகு, அடுத்த கட்டத்தை நோக்கி சிந்திக்க வேண்டிய யாழ்ப்பாண மக்கள், தமது சூபிட்சத்தின் முதல் படியை நாவலரால் ஊட்டப்பட்ட வெள்ளாள சாதி மேலாதிக்கத்தை மறுதலித்தலில் இருந்து ஆரம்பிக்கலாம்.

ஆதி இந்து மதத்தில் சாதி என்பதே இல்லை. சாதி பார்க்காத வெள்ளாளர்களும் உள்ளனர். ஆனால், சாதியை பெருமையாக நினைக்கும் வெள்ளாளர்கள் தாங்களே, கேடு கெட்ட வர்ண கோட்பாட்டில் மிகக் கீழ் நிலையில் உள்ளவர்கள் என்பதைப் புரிந்து கொள்வதுதான் உயர் சாதிய மன நிலையில் இருக்கும் பெரும்பாலான யாழ்ப்பாண வெள்ளாளர்களை, சாதியே வேண்டாம் என வெறுக்க வைக்கும். வீண் சாதிப் பெருமைகளைப் பேசுவதை நிறுத்த வைக்கும்.

இதைக் கேட்ட இவாஞ்சலின் மெரிலின் ஜோசப் அம்மையார் என்னை நிமிர்ந்து பார்த்து "எப்படி?" என்றார். "ஆதி இந்து மதம்; சாதி வேறுபாடே இல்லாத வாழ்க்கை முறை. ஆதி இந்து சாதி என்ற பெயரில் சக ஜீவன்களை வதைக்க மாட்டான்" என்றேன்.

# தேசவழமைச் சட்டமும் அதன் ஏற்புடைமையும்

எம்.ரமணன் LLB



இலங்கையின் சட்ட முறைமையில் வழக்கிலிருக்கும் சுதேச சட்டங்களாக கண்டியச் சட்டம், முஸ்லீம் சட்டம், தேசவழமைச் சட்டம் ஆகியன காணப்படுகின்றன. இலங்கையில் தேசவழமைச் சட்டம் என்பது யாழ்ப்பாணத் தமிழர்களின் பழக்கவழக்கங்கள், வழக்காறுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒல்லாந்தர் காலப்பகுதியில் 1907ம் ஆண்டு வழக்காற்றுக் கோவையாகப் பிரகடனம் செய்யப்பட்டது. தற்போதய இத் தேசவழமை என்பதனுள் பின்வரும் 3 சட்டங்கள் உள்ளடக்கப்படுகின்றன.

1. தேசவழமை ஒழுங்குவிதி
2. யாழ்ப்பாண திருமண மற்றும் வழியுரிமைகள் சட்டம்
3. தேசவழமை முன்வாங்குரிமை கட்டளைச் சட்டம்

ஆள்சார் சட்டமாகவும் இடம்சார் சட்டமாகவும் காணப்படும் தேசவழமைச் சட்டத்தினால் யார் ஆளப்படுவார்கள்

**தேசவழமையின் ஏற்புடைமை தொடர்பில், தேசவழமைச் சட்டம் ஒரு ஆள்சார் சட்டம் என்பதால் தமிழர்கள் நாட்டின் எப்பகுதியில் சென்று வசித்தாலும் அவர்களுக்கு ஏற்புடைத்தாகும் என்ற கருத்தும் காணப்படுகின்றமை அவதானிக்கப்படல் வேண்டும்.**

யாருக்கெல்லாம் இச்சட்டம் ஏற்புடைத் தாகும் என்ற கேள்வி இன்றும் பல்வேறு மட்டங்களிலும் எழுப்பப்பட்டுவருகின்றது. பொதுவாக தேசவழமை என்பது யாழ்ப்பாண மாகாணத்தின் மலபார் நிரந்தரவாசிகளுக்கு ஏற்புடைத்தான சட்டம் எனக் குறிப்பிடப்படுகின்றது. மலபார்வாசிகள் என்பது இந்தியாவின் மலபார் கரையிலிருந்து வந்து யாழ்ப்பாண மாகாணத்தில் குடியேறி பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வருபவர்களைக் குறிப்பதுடன் யாழ்ப்பாண மாகாணம் என்பது இலங்கையின் தற்போதைய வடமாகாணம் ஆகும்.

அவ்வாறெனில் மலபார் கரையிலிருந்து குடியேறிய மலபார்வாசிகளுக்கு மட்டும் தான் தேசவழமை ஏற்புடைத்தாகுமா, யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே வாழ்ந்த தமிழர்கள் இதனுள் உள்ளடக்கப் படமாட்டார்களா என்ற பிரச்சனை எழுந்தது. இது தொடர்பாக கிளாஸ் ஐசாக்ஸ் என்பவரினால் எழுதப்பட்ட தேசவழமை கோவைக்கான முன்னுரையினை நோக்குமிடத்து "இலங்கைத் தீவில் யாழ்ப்பாண மாகாணத்தின் மலபார் அல்லது தமிழ் நிரந்தரவாசிகளிடையிலான குடியியல் பிணக்குகளானவை நிரூபிக்கப் பட்ட வழக்காறுகள் பழக்கவழக்கங்கள் என்பவற்றுக்கிணங்க தீர்மானிக்கப்படல் வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது இங்கு மலபார்வாசிகள் தமிழர்கள் என்ற இரு சொற்பதங்களிலும் ஒரு பொருளையே இவர் விளக்கியுள்ளார். எனவே தேசவழமை கோவையானது யாழ்ப்பாண மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட மலபார்வாசிகள் மற்றும் தமிழர்களுக்கு ஏற்புடைத்தாகும்.

மேலும் செட்டிஎதிர் செட்டி (37NLR253) என்ற வழக்கிலும் மலபார் என்பது தமிழர் என ஏற்றுக் கொள்ளப் பட்டது. தர்மலிங்கம் செட்டி எதிர் அருணாசலம் செட்டி (45NLR414) என்ற வழக்கிலும் உயர்நீதிமன்றம் மலபார் நிரந்தரவாசிகள் என்பது வடமாகாணத்தின் நிரந்தரவாசிகளான இலங்கைத் தமிழர்கள் எனத் தீர்ப்பளித்தது.


எனவே வடமாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்ட மலபார் மற்றும் தமிழர்களுக்கு தேசவழமை ஏற்புடைத்தாகும். ஒருவர் தேசவழமை சட்டம் தொடர்பான பிணக்கு ஒன்று ஏற்படும் போதுதான் தேசவழமையால் ஆளப்படுவாரா இல்லையா என்பதனை எண்பிக்கும் பொறுப்பு அவரையே சார்ந்தது. உதாரணமாக சவுந்தர நாயகம் எதிர் சவுந்தரநாயகம் (20NLR274,1913) என்ற வழக்கினை நோக்குமிடத்து இங்கு சவுந்தரநாயகம் என்பவருக்கு தேசவழமை சட்டம் ஏற்புடைத்தாகுமா இல்லையா என்றபிரச்சனை எழுந்தபோது அவர்தான் தேசவழமைக்கு ஏற்புடைத்துடையவர் என்பதை மன்றில் உரிய ஆதாரங்களுடன் நிரூபிக்கத் தவறியமையால் அவருக்கு தேசவழமை சட்டம் ஏற்புடைத்தாகாது என மன்று தீர்ப்பளித்தது. மேலும் வடமாகாணத்திற்கு வெளியே தமது வாழிடத்தை கொண்ட தமிழர்களுக்கு தேசவழமை சட்டம் ஏற்புடைத்தாகாது. உதாரணமாக அரசன் எதிர் பெருமாள் (14NLR496,1911) எனும் வழக்கில் பெருமாள் என்பர் இந்தியாவில் பிறந்த தமிழர். இவர் இலங்கையின் மத்திய மாகாணத்தில் வாழ்ந்துவந்தார். இவருக்கு தேசவழமை சட்டம் ஏற்புடைத்தாகுமா இல்லையா எனும்போது மன்று இவருக்கு தேசவழமைச் சட்டம் ஏற்புடைத்தாகாது எனத் தீர்ப்பளித்தது.

நபர் ஒருவர்தான் தேசவழமையால் ஆளப்படுவதனை நிரூபிப்பதற்கு முதலில் தனது நிரந்தர வதிவிடத்தை நிரூபிக்கவேண்டும். இவ் நிரந்தர வாழ்விடம் தொடர்பில் பல்வேறு வழக்குகளில் நீதிமன்றங்கள் பல பொருள்கோடல்களை மேற்;கொள்கின்றன. வேலுப்பிள்ளை எதிர் சிவகாமிப்பிள்ளை (13NLR74,1910) எனும் வழக்கில் நிரந்தர வாழ்விடம் எனும்போது குறித்த நபர் குறித்த காலப்பகுதிக்கு குறித்த இடத்தை வாழிடமாகக் கொண்டிருந்தாரா எனப் பொருள் கோடல் செய்யப்படல் வேண்டும் எனக் குறிப்பிடப் பட்டிருந்தமை முக்கிய விடயமாகும். மேலும் தேசவழமைக்கு உட்பட்ட நபர் தனது வாழ்விடத்தை நிரந்தரமாக வடமாகாணத்தை விட்டு மாற்றியமைக்கும்போது அவரின் நோக்கம் உள்ளூர் வழக்காறுகளில் இருந்து விலகிச் செல்வது என மன்றுக்கு நிரூபிக்கப்பட்டால் அவர் தேசவழமையில் இருந்து விடுவிக்கப் பட்டதாகக் கொள்ளப்படும். இது ஸ்பென்ஸர் எதிர் இராஜரட்ணம் (16NLR332) எனும் வழக்கில் குறிப்பிடப் பட்டது.

இருப்பினும் தேசவழமையின் ஏற்புடைமை தொடர்பில், தேசவழமைச் சட்டம் ஒரு ஆள்சார் சட்டம் என்பதால் தமிழர்கள் நாட்டின் எப்பகுதியில் சென்று வசித்தாலும் அவர்களுக்குஏற்புடைத்தாகும் என்ற கருத்தும் காணப்படுகின்றமை அவதானிக்கப்படல் வேண்டும். சுந்தரலிங்கம் எதிர் சிவலிங்கம் எனும் வழக்கில் நபர் ஒருவர் மலபாரில் பிறந்து பின்னர் யாழ்ப்பாணத்தில் வசித்ததுடன் தனது கல்வியை அங்கேயே கற்று பின்னர் உயர்கல்விக்காக கொழும்பில் வந்து வசித்தார். கல்வியின் பின்னர் அரசசேவையில் இணைந்து நாட்டின் பலபாகங்களிலும் சேவையாற்றியதுடன் யாழ்ப்பாணப் பெண்ணைத் திருமணம் செய்து இருந்தார். இத்தகைய நிலையில் இவரை யாழ்ப்பாண நிரந்தரவாசியாகக் கொண்டு தேசவழமை ஏற்புடைத்தாகும் எனக் கூறமுடியுமா என்ற பிரச்சனை எழுந்தபோது உயர் நீதிமன்றம் பல்வேறு சட்ட முற்தீர்ப்புக்களையும் ஆராய்ந்து அவர் வாழிடம் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் இருந்தமைக்கு காரணம் அவரின் தொழில் நிலை என்பதுடன் அவர் கொழும்பில் வசித்தமையைக் கொண்டு அவரின் நோக்கம் யாழ்ப்பாணத்தினைக் கைதுறத்தல் என்று கருதிவிட முடியாது. எனவே அவர் எங்கு வசித்திருப்பினும் தேசவழமைக்கு ஏற்புடைத்தாவார் எனத் தீர்ப்பளித்தது.

எனவே தேசவழமையின் ஏற்புடைமை என்பதில் பல்வேறு சட்ட முற்தீர்ப்புக் களின் அடிப்படையில் ஒருவர் வடமாகாணத்தின் நிரந்தரவாசி என்பதை உறுதிப்படுத்தும்போது அவர் மலபார் வழியுரிமையில் வந்திருப்பினும் சரி, யாழ்ப்பாண தமிழர் வழியுரிமையில் வந்திருப்பினும் சரி தேசவழமை ஏற்புடைத் தாகும். யாழ்ப்பாணத்தில் பிறந்து பல்வேறு காரணங்களுக்காக வேறுமாவட்டங் களிலும் வெளிநாடுகளிலும் வசிப்போர் வடமாகணத்துடன் தொடர்புகளைக் கொண்டிருப்பதன் மூலம் தாம் யாழ்ப் பாணவாசி என்பதை உறுதிப்படுத்திக் கொண்டிருப்பின் அவர்களும் தேசவழமை யால் ஆளப்படுவர். மாறாக அவர்களது மனஎண்ணம் முற்றாக யாழ்ப்பாணத்தை விட்டு அகலுதல் என்பதை எண்பிக்கு மாயின் அவர்கள் தேசவழமையில் இருந்து விடுவிக்கப்படுவார்கள்.





# மனமே நலமா?

## உங்கள் சந்தேகங்களை கேளுங்கள்



கு.நக்கீரன்
உளவள ஆலோசகர்




**ஆண் (வயது 18)
உடுப்பிட்டி**

**இளைஞர்கள் எல்லோரும் மிகவும் இறுக்கமான ஆடைகளைத்தான் அணிகிறார்கள். நானும் இறுக்கமான ஜீன்சைத் தான் விரும்பி அணிவேன். இறுக்கமான ஜீன்சை அணிவதால் அணிவதால் ஆண்மைக்குறைவு ஏற்படும் என்று சிலர் கூறுகிறார்கள். இது உண்மையா?**

**பதில்:** அன்பு மகனே! உண்மையில் ஆண்மைக்குறைவு என்பதன் அர்த்தம் என்ன என்று உமக்குத் தெரியுமா என்று எனக்குத் தெரியவில்லை. ஆண்மைக் குறைவு என்பதன் அர்த்தம் வெவ்வேறு விதமான பரிணாமங்களைக் கொண்டது. ஒன்று பிள்ளைப்பேறுடன் தொடர்புடையது. மற்றது, ஒரு பெண்ணைப் பாலியல் ரீதியாக திருப்திப்படுத்தக்கூடிய தொடர்புடையது. இன்னொன்று சமூகம் ஆண் என்பவனின் மேல் எதிர்பார்க்கும் பல்வேறுபட்ட குண இயல்புகளுடன் தொடர்பானது.

உண்மையில் பிள்ளைப்பேற்றுக்குரிய தகமை இல்லாத ஆண் "மலடன்" எனும் பட்டத்தால் அழைக்கப்படுவான். "மலட்டுத் தன்மை" என்பது தனியே விந்தணு (உற்பத்தி, மற்றும் வீரியம்) தொடர்பான விடயங்களைப் பற்றியது. இதேபோல ஆண் பெண் உடலுறவின்போது ஒரு பெண்ணைப் பாலியல் ரீதியாகத் திருப்திப்படுத்த முடியாத ஒருவனையும் "ஆண்மைக் குறைவு" எனும் பதம் கொண்டு அழைக்கலாம். ஆனால் பெண்ணைப் பாலியல் ரீதியாக திருப்திப்படுத்த முடியாமைக்கு பொதுவாக அந்த ஆணின் உடலியல், மற்றும் உளவியல் ரீதியான



பல்வேறுபட்ட காரணங்கள் பங்களிப்புச் செய்கின்றன. ஏன் சிலவேளைகளில் சில நோய் நிலைகள், உள்ளெடுக்கும் சில மருந்து மாத்திரைகள், மதுபாவனை, புகைத்தல் போன்ற சில பழக்கவழக்கங்களும் காரணமாக அமைந்து விடுகின்றது.

அதேபோல சமூகம் ஒரு ஆடவன் மீது சில இயல்புகளை எதிர்பார்க்கிறது. குறிப்பாக வீரம், துணிவு, கொண்டு நடத்தும் "தலைமைத்துவப் பண்பு" போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறு ஆண்கள் சமூகம் எதிர்பார்க்கும் பால்நிலை (Gender) அடிப்படையிலான இயல்புகளை வெளிக் காட்டாத ஆடவனையும் ஆண்மைக் குறைவுள்ளவானாக கருதுகிறார்கள்.

ஏன் இன்னும் சொன்னால், ஆணாகப் பிறந்து பெண்தன்மைகளை வெளிக்காட்டித் திரியும் "பொன்ஸ்" என்று கூறப்படும் ஆண்களையும் ஆண்மைக்குறைபாடானவர்களாக கருதலாம். இதில் உமது இறுக்கமான ஜீன்ஸ் அணியும் விடயம் எதனுள் அடங்கும் என்று எனக்குப் புரியவில்லை. நான் நினைக்கிறேன், இறுக்கமான ஜீன்ஸுக்கும் ஆண்மைக் குறைபாடுக்கும் வரக்கூடிய ஒரேயொரு பிரச்சினையாக "உடல் வெப்ப நிலை" என்பது சிறிதளவு பங்களிப்பைச் செய்யலாம். அதாவது விந்தணுக்கள் உயிர்ப்பாக இருப்பதற்கு அவை உடல் வெப்பநிலையை விட குறைந்தளவு வெப்பநிலையிலேயே இருக்க வேண்டும். இதன் காரணத்தினால்தான் ஆண்களுக்கு "விதைப் பைகள்" உடலுக்கு வெளியே (அறை வெப்பநிலையில்) உள்ளது. இறுக்கமான ஜீன்சை தொடர்ச்சியாக அணிவதால் காற்றோட்டக் குறைவு காரணமாக விதைப்பையை சூழவுள்ள பிரதேசம் சற்றுக் கூடிய வெப்பநிலையில் இருக்கலாம். ஏனெனில் எமது நாடுகள் அதிகளவு வெப்ப வலய நாடுகள். இதன்காரணமாகவே தான் எமது மூதாதையர்கள் வேட்டிஃசால்வை எனும் உடையை அறிமுகம் செய்தார்கள். குளிரொத்தான மேற்கத்தைய நாடுகளுக்கே இறுக்கமான அடுக்கடுக்கான பல ஆடைகள் அணிய வேண்டியுள்ளது. இது புரியாமலே எமது நாட்டிலும் கொளுத்தும் வெயிலிலும் கோட்டுச் சூட்டு, சப்பாத்து, ரையுடன் சிலர் வலம் வருகிறார்கள். ஐயோ பாவங்கள்.


சரி அதைவிடும் தம்பி உமது கேள்விக்கு எனது பதில் எப்போதும் ஆரோக்கியமாக வாழ்வதற்கேற்ப வாழ்க்கை முறைகளையே பின்பற்ற வேண்டும். அந்த வகையில் காற்றோட்டமான, இடுப்பால் வழுகிக் கழன்று விடாத பொருத்தமான ஜீன்சை அணிவதே உடலியலுக்கும் சமூகவியலுக்கும் பொருத்தமானது.

**பெண் (வயது 23)
கோப்பாய்**

**நான் உயர்கல்வி நிறுவனமொன்றில் படிக்கிறேன். எனக்கு வகுப்பெடுக்கும் ஒரு இடைவயதுக்கார விரிவுரையாளர் வகுப்பெடுக்கும் நேரத்தில் என்னையே பார்த்துக்கொண்டுஇருக்கிறார். அடிக்கடி என்னை கேள்வியும் கேட்பார். சரியாகப் பதில் சொன்னாலும், பிழையாகப் பதில் சொன்னாலும் கோபமாக திட்டுவது போல் பேசுகிறார். ஆனால் பார்ப்பது மட்டும் ஒரு விதமாக இருக்கிறது. எனது நண்பிகளும், நண்பர்களும் அவர் என்னையே பார்ப்பதைப் பற்றி அடிக்கடி நக்கல் செய்கிறார்கள். இவரின் இந்தச் செயற்பாடு எனக்கு தீவிரமான மனக்குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது. ஏதும் சிக்கல்கள் வருமா எனப் பயமாக உள்ளது.**

**பதில்:** அன்பு மகளே! உமது பிரச்சினை எனக்குத் தெளிவாகப் புரிகிறது. இதில் பிரச்சினைப்படவோ, மனக் குழப்பம் அடையவோ வேண்டிய தேவை, ஒரு வாழ்க்கைத்திறன் (Life Skills) உள்ள பெண்ணிற்கு ஏற்படாது. நான் நினைக்கிறேன் உங்களது குறைவான வாழ்க்கைத் திறன்கள் காரணமாக நீங்கள் குழம்ப வேண்டிய ஒரு சூழ்நிலைக்குள் உள்ளீர்கள். இருந்தாலும், எந்தப் பயமும் வேண்டாம். இது ஒரு சின்ன விடயம். இலகுவாக கையாள முடியும். நான் நினைக்கிறேன் உங்களின் மீது உங்கள் விரிவுரையாளருக்கு ஏதோ ஒரு வித ஈர்ப்பு உள்ளது. அந்த ஈர்ப்பு தனியே உங்கள் அழகை இரசிப்பதாகவோ, அல்லது உங்களை காதல் எனும் வலைக்குள் வீழ்த்துவதாகவோ, அல்லது அதற்கு வெளியேயான ஒரு புரிதலை ஏற்படுத்தி தொடர்பைப் பேணுவதாகவோ இருக்கலாம்.

உண்மையில் சிலரின் அழகு சிலரை நிலைகுலையச் செய்து விடும். பார்க்கக் கூடாதென்று மனம் சொன்னாலும் பார்! பார்! என்று இன்னொரு மனம் சொல்லும். அழகிய பொருள் ஒன்றை பார்ப்பதற்கும் அதன் அழகை இரசிப்பதற்கும் தடை போடுவதற்கு எந்தச் சட்டத்திலும் இடம் இல்லை. அதேபோல் "என்னைப் பார்க்காதே" என்று நீங்கள் கூறுவதற்கும் எந்தவிதமான சட்டமும் இல்லை. உண்மையில் உங்கள் விரிவுரையாளர் உங்களைக் கலைத்துக் கலைத்து பார்க்கிறாரா? வீட்டில், வீதியில், மைதானத்தில் என்று எங்கும் துரத்தித் துரத்திப் பார்க்கிறாரா? இல்லையே. அவருக்கு உங்களைப் பார்க்கக்கூடிய ஒரே இடம் வகுப்பறையே.



அந்தப் பார்வையின் பின்னணியில் சிலவேளைகளில் ஏதாவது சிக்கலான, அல்லது பிழையான நோக்கங்கள் இருக்கலாம், இல்லாமலும் விடலாம். ஏன் சிலவேளைகளில் பார்க்கப் பார்க்கப் பார்வையின் அர்த்தம் புரிந்து நீங்களே பார்வையிலேயே பதில் கூறவும் கூடும்.

ஆனால் இப்போதுள்ள உங்கள் நிலையில் இப் பார்வையின் அர்த்தம் புரிவதில்லை. இப்படி இருக்கலாமோ? அப்படி இருக்கலாமோ? என்ற அச்சங்களின் வெளிப்பாடு மகிழ்ச்சியளிப்பதாய் இல்லை. இவைகள் உங்கள் கற்றலுக்கு இடையூறாக அமைகின்றன. எதிர்காலம் குறித்த பயம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் பல்கலைக்கழகம் முடித்து வெளியேறுவது தான் உங்களின் இலக்கு. அந்த இலக்கினை அடைவதற்கு இடையு+றாக உள்ளவை பற்றி சற்று அக்கறையுடன் முடிவெடுப்பது நல்லதே. நீங்கள் பெரிதாகவோ, தீவிரமாகவோ எதுவும் செய்யத் தேவையில்லை.

விரிவுரையாளரின் பார்வையின் நோக்கம் உங்களுக்குப் பிடிக்கவில்லை, என்பதை உங்கள் பார்வையாலேயே பதிலுறுங்கள். வாயால் கூறுவதனிலும் செய்கையால் செய்வதிலும் பார்க்க பார்வையால் பலமாகக்கூற முடியும். ஏனெனில் எனது தந்தையாரிடம் அடிவாங்குவதை விட அவரின் கோபப்பார்வை எனக்கு மிகவும் பயத்தை ஏற்படுத்தும். அவரின் பார்வையில் எனக்கு எல்லாம் புரிந்து விடும். அந்தளவுக்குப் பார்வையால் கூறும் பதில் பலமானது.

இதை விட அவரின் பண்பு அவ்வளவு நல்ல நிலையில் இல்லை என்பதை அவருக்குத் தெரியப்படுத்துங்கள். எதிர்பார்க்கும் பிரச்சினைகள் ஏதும் வராத விதமாக கவனமாகப் பயணியுங்கள். உங்கள் பல்கலைக்கழக வாழ்க்கை ஒரு இரயில் பயணம் போன்றது. உங்கள் ஸ்ரேசன் வரும்வரை கவனமாகப் பயணியுங்கள். பயணத்திற்குப் பாதுகாப்பான ஓரிரு நல்ல நண்பர்களை தெரிவு செய்யுங்கள். பயணம் முடிந்தவுடன் கைகாட்டி விடைபெறுங்கள். எல்லாம் நல்லதாக நடக்கும். பயம் வேண்டாம்.



# கோயிலில் எவ்வாறு வழிபடுவது?

கோயிலுக்கு செல்லும்போது உடல், ஆடை, மனம் ஆகியவை தூய்மையாக இருக்கவேண்டும். கோயில் வாயிலில் நுழையும் முன் தண்ணீரால் கை, கால்களை கழுவிக்கொண்டு செல்ல வேண்டும். கோயிலுக்குள் சென்ற பிறகு யாரிடமும் பேசாமல், இறைவனை மட்டும் மனதில் பிரார்த்தனை செய்ய வேண்டும். கோயிலுக்கு சென்றவுடன் முதலில் கோபுரத்தை தரிசிக்க வேண்டும். இரு கைகளையும் தலைக்குமேல் தூக்கி வணங்க வேண்டும்.

அதன்பிறகு கொடி மரத்தின் வலது பக்கத்தில் தரையில் விழுந்து வணங்க வேண்டும். பிறகு பலிபீடத்துக்கு அருகில் சென்று நம்மிடமுள்ள தீய குணங்களை பலி கொடுத்ததாக வணங்க வேண்டும். அதன்பிறகு விநாயகரை வணங்க வேண்டும். விநாயகரை வணங்கும்போது தோப்புக்கரணம் போட வேண்டும். நெற்றி பொட்டுகளில் லேசாக குட்டிக்கொள்ள வேண்டும்.

கோயிலுக்குள் சுற்றும்போது வேகமாக நடக்காமல் மெதுவாக நடக்க வேண்டும். மும்முறை சுற்றி வந்ததும் கருவறை மண்டபத்துக்குள் நுழைந்து இறைவனை தரிசிக்க வேண்டும். அர்ச்சனைகள் செய்து ஆரத்தி காட்டியதும் தீபத்தை பயபக்தியுடன் கண்களில் ஒற்றிக் கொள்ள வேண்டும். பின்பு கோயிலுக்கு வெளியில் அனுமாரை தரிசித்து கோயிலுக்குள் பிரவேசிக்க வேண்டும்.


பிறகு சிறிது நேரம் கோயிலில் உட்கார்ந்து கண்மூடி பகவானை நினைத்துக் கொள்ள வேண்டும். மறுபடியும் மானசீகமாக தரிசித்துவிட்டு உத்தரவு பெற்றுக் கொண்டு கிளம்ப வேண்டும். பிரகார வலம் எப்போதும் இடமிருந்து வலமாக வரவேண்டும். விநாயகர், சிவன், முருகன் கோயில்களில் ஒருமுறை வலம் வரலாம். சிவன், முருகன் கோயில்களில் 3முறை வலம் வரவேண்டும். அம்மன் கோவிலில் நான்கு முறையும், நவக்கிரங்களை 9முறையும், பெருமாள் கோயிலில் 4முறையும் வலம்வர வேண்டும். அப்போது நந்தி, மயில் போன்ற வாகனங்களையும் சேர்த்தே வலம் வரவேண்டும். மூலவருக்கும் வாகனங்களுக்கும் குறுக்கே ஒருபோதும் வரக்கூடாது.

அதனால்தான் ஆலயங்களில் மூலவரை வழிபடும் இடத்தில் இரண்டு பக்கங்களில் இருபிரிவாக இருந்து வழிபடும் வகையில் தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. சிவாலயங்களில் சிவனை வழிபடுவதற்கு முன்பு நந்தி தேவரை வழிபட்டு 'நந்தியே சிவபெருமானை வழிபட எனக்கு அனுமதி கொடு' என்று வேண்டிய பின்னரே சிவனை வழிபட வேண்டும். விழுந்து வணங்குதல் நான் எவ்வளவு பெரியவனாக இருந்தாலும் இறைவனுக்கு முன்பு அவை ஒரு பொருட்டல்ல, எல்லாம் நீ தந்ததுதான் என்று இறைவனிடம் சரணடைவதுதான் இதன் பொருள். ஆண்கள் அஷ்டாங்கப் பணிவு என்ற முறையிலும், பெண்கள் பஞ் சாங்கப்பணிவு என்ற முறையிலும் விழுந்து வணங்க வேண்டும்.

அஷ்டாங்கப் பணிவு: அஷ்டாங்கம் என்பது எட்டு அங்கங்களைக் குறிக்கும். அவை தலை, இரண்டு செவிகள், இரண்டு கைகள், இரண்டு கால்கள், முகம் என்பனவாகும். பஞ்சாங்கப் பணிவு: பஞ் சாங்கம் என்பது ஐந்து அங்கங்களைக் குறிக்கும். அவை தலை, இருமுன் கைகள், இரு முழங்கால்கள் ஆகும்.

கோயில் கொடி மரத்தின் முன்பு மட்டுமே விழுந்து வணங்க வேண்டும். வேறெங்கும் கூடாது. அவ்வாறு வணங்கும் போது மேற்கு அல்லது தெற்கு திசையில் மட்டுமே கால் நீட்ட வேண்டும், சூரிய கிரகணம் சங்கராந்தி தினங்களில் வழிபடும்போது மட்டும் மேற்கு திசையில் கால் நீட்டக்கூடாது, வடக்கு அல்லது தெற்கு நோக்கிய சன்னதிகளில் விழுந்து வணங்குதல் அவசியமில்லை. கரங்குவித்து வணங்குதலே போதும். தரையில் விழுந்து வணங்கும்போது உடம்பில் எவ்வளவு தூசி படிகிறதோ அவ்வளவு அதிகமான காலம் நாம் கயிலையில் வாழும் பாக்கியம் கிடைக்கும் என்று வேதம் கூறுகிறது.

# இந்தவார ராசி பலன்கள்



## 23.07.2016 – 29.07.2016

**மேஷம்:** சாதக, பாதக, நிறை, குறைகள் உள்ள நேரம். ராசிநாதன் செவ்வாய் நீசத்தில் இருப்பதால் தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பது நல்லது. உத்யோகத்தில் வீண் அலைச்சல், வேலைச்சுமை வந்து நீங்கும். சூரியனின் பார்வை காரணமாக அரசாங்க விஷயங்கள் அனுகூலமாய் முடியும். புதன் 4ல் இருப்பதால் வண்டி வகையில் செலவுகள் இருக்கும். தாயாரின் உடல்நலத்தில் கவனம் தேவை. இட மாற்றத்திற்கான கால சூழல்கள் இருக் கின்றன. வியாபாரம் சீராக இருக்கும். பணப்பற் றாக்குறை நீங்கும். பயணத்தால் லாபம் உண்டு.

**ரிஷபம்:** மூன்றாம் வீட்டில் மூன்று கிரகங்கள் சேர்ந்து இருப்பதால் எதிலும் நிதானம், கவனம் தேவை. செவ்வாய் நீசமாக இருப்பதால் நண்பர்களிடம் இருந்து சற்று விலகி இருப்பது நல்லது. மனை வியிடம் தேவையற்ற வாக்குவாதங்கள் வேண்டாம். சூரியனின் பார்வை காரணமாக தடைகள் நீங்கும். தந்தையிடம் இருந்து உதவிகள் கிடைக்கும். 4ல் ராகு தொடர்வதால் வீட்டில் பராமரிப்புச் செலவுகள் உண்டாகும். பிள்ளைகளின் செயல்பாடுகளால் மனஅமைதி கெடும். சமையலறையில் பெண்கள் உரிய கவனத்துடன் இருப்பது அவசியம்.

**மிதுனம்:** தன, குடும்ப, வாக்குஸ்தானத்தில் முக்கூட்டுக்கிரக சேர்க்கை இருப்பதால் வரவுக்கு மீறிய செலவுகள் ஏற்படும். குடும்பத்தில் பழைய விஷயங்களை பேசிக்கொண்டிருக்க வேண்டாம். கண் சம்பந்தமான உபாதைகள் வருவதற்கு வாய்ப் புள்ளது. வசூல் ஆகாத பணம் வசூல் ஆகும். சுக்கிரன் உங்களுக்கு சுபபலம் தருகிறார். எதிர் பார்த்த தகவல் புதன்கிழமை வரும். குரு பகவானின் பார்வை காரணமாக உத்யோகத்தில் உங்கள் கோரிக்கைகள் நிறைவேறும். வேலைச்சுமை நீங்கும். இஷ்ட தெய்வ ஆலயங்களுக்குச் சென்று வருவீர்கள்.

**கடகம்:** அனுகூலம், ஆதாயம், வரவு, செலவு, அலைச்சல் என கலவையான பலன்கள் இருக்கும். குரு பகவானின் பார்வை காரணமாக சுபவிசேஷத்திற்கான ஏற்பாடுகளை செய்வீர்கள். ராசியில் புதன் இருப்பதால் சிந்தனை அதிகமாக இருக்கும். சொந்த பந்தங்களின் வருகையால் வீட்டில் செலவுகள் அதிகரிக்கும். கடல் கடந்து செல்வதற்கான கிரக சகாயம் உள்ளது. மருமகள் கர்ப்ப சம்பந்தமாக இனிக்கும் செய்தி வரும். வீண் பேச்சுக்களைத் தவிர்க்கவும். வியாபாரம் சாதகமாக இருக்கும். எதிர்பார்த்த ஆர்டர் கைக்கு வந்து சேரும்.

**சிம்மம்:** ருண, ரோக, சத்ரு ஸ்தானம், விரய ஸ்தான கிரகநிலைகள் காரணமாக மனஉளைச்சல், செலவுகள் வந்துபோகும். கன்னிப்பெண்கள் சூழ்நிலை அறிந்து நடப்பது அவசியம். மாமியார், நாத்தனார் மூலம் மகிழ்ச்சியும், பரிசுகளும் கிடைக்கும். செவ்வாய் நீசத்தில் இருப்பதால் சொத்து விஷயங்களில் அவசரம் கூடாது. குரு பகவானின் பார்வை காரணமாக எதிர்பார்த்த இடத்தில் இருந்து பண உதவிகள் கிடைக்கும். உத்யோகத்தில் சக ஊழியர்களுடன் அனுசரணையாகப் போகவும். வியாபாரம் கை கொடுக்கும். வேலையாட்களால் சில சங்கடங்கள் வந்து நீங்கும்..

**கன்னி:** சாதகமான வாரமாகும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். சுக்கிரனின் அருளால் செல்வாக்கும், சொல்வாக்கும் உயரும். கையில் காசு பணம் தாராள மாக புரளும். அவசர தேவைக்காக வாங்கிய கடனை அடைப்பீர்கள். புதனின் பார்வை சாதகமாக இருப்பதால் பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். வெளிநாடு களில் சுற்றுப்பயணம் செய்ய வாய்ப்புகள் தேடி வரும். பெண்களுக்கு தோழிகளால் சில மனவருத்தங்கள் வரலாம். எலக்ட்ரிக்கல் சாதனங்களால் செலவுகள் வரலாம். உத்யோகத்தில் உங்கள் கோரிக்கைகள் நிறைவேறும். இடமாற்றத்திற்கும் இடமுண்டு.

**துலாம்:** நிறை, குறைகள் உள்ள வாரம். சனிபகவான், செவ்வாயின் சஞ்சாரம் காரணமாக அவசிய, அநாவசிய செலவுகள் ஏற்படும். சகோதர உறவுகளுடன் அனுசரணையாகப் போகவும். சுக்கிரனின் பலம் காரணமாக பெண்களின் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். தந்தையின் உடல்நலம் சீராகும். வசதி படைத்த நண்பர் உதவுவார். வாய் மூலம் பேசி தொழில் செய்பவர்கள் நிதானமாக யோசித்துச் செயல்படுவது நல்லது. ஆன்மிகத்தில் மனம் லயிக்கும். பிரசித்தி பெற்ற பரிகார கோயில்களுக்கு குடும்பத்துடன் சென்று வழிபட்டு வருவீர்கள்.

**விருச்சிகம்:** சனீஸ்வர பகவானின் சஞ்சாரம் காரணமாக அலைச்சல், மனக்குழப்பங்கள் வந்து நீங்கும். வாக்குவாதம், வாக்குறுதி இரண்டையும் தவிர்க்கவும். சுக்கிரன் தொடர்ந்து ராசியை பார்ப்பதால் எதையும் சமாளிப்பீர்கள். தந்தையாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. குரு பகவானின்பார்வை காரணமாக நேர்முக தேர்வில் கலந்துகொண்ட வர்களுக்கு வெற்றி உண்டு. கர்ப்பமாக இருப்பவர்கள் உரிய கவனத்துடன் இருப்பது அவசியம். வியாபாரம் சீராக இருக்கும். வாடிக்கையாளர்களின் தேவை அறிந்து நடந்துகொள்ளவும்.

**தனுசு:** ஏற்ற, இறக்கங்கள் உள்ள நேரம். குரு சுகஸ்தானத்தைப் பார்த்துக் கொண்டே இருப்பதால் உற்சாகமாக செயல்படுவீர்கள். சொத்து சம்பந்தமாக ஆலோசித்து முடிவு எடுக்கவும். கடல் கடந்து செல்வ தற்கான கால சூழல் வந்துள்ளது. புதன் எட்டில் இருப்பத ால் குடும்பத்தாருடன் அனுசரித்துச் செல்லவும். செவ் வாய் நீசத்தில் இருப்பதால் சிந்தனை வயப்படுவீர்கள். பிள்ளைகளை பற்றி கவலைகள் வந்துபோகும். புதிய வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு நல்ல செய்தி உண்டு. வியாபாரம் சராசரியாக இருக்கும். கடன், பாக்கிகள் அதிக முயற்சிக்குப்பின் வசூலாகும்.

**மகரம்:** வாக்குஸ்தானத்தில் கேது தொடர்வதால் செலவுகள் வந்துகொண்டே இருக்கும். பேச்சிலும், செயலிலும் நிதானம், கவனம் தேவை. கர்ப்பமாக இருப்பவர்கள் கவனமாக இருப்பது அவசியம். சூரியன், செவ்வாய் சேர்க்கை காரணமாக வழக்கு விஷயங்கள் சற்று தாமதமாகலாம். மகன், மகள் வேலை சம்பந்தமாக நல்ல தகவல் வரும். எதிர்பார்த்த பணம் வாரக்கடைசியில் கிடைக்கும். தடைபட்டு வந்த குலதெய்வ நேர்த்திக்கடன்கள் இனிதே நிறைவேறும்.

**கும்பம்:** குரு பகவானின் பார்வை காரணமாக நல்ல முடிவுகள் வரும். குடும்பத்தில் ஒருமித்த கருத்து உண்டாகும். பெண்கள் ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழ்வார்கள். செவ்வாய் 6ல் இருப்பதால் சகோதர உறவுகளால் செலவுகள் இருக்கும். பயணத் திட்டங்களில் மாற்றங்கள் வரலாம். வண்டி வகையில் செலவுகள் இருக்கும். வெளிநாட்டில் இருப்பவர்கள் சொந்த ஊருக்கு வரவேண்டிய சூழ்நிலைகள் இருக் கிறது. பெண்களுக்கு தாய் வீட்டில் இருந்து உதவிகள் கிடைக்கும். உத்யோகத்தில் சில அதிருப்திகள் வரலாம். மாமியாரின் உடல்நலத்தில் கவனம் தேவை.

**மீனம்:** சுக்கிரனும், குருபகவானும் உங்களுக்கு சுபபலத்தை தருகிறார்கள். குருபகவானின் பார்வை காரணமாக சுபவிஷயங்களை பேசி முடிப்பீர்கள். அலுவலகத்தில் உங்கள் கோரிக்கைகள் நிறைவேறும். 5ஆம் இடத்தில் செவ்வாய் நீசம் அடைவதால் பிள்ளை களை நினைத்து கவலை அடைவீர்கள். புதன் லாபஸ்தானத்தை பார்ப்பதால் மாமன் வகை உறவுகளால் மகிழ்ச்சி உண்டு. காலியாக இருக்கும் இடத்திற்கு புதிய வாடகைதாரர்கள் வருவார்கள். வியாபாரம் சீராக இருக்கும். வேலையாட்களிடம் அனுசரித்துச் செல்லவும்.




# புலிகளால் அறிமுகம் செய்யப்பட்ட ஆர்.பி.ஜி!

பீஷ்மர்

இறுதியுத்தத்தில் புலிகளின் தோல்விக்கு முக்கிய காரணம்வெளிநாட்டிலிருந்து ஆயுதங்களை இறக்குமதி செய்ய முடியாமல் போனது. புலிகளின் உயிர் நாடியாக இருந்தது கடல்வழியாக இறக்குமதியாகும் ஆயுதங்கள்தான். அந்த உயிர்நாடி அறுக்கப்பட்டபோது புலிகளின் அழிவு ஆரம்பித்தது.

தமிழீழ விடுதலை இயக்கங்கள் ஆரம் பித்தபோது, அவற்றை ஊதிப்பெருப்பிக்க வைப்பதில் இந்திய புலனாய்வுத்துறை தீவிரமாக ஈடுபட்டது. இயக்கங்கள் கோட்பாட்டுரீதியில் தம்மை வலுவாக்கி, முறையான கட்டமைப்புக்களுடன் மக்கள் இயக்கமாக வளர்பதை இந்தியா விரும்பவில்லை. சிங்கள அரச தலைமை களை வழிக்கு கொண்டுவர, இந்தியாவின் பிராந்திய நலன்களை அடைவதற்கே இயக் கங்களை கையாள நினைத்தது. இதனால், இயக்கங்கள் முறையாக உருவாகுவதை இந்தியா விரும்பவில்லை.

1980களின் தொடக்கத்தில் இயக்கங்கள் திடீர் வளர்ச்சியடைந்து, ஜே.ஆர் அரசுக்கு நெருக்கடி கொடுக்க வேண்டுமென இந்திய உளவு அமைப்பான றோ விரும்பியது. எல்லா இயக்கங்களும் அவசரகதியில் ஆட்சேர்ப்பு செய்து, ஆளணியில் உப்பி பெருக்க வேண்டுமென றோ விரும்பியது. ஆளணியை சேர்க்க இயக்கங்கள் தயங்கு வதற்கு இரண்டு காரணங்கள்தான். போராளிகளை பராமரிக்க பணமும், ஆயுதமும் தேவை. இயக்கங்கள் இவற்றை யோசிக்காமல் இருக்க, பணமும் ஆயுதமும் றோ வழங்கியது.

றோ கொடுத்த பணம், ஆயுதங்களால் ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ போன்ற கட்சிகள் நிலைதடுமாறி விட்டன. அதிக ஆளணியை உள்வாங்கி, தடுமாறிக் கொண்டிருந்தன. இந்தியா எல்லா இயக்கங்களிற்கும் ஆயுதம் வழங்கியது. என்றாலும், கவனமாக வழங்கியது. நீண்டகால பாவனைகளற்ற, ஆபத்து குறைந்த ஆயுதங்களையே வழங்கி னார்கள். அதிலும் ஒருமுறை பாவித்து, பழுதடைந்த துப்பாக்கிகளை புலிகளிற்கு வழங்க முயன்றனர். எனினும், புலிகள் அதை மறுத்து விட்டனர். ஆளணி விஸ்தரிப்பிலும், ஆயுத விஸ்தரிப்பிலும் புலிகள் மிக கவனமாக இருந்தனர்.

றோ ஆயுதம் வழங்குவது, குறிப்பிட்ட இயக்கத்தை கைக்குள் வைத்திருப்பதற்கு. உங்களிற்கு எது தேவையென்றாலும் நாங்கள் தருவோம், நீங்கள் முயற்சிக்க தேவையில்லையென்பது றோ சொல் லாமல் சொன்ன செய்தி. இயக்கங்கள் வெளிநாடுகளில் இருந்து ஆயுத தளவாடங் களை இறக்குமதி செய்யாமலிருக்க வைப்ப தற்காக இப்படி பழுதடைந்த ஆயுதங்களை கொடுத்து சமாளித்துக் கொண்டிருந்தது.

ஆயுத பலத்திற்கு தம்மை நம்பி இயக்கங்கள் இருப்பது றோவிற்கு வசதி. ஒவ்வொரு இயக்கத்தின் பலம் என்ன, பலவீனம் என்னவென்பது றோவின் விரல்நுனியில் இருக்கும். இந்தியாவிற்கு அருகில் ஆயுதப்போராட்ட இயங்களை வளர்த்தாலும், அவர்களின் பலம் பற்றிய மதிப்பீட்டை வைத்திருந்ததால், ஆபத்தில்லையென றோ நம்பியது.

ஆரம்பத்தில் இருந்தே றோவின் திட்டங் களிற்குள் பிரபாகரன் சிக்குப்படவில்லை. இந்தியா ஆயுதங்கள் வழங்கினால் சந்தோச மாக வாங்கிக்கொண்டார். ஆனால், அத்துடன் இன்னொரு உத்தியையும் கைக் கொண்டார். அதாவது, வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்களை இறக்குமதி செய்வது. பிரபாகரனின் இந்த திட்டம்தான் புலிகளை இராணுவரீதியில் பலமடைய வைத்து, தமிழர்களின் இராணுவ பலத்தை உலகம் திரும்பிப்பார்க்க வைத்தது.


ஆரம்பத்தில் சிறியளவில் வெளிநாடு களில் இருந்து ஆயுதங்களை புலிகள் இறக்குமதி செய்ய தொடங்கினார்கள். அது மிகச்சிறிய அளவானது. சில துப்பாக்கிகள், உந்துகணை செலுத்திகள் போன்றவை. 1980களின் மத்திய காலம்வரை புலிகளிற்கு உகந்த பாதுகாப்பான பின்தளமாக தமிழகம் இருந்தது. வெளிநாடுகளில் கொள் வனவு செய்யப்பட்ட ஆயுதங்களை தமிழகம் கொண்டுவந்து, அங்கிருந்துதான் இலங்கைக்கு கொண்டு வந்தனர். தமிழக சுங்கத்திற்கு தெரிந்தோ, தெரியாமலோ இது நடந்தது. அப்போது ஈழவிடுதலை இயக்கங்கள் என்றால் தமிழகத்தில் மிக பயபக்தியாகி விடுவார்கள். இயக்கங்களின் எல்லா நடவடிக்கைகளையும் அங்கீகரிப் பார்கள். வறறு பாரதூரமான விடயம், சட்டப்பிரச்சனைகள் வரும். சம்பந்தப் பட்டவர்களின் அதிகாரத்திற்கு அப்பா லான பிரச்சனையென்றால் மட்டும்தான் தயங்குவார்கள். ஆனால், அதுவும் இயக்கங்களிற்கு பிரச்சனையில்லை. தமிழக அரசு, அரசியல்வாதிகள் இயக்கங்களுடன் நெருக்கமான இருந்தனர்.

இயக்கங்கள் தமிழகத்தை பின்தளமாக பாவித்த சமயத்தில் எம்.ஜி.ஆர் தமிழக முதல்வராக இருந்தார். அவருக்கு பிரபாகரனில் அலாதி பிரியம். ஒருமுறை தமிழக காவல்துறை புலிகள் இறக்குமதி செய்த தொலைத்தொடர்பு கருவிகளை பறிமுதல் செய்துவிட்டது. அதை மீள ஒப்படைக்க வேண்டுமென பிரபாகரன் உண்ணாவிரதம்இருந்தார். இந்த விடயத்தில் உடனடியாக எம்.ஜி.ஆர் தலையிட்டு, தொலைத்தொடர்பு கருவிகளை மீள ஒப்படைக்க வைத்தார்.

1984இல் இன்னொரு சம்பவம் நடந்தது. புலிகள் தமது சொற்படி நடக்கமாட்டார்கள் என்பதை இந்திய உளவுப்பிரிவு மெல்ல மெல்ல நாடிபிடித்து அறிந்து கொள்ள ஆரம்பித்த சமயம். புலிகளை தவிர்த்து மற்றைய இயக்கங்களை பலப்படுத்தலா மென றோ நினைத்தது. இதன்படி ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கங்களிற்கு ஒரு தொகை ஆயுதங்களை கொடுத்தது. புலிகளிற்கு கொடுக்கவில்லை. இலங்கையில் அப்போதிருந்த இயக்கங்களை ஊட்டி வளர்த்து, கோட்பாதராக இருந்தது றோ தான். பணம், ஆயுதம் வழங்கும்போது யாருக்கும் அதிகமாக வழங்கினால், அதிருப் திகள் வருமென்பதைறோ அறிந்திருந்தது. அதனால் அப்படி பாரபட்சம்காட்டாது. தமது சொல்படி புலிகள் நடக்கவில்லை யென்றதும், றோ இப்படி செயற்பட்டது. இதன்மூலம் புலிகளை வழிக்கு கொண்டு வரலாமென றோ நினைத்திருக்கலாம்.

என்றாலும் றோவின் கணக்கிற்குள் புலிகள் அகப்படவில்லை. எம்.ஜி.ஆரின் உதவியை புலிகள் நாடினார்கள். ஒருநாள் சங்கரும் (புலிகளின் வான்படை தளபதி யாக இருந்தவர்), பிரபாகரனும் சென்று எம்.ஜி.ஆரை சந்தித்தனர். றோவின் நடவடிக் கைகளை பற்றி எம்.ஜி.ஆரிடம் விளங்கப் படுத்தினார் பிரபாகரன். அனைத்து


புலிகளின் ஆர்.பி.ஜி பிரிவான விக்டர் கவச எதிர்ப்பு பிரிவு


கட்டன் பண்டிதர்


எம்.ஜி.ஆர், பிரபாகரன், கேணல் சங்கர்

பிரச்சனைகளையும் ஆறுதலாக கேட்ட எம்.ஜி.ஆர், நான்கு கோடி ரூபாவை புலிகளிற்கு வழங்கினார். அந்த சமயத்தில் இது பெருந்தொகை பணம்.

இந்த பணத்தை பயன்படுத்தித்தான் புலிகள் முதன்முதலாக வெளிநாட்டில் பெருமளவு ஆயுதங்களை வாங்கினார்கள். இந்த ஆயுதங்கள் தமிழகத்தின் ஊடாகவே யாழ்ப்பாணத்திற்கு வந்தது. அப்போது புலிகள் வாங்கிய ஆயுதங்களில் ஒன்று ஆர்.பி.ஜி. பண்டிதர்தான் அப்பொழுது புலிகளின் நிதி, ஆயுத களஞ்சிய பொறுப் புக்களை கவனித்துக் கொண்டிருந்தார்.


1985 ஜனவரியில் அச்சுவேலியில் இருந்த பண்டிதரின் முகாமை இலங்கைஇராணுவம் சுற்றிவளைத்து தாக்கியதில் பண்டிதர் மரணமாகியிருந்தார். அந்த முகாமில்இருந்து ஆர்.பி.ஜியை இராணுவம் முதன்முதலில் கைப்பற்றியது. கைப்பற்றிய போது, அது என்ன ஆயுதம் என்பதே இராணுவத்திற்கு தெரிந்திருக்கவில்லை. பின்னர் கொழும் பிற்கு அனுப்பப்பட்டுத்தான், ஆர்.பி.ஜி என்பதை கண்டறிந்தார்கள். ஈழப்போ ராட்ட வரலாற்றில் புலிகள் அறிமுகப்படுத் திய ஆயுதங்கள் அநேகம். அது பற்றி கால ஒழுங்கில் பின்னால் குறிப்பிடுகிறேன்.

புலிகள் முதன்முதலில் ஆர்.பி.ஜி கொள் வனவு செய்தபோது, அதை இயக்க திடகாத் திரமான போராளி தேவையென கருதி னார்கள். ஆர்.பி.ஜியை இயக்க பொருத்த மானவர் என பிரபாகரன் கணித்தவர் சொர்ணம்.

சொர்ணம்தான் புலிகளின் முதலாவது ஆர்.பி.ஜி சூட்டாளர். அவரது உதவியாளர் தேவன். பின்னாளில் கடற்புலிகள் அமைப்பில் இருந்தவர். கிட்டு இவரில் அன்பாக இருந்தவர். கிட்டு நாட்டைவிட்டு போகும்போது தனது ரிவோல்வரை இவரிடம்தான் கொடுத்துவிட்டு சென்றார். தேவன் கடைசிவரை அதை வைத்திருந்தார்.

ஆர்.பி.ஜியுடன் தொடர்புபட்ட இன்னொரு கதையுள்ளது. பிரபாகரனின் நகைச்சுவை உணர்விற்கு நல்ல உதாரணம் இது! அடுத்த வாரம் அதை பார்ப்போம்.

(தொடரும்)



ஆர்.பி.ஜி

# வெளிர்நிற சாயலில் மலர்தோரணமாய் உலா வரும் லெஹன்கா



பஷன் உலகின் உன்னதமான வரவு லெஹன்கா சோலி. லெஹன்கா சோலி அணிகின்ற போது கவுரவமும், அழகும், ஆடம்பரமும் கூடவே அணிவகுக்கும்.

ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு விதமான வடிவமைப்பும், வண்ண கலவையும் சேர்ந்த லெஹன்கா சோலிகள் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வருகின்றன. குட்டை மற்றும் நீண்ட அமைப்பு கொண்ட பிளவுஸ் பகுதியுடன் உயரமான பாவாடை அமைப்பு கொண்டது லெஹன்கா.

இதற்கு இணையாக அகலமான வேலைப்பாடு நிறைந்த சோலி எனப்படும் தாவணி பகுதி தனியாக தரப்படுகிறது. சோலி அணிந்தும், சோலி அணியாதவாறும் லெஹன்கா உடுத்தி கொள்ளலாம். எந்த விதமான விழாவிற்கு லெஹன்கா பொருத்தமான ஆடை.

**வெளிர் நிற பூவேலைப்பாடு லெஹன்காகள்:**

முன்பு அதிக ஆடம்பர வேலைப்பாடுகள் நிறைந்த லெஹன்காகள் மட்டும் அதிகம் உருவாக்கப்பட்டன. தற்போது கஷ்வல் பார்ட்டிகளுக்கு அணிந்து செல்ல ஏற்றவாறு வெளிர் நிற பூ பிரிண்ட் மற்றும் வேறு டிசைன் செய்யப்பட்ட லெஹன்கா வருகின்றன. இவை பிரமாண்ட தோற்றத்தை தரவில்லை என்றாலும் லெஹன்கா என்ற உயர் மதிப்பு ஆடைக்கு உரிய தகுதியுடன் கூடுதல் வேலைப்பாட்டுடன் உருவாக்கப்படுகின்றன.

நமது உடை நாகரீகத்தில் ஓர் வெஸ்டர் ஆடை என்று கூறுவது போன்று இங்கிலிஷ் வண்ண கலவை, பூவேலைப்பாடு என்று மொடர்ன் டிரஸ் போன்று லெஹன்கா உருவாக்கம் மாற்றம் பெற்றுள்ளது. இதில் பிளவுஸ் அமைப்பு நீண்ட கைபகுதி கொண்ட சட்டை அமைப்பு போன்று டிசைன் செய்யப்படுகிறது. அத்துடன் பாவாடை அமைப்பு பிளவுஸ் கீழ்ப்பகுதியுடன் இணையும் வகையில் உடுத்தி கொள்வதும் புதிய வகை லெஹன்காவில் உள்ளது.

**எம்ரோய்டரி லெஹன்கள்:**



அடர்த்தியான ஒரேஞ்ச், மெரூன், நீலம், பச்சை போன்ற வண்ணங்களில் திருமண பெண்ணுக் குரிய ஆடைகளாக பெரிய பிரமாண்ட எம்ரோய்டரி லெஹன்கா உருவாக்கப்படுகிறது. முக்கியமான விழாவில் ராஜ அலங்கார தோற்றத்துடன் காண வகை செய்வது, முழு பாவாடை அமைப்பும் தங்க தோரணை வாயில் போன்ற ஜரிகை எம்ரோய்டரி செய்யப்பட்டு, அதே ஜரிகை வேலைப்பாட்டுடன் ஷோர்ட் பிளவுஸ் மற்றும் நெட் துணியில் அகல ஜரிகை மோடிப்கள் வைத்தவாறு உள்ளன. இந்த ஆடைக்கு ஏற்ற கச்சிதமான நகை அணிந்தால் எந்த பெண்மணியும் ஓர் இளவரசியை போல் தோற்றமளிப்பர்.

**மலர்கள் தவழும் லெஹன்கா சூட்:**

இந்த வகை லெஹன்கா முழுகை சட்டை பிளவுஸ் கொண்ட நீள் சட்டை சூட் போன்று இருக்கும். அதற்கு இணையான பாவாடை அமைப்பு. இதில் பாவாடை அமைப்பு மிக குறைவான வேலைப்பாடு கொண்டதாக கீழ் ஜரிகை போர்டர் மட்டும் உள்ளவாறு இருக்கும். இந்த கோட் பகுதி ஒரு பக்கம் வளைந்த கொடி அமைப்பில் பூக்கள் ஜரிகை லேஸ் வேலைப்பாட்டில் பூத்திருப்பது போன்று சுழன்று வந்து வலபக்க தோள் பக்கம் வந்து மார்பு பகுதியில் முடியும். கோட் அமைப்பிலான காலர் அமைப்பு கச்சிதம். இதற்கேற்ற பிளைன் டிசைன் சோலி இணைப்பாக தரப்படும். விழாக்கள், ஆடம்பர விழாக்கள் என அனைத்திற்கும் அணிய ஏற்ற அற்புத வேலைப்பாடு கொண்ட லெஹன்கா.

# யோகா நித்ரா
## (ஆசன உறக்கம்)

இந்த ஆசனம் முந்தைய காலத்தில் மேற்கொண்ட ஆசனம் ஆகும். நமது உடல்மற்றும்புத்திஇவற்றைஅமைதியாக்க இந்த ஆசனம் உதவுகிறது. யாரெல்லாம் தூக்கத்தை தொலைக்கிறார்களோ அவர்களுக்கு இது உதவும்.

இதை எப்படி செய்வது என்பதை வாழ்க்கை ஒரு கலையில் கற்றுக் கொள்ளுங்கள். இது உங்கள் உடலுக்கு தேவையான ஆற்றலை கொடுக்கிறது.

20 நிமிடங்கள் இந்த ஆசனத்தை செய்தால் 2 மணி நேரம் அதிகமான தூக்கத்தை தருகிறது. தூங்கும் சமயத்தில் நரம்புகள் கிளர்ச்சியாவதிலிருந்து காக்கிறது.

ஓய்வின்மை, பாதுகாப்பின்மையால் வெறுப்பு, கவலை உளைச்சல் மற்றும் பயத்திலிருந்து காக்கும். மன உறுதியை வளர்த்துக் கொள்வீர்கள். வயோதிகம் கட்டுப்படுத்தப்படும். சக்தி அதிகரிக்கும். தூக்கமின்மை விலகும். தூக்க மாத்திரைகளின் தேவைகள் குறையும்.

**செய்முறை:**

விரிப்பில் மல்லாக்க படுக்கவும். தலை விரிப்பின் மேல் இருக்குமாறு பார்த்துக்கொள்ளவும். கால்களை சற்றே அகல விரித்து வைக்கவும்.


துடைகளை விட்டு விலகியிருக்குமாறு கைகள் முழுதையும் இரு பக்கமும் நீட்டவும். உள்ளங்கைகள் மேல் நோக்கி இருக்கவேண்டும்.

மூச்சுக்காற்றை இயல்பாக மூக்கு வழியாக சுவாசிக்கவும். உடல், மனம் ஆகியவற்றின் நினைவின்றி உறக்க நிலையில் இருக்க வேண்டும்.

இது போன்ற சாந்தமான நிலையில் நீங்கள் எதையும் உணரமாட்டீர்கள், எதையும் கேட்கமாட்டீர்கள், புலன் உணர்வு இருக்காது.







# 'அதீத அக்கறை' பெற்றோர்கள்

சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை எங்கேயும் எப்போதும் கண்ணும் கருத்துமாய் பாதுகாப்பார்கள். அவர்களின் ஒவ்வொரு அசைவையும் கவனித்துக் கொண்டே இருப்பார்கள். பார்த்துப் பார்த்து உணவூட்டுவார்கள். சிறு உடல்நல பாதிப்பு என்றாலும் துடித்துப் போய் ஆஸ்பத்திரிக்கு ஓடுவார்கள். இப்படிப்பட்ட பெற்றோரை பிற பெற்றோரும் வியப்பாய் பார்ப்பார்கள். 'பெத்தவங்கன்னா இப்படித்தான் இருக்கணும்' என்பார்கள்.

ஆனால், குழந்தைகளை கண்ணுக்குள் வைத்துக் கவனித்துக்கொள்ளும் 'அதீத அக்கறை' பெற்றோரால் அக்குழந்தைகளுக்கு அபாயம்தான் அதிகம் என்கிறார்கள் ஆய்வாளர்கள். குழந்தை எங்கே கீழே விழுந்து காயம்பட்டுக்கொள்ளுமோ என்று மேற்கண்ட பெற்றோர் கருதி விளையாடாமல் தடுப்பதால், அவர்களின் எடை கூடும் அபாயம் அதிகரிக்கிறதாம்.

இதுதொடர்பான ஆய்வை அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாநிலப் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் மேற்கொண்டனர். அவர்கள், பூங்காவுக்கு வரும் குடும்பங்களைக் கவனித்தனர். அப்போது, அதீத அக்கறை பெற்றோர் தங்கள் குழந்தைகள் அதிகம் ஓடியாடாமல், விளையாட்டு அமைப்புகளில் ஏறி விளையாடாமல் பார்த்துக் கொண்டனர். குழந்தைகள் இயல்பாக விளையாடுவதைத் தடுத்த இவர்கள், அவர்களை பெஞ்சுகளில் உட்கார வைப்பதில் கவனமாக இருந்தனர். இத்தகைய பெற்றோர்களை 'ஹெலிகொப்டர் பெற்றோர்' என்கிறார்கள். நம்மூர் பாஷையில் 'பொத்திப்பொத்தி' வளர்க்கும் பெற்றோர் எனலாம்.

"இன்று பல பெற்றோர் தங்கள் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்து அதிக கவலை கொண்டவர்களாக இருக்கின்றனர். எனவேதான் அவர்களைக் கண்காணித்துக் கொண்டே இருக்கிறார்கள். அதன் விளைவாக, குழந்தைகள் தங்கள் சம வயது நண்பர்கள், அண்டை அயலாருடன் விளையாடும் வாய்ப்பு குறைகிறது. தொலைக்காட்சி அல்லது கணினி முன்னிலையிலேயே உட்கார்ந்திருக்கும் வாய்ப்பு அதிகரிக்கிறது" என்கிறார், ஆய்வாளர்களில் ஒருவரான டொக்டர் ஜேசன் பொக்காரோ.

இவர்கள் அமெரிக்காவில் 20 பூங்காக்களை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டார்கள். அங்கு வந்த குழந்தைகளை, விளையாடாமல் 'தேமே' என்று உட்கார்ந்திருப்பவை, ஓரளவு ஓடியாடுபவை, ரொம்பத் தீவிரமாக விளையாடுபவை என்று பிரித்தார்கள்.

தங்கள் ஆய்வின் அடிப்படையில், பொதுப் பூங்கா அமைப்பை வடிவமைக்கலாம், அதன் மூலம் பெற்றோரை ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேல் குழந்தைகளை நெருங்க முடியாமல், அமர்ந்து கண்காணிக்கும் வகையில் செய்யலாம் என்று இந்த ஆய்வாளர்கள் கூறியிருக்கின்றனர்.



## வயிறு உபாதைகளை போக்கும் சுக்கு குழம்பு

தேவையான பொருட்கள்: சுக்கு ஒரு சிறிய துண்டு, மிளகு 2 டீஸ்பூன், வெந்தயம் ஒரு டீஸ்பூன், கடுகு, உளுந்தம்பருப்பு தலா அரை டீஸ்பூன், புளி பெரிய நெல்லிக்காய் அளவு, சின்ன வெங்காயம் 200 கிராம், தக்காளி 2, மஞ்சள் தூள் கால் டீஸ்பூன், கறிவேப்பிலை சிறிதளவு, மிளகாய்த்தூள் அரை டீஸ்பூன், எண்ணெய், உப்பு தேவையான அளவு.

செய்முறை: புளியை நன்றாக கரைத்து கொள்ளவும். தக்காளி, சின்ன வெங்காயத்தை பொடியாக நறுக்கி கொள்ளவும். சுக்கு, மிளகு, வெந்தயத்தை எண்ணெய் விடாமல் தனித்தனியே வறுத்து, ஒன்றாக சேர்த்து மிக்ஸியில் பொடித்துக் கொள்ளவும்.

கடாயில் எண்ணெய் விட்டு, காய்ந்ததும் கடுகு, உளுந்தம்பருப்பு, கறிவேப்பிலை போட்டு தாளித்த பின், சின்ன வெங்காயம் சேர்த்து வதக்கவும். சின்ன வெங்காயம் சிறிது வதங்கியதும் இதில் நறுக்கிய தக்காளியைப் போட்டு வதக்கவும்.

தக்காளி நன்றாக வதங்கியதும் அதில் புளிக்கரைசல் விட்டு உப்பு, மஞ்சள்தூள், மிளகாய்த்தூள் சேர்த்து கொதிக்க விடவும். குழம்பு திக்கான பதம் வந்து எண்ணெய் பிரிந்து வரும்போது பொடித்த சுக்கு கலவையைச் சேர்த்து, ஒரு கொதி வந்ததும் இறக்கவும். சூடபரான சுக்கு குழம்பு ரெடி.



# பெண்கள் கணவனை ஏமாற்றுவதற்கான காரணங்கள்

பெண்கள் தன் கணவனை சில மன உளைச்சலால்தான் ஏமாற்றுகிறார்களாம். அவர்கள் மனதில் உண்டாகும் வலி, ஏன்தான் இவரை திருமணம் செய்தோமோ என்று சிந்திக்க வைக்கிறது. வீட்டில் பார்த்து செய்யப்படும் திருமணங்களில் பெண்கள் தனது கணவனை திருமணத்திற்கு முன்பும் காதலிப்பதில்லை, கணவன் செய்யும் சில கொடுமைகளால் திருமணத்திற்கு பின்னரும் காதலிக்க முடிவதில்லை.

சில பெண்கள் பணம், வீட்டில் இருப்பவர்களின் கட்டாயம் அல்லது குழந்தை போன்ற தவறான காரணத்திற்காக திருமணம் செய்துகொள்கிறார்கள். இதனால் தான் தம்பதிகளுக்குள் காதல் ஏற்படுவதில்லை. ஒரு முழுமையற்ற உணர்வு வாழ்க்கையில் தோன்றுகிறது.

தவறான உறவில் ஈடுபடும் பெண்களால், எனக்கு இந்த உறவில் விருப்பம் இல்லை, எனது வாழ்க்கை வெறுமையாக இருக்கிறது என தனது கணவனிடம் வெளிப்படையாக சொல்ல முடியாது. எந்த ஆண் தன் மீது பாசம் காட்டுகிறானோ அவனை நோக்கி அவள் ஈர்க்கப்படுகிறாள்.

சில பெண்கள் தங்களது முன்னாள் காதலன், கணவனால் உண்டாகும் பிரச்சனைகளை தீர்த்து வைப்பான் என நம்பி தொடர்பில் இருக்கிறார்கள். ஆனால் இந்த தொடர்பு பிரச்சனையை அதிகப்படுத்துமே தவிர குறைப்பதில்லை என்பதை அவர்கள் உணருவதில்லை.


கணவன் மனைவிக்கு இடையில் பிரச்சனைகள் வரும் போது சில புதிய உறவுகள் இடையில் வந்துவிடுகின்றன. புதிதாக திருமணமான தம்பதிகளுக்கிடையே சில கருத்து வேறுபாடுகள் ஏற்படுவது சாதாரணம் தான். இதனை வெளி ஆட்களுடன் பகிர்ந்து கொண்டு உறவில் சிக்கல்களை உருவாக்க வேண்டாம்.

நீங்கள் தவறை உணர்ந்து திருந்திவிட்டால், கணவரிடம் இருந்து உடனடி மன்னிப்பை எதிர்பார்க்காதீர்கள். நீங்கள் செய்த தவறு மற்றவர்களை விட உங்களது கணவரை தான் அதிகமாக பாதிக்கும். எனவே அவர் உங்களை மன்னித்து ஏற்றுக்கொள்ள சிறிது காலம் ஆகும். உங்களது கணவர் உங்களை மன்னிக்கலாம் அல்லது மன்னிக்காமலும் போகலாம். அவர் மன்னிக்கும் வரை காத்திருக்க வேண்டியது அவசியம். நீங்கள் ஏதேனும் விபரீதங்கள் செய்து அவரை மிரட்டுவது, கோபப்படுவது கூடாது. உங்கள் கணவர் உங்களை ஏமாற்றியிருந்தால் உங்களது மனநிலை எப்படி இருக்கும் என யோசித்து பாருங்கள்.

ஒருவேளை உங்களது கணவர் உங்களை மன்னித்து ஏற்றுக்கொண்டால், இனிமேல் அவரை ஏமாற்றக்கூடாது என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். மீண்டும் ஒருமுறை அவரது நம்பிக்கையை நீங்கள் இழந்தால் உங்களை யாருமே மன்னிக்கமாட்டார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

சிலபெண்கள் பல ஆண்டுகளாக காதலித்த காதலனை ஏதோ சில காரணங்களுக்காக பிரிந்துவிட்டு, தனது திருமணத்திற்கு பின்னர் கணவருடன் உண்டாகும் பிரச்சனைகள் காரணமாக, தனது முன்னாள் காதலனுடன் கணவருக்கு தெரியாமல் தொடர்பில் இருக்கிறார்கள். இது தன் கணவருக்கு செய்யும் துரோகம் என்று அவர்கள் உணருவதில்லை.

உங்களது வாழ்க்கை துணையை விட ஒரு பாதுகாப்பான உறவு உங்களுக்கு யாரும் இல்லை என்பதை உணருங்கள். பிறர் மீது காட்டும் அன்பை உங்களது கணவர் மீது காட்டுங்கள். அவர் அன்பே இல்லாதவராக இருந்தாலும் கூட உங்களது அன்புக்கு அவர் எதிர் அன்பை காட்டுவார்.



# குழந்தைப்பேறு தள்ளிப்போகும் பெண்கள் கடைபிடிக்க வேண்டிய உணவு முறைகள்

பெண்ணுக்கு மாதவிடாய் சுழற்சி ஒழுங்கற்று இருந்தால், முதலில் அதைச் சீராக்க சிறப்பு உணவு அவசியம். இன்று, பெரும்பாலும் சீரற்ற மாதவிடாய்க்குச் சினைப்பை நீர்க்கட்டிதான் முதல் காரணமாகச் (Polycystic Ovary Syndrom) சொல்லப்படுகிறது. அதற்காக ரத்த இன்சுலின் அளவைக் குறைக்கும் மருந்துகளும் பரிந்துரைக்கப்படுகின்றன.

உண்மையில், மாதவிடாய் நாட்களின் ஒழுங்கின்மை தவிர, வேறு பிரச்சனைகள் சினைப்பை நீர்க்கட்டிகளால் கிடையாது. கருமுட்டையானது கர்ப்பப்பையைப் பற்றும் நாள் தாமதப்படுவதுதான் ஒழுங்கற்ற மாதவிடாய்க்குக் காரணமே தவிர, மலட்டுத் தன்மைக்கு சினைப்பை நீர்க்கட்டிகள் ஒருபோதும் காரணமாயிருக்காது. பாலி சிஸ்டிக் ஓவரி என்று தெரிந்தால், செய்ய வேண்டியது எல்லாம் உணவில் நேரடி இனிப்புப் பண்டங்களைத் தவிர்ப்பதும், நார்ச்சத்து நிறைய உள்ள கீரைகள், லோ கிளைசிமிக் (Low Glycemic Foods) உணவுகளை அதிகம் எடுத்துக்கொள்வதும் தான்.

இவை தவிர, பூண்டுக் குழம்பு, எள்ளுத் துவையல், கறுப்புத்தோல் உளுந்து சாதம் ஆகியவை ஹார்மோன்களைச் சீராக்கி, இந்த பிசிஓடி பிரச்சனையைத் தீர்க்க உதவும். சுடு சாதத்தில், வெந்தயப் பொடி ஒரு டீஸ்பூன் அளவில் போட்டு, மதிய உணவை எடுத்துக்கொள்வதும் நல்லது.

- மாதவிடாய் வரும் சமயம், அதிக வயிற்று வலி உள்ள பெண்கள், சோற்றுக் கற்றாழை மடலின் உள்ளே இருக்கும் ஜெல்லி போன்ற பொருளை இளங் காலையில் இரண்டு மாதங்களுக்குச் சாப்பிட வேண்டும். தினமும் சிறிய வெங்காயத்தை 50 கிராம் அளவுக்காவது உணவில் சேர்ப்பது, பிசிஓடி பிரச்சனையைப் போக்க உதவும்.
- கருத்தரிப்பதில் தைரோய்டின் பங்கு கணிசமானது. சரியான அளவுக்கு தைராரோய்ட் சுரப்பு இல்லையென்றாலும், கருத்தரிப்பு தாமதமாகும். உணவில் மீன்கள், கடல்கல்லூப்பி 'அகர் அகர்' எனப்படும் வெண்ணிறக் கடல் பாசி ஆகியவற்றைச் சேர்ப்பது, கடுகு, முட்டைக்கோஸை அதிக அளவில் எடுத்துக்கொள்வதும் தைரோய்ட் சீராக உதவும்.
- குழந்தைப்பேற்றுக்கு உதவும் மிகச் சிறந்த உணவு கீரைகள். தினமும் ஏதேனும் ஒரு கீரையைப் பெண்கள் அவசியம் எடுத்துக்கொள்ள வேண்டும். முக்கியமாக பசலைக்கீரை, முருங்கைக் கீரை, அரைக்கீரை. இவை ஆண்மையையும் பெருக்கும் என்கிறது ஒரு சித்த மருத்துவப் பாடல். இந்தக் கீரைகளை பாசிப் பயறு, பசு நெய் சேர்த்துச் சமைத்து உண்ண வேண்டும்.
- ஆண்களுக்கு விந்து அணுக்கள் குறைவு, விந்து அணுக்களின் இயக்கம் குறைவாக இருப்பது போன்ற காரணங்களால் குழந்தைப்பேறு தாமதப்படுகிறதா? உணவில் அதிகமாக முளை கட்டிய பயறு வகைகளையும், லவங்கப்பட்டை, ஜாதிக்காய் போன்ற நறுமணப் பொருட்களையும் சேர்க்க வேண்டும். தினமும் முருங்கைக்கீரை, முருங்கை விதை (உலர்த்திய பொடி), நாட்டுமருந்துக் கடைகளில் கிடைக்கும் முருங்கைப்பிசின், சாரைப் பருப்பு ஆகியவற்றையும் உணவில் சேர்க்க வேண்டும். முருங்கை, தூதுவளை, பசலை, சிறுகீரை ஆகிய கீரைகளில் ஏதாவதொன்றை தினமும் சமைத்துச் சாப்பிட வேண்டும்.
- மாமிச உணவை விட, மரக்கறி உணவே (காய்கறி, பழங்கள்) விந்து அணுக்களை அதிகரிக்கவும் அதன் இயக்கத்தைக் கூட்டவும் உதவும்.
- முடிந்தவரை வீட்டில் தயாரிக்கப்பட்ட, எண்ணெய்ச் சத்து அதிகம் இல்லாத உணவுகளுக்கும், கீரை, பசுங்காய்கறிகளுக்கும், பழவகைகளுக்கும் உணவில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.
- குழந்தைப்பேறு நெடு நாட்களாகத் தள்ளிப் போகும் பெண்கள், கொத்து மல்லிக் கீரையை 2 டீஸ்பூன் அளவுக்கு எடுத்து, அதனுடன் ½ டீஸ்பூன் வெந்தயத்தைச் சேர்த்து, அதிகாலையில் வெறும் வயிற்றில் சாப்பிடுவது நல்ல பலன் தரும்.



இந்தவாரம்
க.சிவநேசன்

# என்ன செய்தார்கள் நமது பிரதிநிதிகள்?

## வடமாகாணசபை உறுப்பினர்களின் ஸ்கான் ரிப்போர்ட் - 4

தீபம் குழு


வடமாகாணசபை தேர்தலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர் கந்தையா சிவநேசன். மாகாணசபை உறுப்பினர் பதவியை சொற்ப வாக்குகளால் இழந்திருந்தார். என்றாலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றியடைந்த இருவர், பின்னாளில் மரணமானார்கள். அவர்களில் ஒருவரான கனகசுந்தரசுவாமி வீரவாகுவின் வெற்றிடத்திற்கு சிவநேசன் நியமிக்கப்பட்டார்.

புளொட் அமைப்பின் முக்கிய உறுப்பினர் சிவநேசன். பவன் என்ற பெயரில் அறியப்பட்டவர். யுத்தகாலத்தில் புளொட் அமைப்பு வவுனியாவை முக்கிய தளமாக கொண்டியங்கியது. இந்தக்காலத்தில் புளொட் தொடர்பான இரண்டுவிதமான அபிப்பிராயங்கள் இருந்தன. குடியேற்றங்கள் அமைத்தது, வவுனியாவை சிங்கள மயமாதலில் இருந்து பாதுகாத்தது போன்ற முக்கியமான செயற்றிட்டங்களை செய்திருந்தனர். இதே வேளை, இராணுவத்துடன் நெருக்கமாக செயற்பட்டார்கள் என்ற விமர்சனமும் உண்டு. இந்த விமர்சனங்களில் பெரும்பகுதி குறிப்பிட்ட சில முக்கியஸ்தர்களை மையப்படுத்தியே எழுந்தது. இதில் சிவநேசன் அவ்வளவாக சிக்குப்படவில்லை.

முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு நகரம் போன்ற இடங்கள் வவுனியாவுடன் அதிகம் தொடர்புள்ள பிரதேசங்கள். இவைதான் சிவநேசனின் பிரதேசம். அவரது தோல்விக்கு வவுனியா அபிப்பிராயங்களும் ஒரு காரணம்தான். அதைவிட முக்கியமானது, எல்லா வேட்பாளர்களும் பணத்தை தண்ணீராக இறைக்க, இவர் சிக்கன பிரசாரம்தான் செய்தார். கட்சியும் அவ்வளவாக பிரசார நிதி கொடுக்கவில்லை. இந்த வருத்தம் அவரிடம் இருந்தது. எனினும், 2015ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மாகாணசபை உறுப்பினராக பதவியேற்றார்.

எல்லோருடனும் எளிமையாக பழகுகிறார், எப்பொழுது வேண்டுமானாலும் வீட்டு கதவை தட்ட முடிகிறது என்பது பொதுவான உள்ளூர் அபிப்பிராயம். நீண்டகால போராளியாக இருந்ததாலோ என்னவோ, அரசியல் பந்தா எதுவும் அவரிடம் இல்லை.

"இது ரத்த பூமி. குழாயை திறந்தால் தண்ணீர் வராது-இத்தம்தான் வரும்" என்று சொல்லாதது ஒன்றுதான் வடமாகாண சபையில் குறை. மற்றும்படி, தினமும்



ரணகளம்தான். ஆளையாள் குறிவைத்து பிச்சல்பிடுங்கலாகவே அரசியல் நகர்கிறது. இந்த சர்ச்சைகள், குழப்பங்களில் சிக்குப்படாதவர் சிவநேசன். மாகாணசபைக்குள் நடக்கும் முக்கிய விவாதங்களின்போது மட்டும் வாய்திறக்கும் மிகச்சிலருள் இவரும் ஒருவர்.

முல்லைத்தீவில் ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழரசுக்கட்சிக்கிடையில் கடுமையான போட்டி நிலவுகிறது. இரண்டு முகாமாக மாறி, பொது நிகழ்வுகளில் கலந்துகொள்ள தீவிர போட்டி நடக்கிறது. பொது நிகழ்வுகளின்போது அந்த பிரதேச முக்கியஸ்தர்களை வளைத்து, நிகழ்வில் கலந்துகொள்ள இரண்டு கட்சிகளும் தீவிரமாக போட்டியிட்டு கொண்டிருக்கின்றன. முல்லைத்தீவில் இந்த இரண்டு கட்சிகளின் பிரதிநிதிகளும் செல்வாக்கானவர்கள். இந்த மோதலில் சிவநேசன் அடிபட்டு செல்கிறார். முன்னர் ரிசாட் பதியுதீனின் நெருங்கிய முல்லைத்தீவு உதவியாளரை ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியினர் கழற்றி வந்துள்ளனர். ஏற்கனவே ரவிகரன் ஈ.பி.ஆர்.எல்.எவ் இற்காக அடித்தாடிக் கொண்டிருக்கிறார். இவர்களின் அதிரடியை சமாளிக்க தமிழரசுக்கட்சியும் கற்றவித்தைகளை எல்லாம் மொத்தமாக இறக்கிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படி தீப்பொறி பறக்கும் ஆட்டக்களத்தில் ஏதோ ஒரு மூலையில் மெதுவாக ஆடிக்கொண்டிருக்கிறார் சிவநேசன். எந்த மேடையிலும் சிக்சர் அடிக்கும் வித்தையை ரவிகரன் போன்றவர்கள் கற்றுவைத்திருக்க, வழக்கமான அரசியல்வாதிகளிற்குரிய இயல்புகளின்றி தடுமாறுகிறார் சிவநேசன்.

மாவட்டத்திலுள்ள மாகாணசபை உறுப்பினர்களில் நிதானமாக செயற்படுகிறார், முஸ்லிம்களின் மீள்குடியேற்றம், அபிவிருத்தி பணிகளில் கவனமாக இருக்கிறார், எந்தநேரமும் கதைத்துக் கொண்டிருக்க வேண்டுமென நினைப்பவர் அல்ல என்ற அபிப்பிராயமும் உள்ளது. முல்லைத்தீவில் காணி அபகரிப்பு நடக்கிறது; குடியேற்றங்கள் நடக்கிறது என மற்றைய உறுப்பினர்கள் மாகாணசபைக்குள் உரத்த குரலில் பேசும் அளவில், இவர் குரல்கொடுப்பதில்லை என்ற அபிப்பிராயமும் உள்ளது.

மாகாணசபை பதவியேற்றதில் இருந்து புளொட் அமைப்பிற்கு குறிப்பிடத்தக்க எந்த பொறுப்பும் வழங்கப்படவில்லை. மற்றைய எல்லா கட்சிகளும் பொறுப்புக்களை பங்கிட்டிருக்க, புளொட்தான் வெறும் கையுடன் உட்கார்ந்திருக்கிறது. தற்போது மாகாணசபைக்குள் நடக்கும் மாற்றங்களின்போது, தமக்கு ஒரு அமைச்சு பதவி கிடைக்கலாமென்ற எதிர்பார்ப்பு அந்த கட்சியிடம் உள்ளது. அப்படியொரு சந்தர்ப்பம் அமைந்தால், சிவநேசன்தான் பட்டியலில் முதலிடத்தில் இருப்பார். கட்சிக்குள் கடும்போட்டியாளராக லிங்கநாதன் இருந்தாலும், சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் வவுனியாவை சேர்ந்தவர் என்பதால், சிவநேசன் அமைச்சராகும் வாய்ப்பு அதிகம். முல்லைத்தீவில் அமைச்சராகும் வாய்ப்புடன் வேறு கட்சிகளை சேர்ந்தவர்கள் யாரும் இல்லையென்பது கூடுதல் பலம்.

அண்மையில் ஊடகவியலாளர் சிவராம் கொலையுடன் இவரது பெயரையும் இணைத்து முதல்வர் கடிதம் எழுதியிருந்தது சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. சிவராம் கொலை விவகாரம் நீதிமன்றத்தில் இருக்கிறது. வழக்குடன் சம்பந்தப்பட்டதாக நீதிமன்றத்தால் குறிப்பிடப்படாத ஒருவரை முதல்வர் அப்படி குறிப்பிட்டது முறையா என்ற சர்ச்சையும் வெடித்தது. சிவநேசனிற்கு அமைச்சர் பதவி கிடைத்துவிடக் கூடாதென்பதற்காக மாகாணசபை உறுப்பினர்கள் சிலர் முதல்வரை பிழையான தகவல் கொடுத்து வழிநடத்தினார்கள் என்ற தகவல் பின்னர் வெளியாகியது.

மாகாணசபையில் இவரால் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று பிரேரணைகள் இன்னும் அங்கீகரிக்கப்பட்டு, விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாமல் உள்ளன. எல்லையோர கிராமமக்களை ஒருங்கிணைத்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் செயற்திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும், வேலைவாய்ப்பு வழங்கும்போது மாவட்டரீதியில் வழங்கப்பட வேண்டும், மக்கள் கருத்து கணிப்பு மையம் உருவாக்கப்பட வேண்டுமென்பவையே அவை.

மாகாணசபைக்குள் நிலவும் இரண்டு அணிகளில், இவர் முதலமைச்சர் ஆதரவு அணி. முன்னாள் விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் மீதான ஊழல்குற்றச்சாட்டு விசாரணை பிரேரணை விபரத்தை ஹன்சாட்டிலிருந்து அகற்றுமாறு முதலமைச்சர் உள்ளிட்ட எட்டு உறுப்பினர்கள் கையெழுத்திட்ட பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதில் சிவநேசன் கையொப்பமிட்டிருந்தார்.

மாகாணசபை சர்ச்சையில் முதல்வரிற்கு ஆதரவாக கையொப்பமிட்டிருந்தார்.

உணர்வுபூர்வமான பல பிரச்சனைகள் முல்லைத்தீவில் நீடித்து வருகிறது. இந்த தருணத்தில் ரி 20 பாணியில் அடித்தாடி வருகிறார்கள் மற்ற உறுப்பினர்கள். இவர்களின் மத்தியில் டெஸ்ட் ஆட்டம் ஆடிக்கொண்டிருக்கிறார் சிவநேசன். ●



▶ வடக்கு, கிழக்கு, மத்திய மாகாணங்களுக்கு இடையிலான 5KM வீதி ஓட்ட போட்டியில் மன்/இலுப்பைக்கடவை பாடசாலை மாணவன் R.டொரின்டன் 8ம் இடத்தை பெற்றுக்கொண்டார்.



▶ மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள உறுகாமம் வெலிக்காகண்டி பிரதேசத்தில் விதை நிலக்கடலை அறுவடை விழா வெகு சிறப்புடன் நடைபெற்றது. விவசாயப் போதனாசிரியர் பிரதீபன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் வீ.பேரின்பராஜா அதிதியாக கலந்துகொண்டு அறுவடையினை ஆரம்பித்து வைத்தார்.




# வவுனியாவை வாட்டும் வரட்சி!

✒வன்னிமது

வவுனியா மாவட்டத்தின் எல்லையோரக் கிராமங்கள் வரட்சியால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. தெற்கே மழை, வெள்ளப்பெருக்கு ஆனால் வடக்கே மழை பொய்த்து போய் நீர் இன்றி மீண்டும் யுத்தம் விட்டுச்சென்ற அவல வாழ்க்கைக்கு செல்ல வேண்டிய கட்டாயத்தில் வாழ்கின்றனர். வவுனியா ஒரு விவசாய நகரம் இம் மக்கள் குளங்களை நம்பியே விவசாயம் செய்பவர்கள்.

இவ்வாறு விவசாயம் செய்பவர்கள் பெரும்பாலும் தமது விவசாய செயற்பாடுகளிற்காக கடன் அல்லது கைமமாற்று பெற்று விவசாயத்தில் ஈடுபட்டு அதன் பின் கிடைக்கின்ற விளைச்சலில் அதனை திருப்பி கொடுப்பது வழமையான ஒன்றாக உள்ளது. அதுவே வெள;ளம் தற்போது ஏற்பட்ட வரட்சி காலங்களில் அரசால் கிடைக்கின்ற மாணியங்களை கொண்டு கடனை ஓரளவிற்கே திருப்பி கொடுக்க முடிவதோடு தமது வாழ்க்கையை நடாத்துவ ஒரு கேள்விக்குறியாகன விடயமாக மாறும். இவ்வாறான நிலையில் இவ்வாண்டு பெரும்போக விவசாயத்தின் போதும் ஏற்பட்ட வரட்சியினால் விவசாயிகள் மிகவும் சிரமத்திற்குள்ளானாலும் அவர்களிற்கான மாணியங்களை உரிய நேரத்தில் வழங்கப்பட்டமையால் ஓரளவிற்கு தமது



வாழ்வாதாரத்தை காப்பாற்றிக்கொள்ள முடிந்தது.

இருந்தாலும் கூட பெரும்போகத்தில் விட்டதை சிறுபோகத்திலாவது சரி செய்யலாம் என்றால் தற்போது அடி மேல் அடியாக சிறுபோகத்திலும் வரட்சி வாட்டிவதைக்க தொடங்கியுள்ளது. மழை இல்லை அதனால் குளத்தில் நீர் இல்லை, அதிக வெப்பம் காரணமாக குளத்தில் இருந்த நீர் ஆவியாகி விட்டது. இவ்வாறான காரணங்களினால் தற்போது வவுனியாவில் 16,000 ஏக்கரில் சிறுபோக விவசாயம் செய்த நிலை மாறி தற்போது வெறும் 1013 ஏக்கரில் மாத்திரமே செய்கை பன்னப்படுகின்றது. இது வழமையாக செய்யப்படும் சிறுபோக அளவை விட 16 மடங்கு குறைவு என்பது முக்கியமாகும். இதனால் விவசாயத்தை தொழிலாக செய்தவர்களுக்கும் அதனை நம்பி கூலி வேலை செய்தவர்களின் வீட்டின் சமையலறை அடுப்பில் காளான் பூக்கின்ற நிலைக்கு இட்டுச்சென்றுள்ளது.

இதன் பயன் எதிர்காலத்தில் நாட்டில் அரிசிக்கான தட்டுப்பாடு அதிகரிக்க ஆரம்பித்துள்ளதுடன், அரச நெல் களஞ்சிய சாலைகள் காலியாக ஆரம்பித்துள்ளதுடன், அரசு அரிசியினை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கையிலும் மும்முரமாக ஈடுபட தொடங்கியுள்ளது. இவ்வாறான ஒரு சூழலில் இனிவரும் பெரும்போகத்திலும் இது தொடர்கதையாகும் போது விவசாய செயற்பாட்டில் ஈடுபட்டவர்கள் பரம்பரை பரம்பரையாக செய்த விவசாயத்தை விட்டு வேறு தொழிலை நாடி செல்ல வேண்டிய நிலைக்கு கொண்டு செல்ல ஆரம்பித்துள்ளது.

வரட்சியால் தற்போது விவசாயம்தான் இப்படி என்றால் வீட்டுக்கிணறுகளிலும் நீர் வற்றியுள்ளது. இதற்கு முக்கிய காரணம் வவுனியாவை பொறுத்த வரையில் நிலத்தடி நீரை தீர்மாணிப்பது குளங்களே. பொதுவாக வவுனியாவில் உள்ள பல கிராமங்களின் பெயர்களின் பின்னால் குளங்களே வருகின்றன. உதாரணமாக வேப்பங்குளம், திருநாவற்குளம், தாண்டிக்குளம் என சொல்லிக்கொண்டே போக முடியும். இதனால் மாவட்டத்தை வாட்டி வதைக்கும் வரட்சி காரணமாக குளங்களில் நீர் வற்ற கிணறுகளின் நீர்களும் வற்ற ஆரம்பித்துவிட்டன.

வவுனியா மாவட்டத்தில் நீர் இன்றி பல கிராமங்களில் மக்கள் அவதிப்படுகின்றனர். குறிப்பாக வவுனியா பிரதேச செயலக பிரிவில் 11,256 குடும்பங்கள், வவுனியா வடக்கில் 2,973 குடும்பங்கள், வவுனியா தெற்கில் 5,316 குடும்பங்கள், வெங்கலச்செட்டிக்குளத்தில் 4962 குடும்பங்களுமாக மொத்தமாக 24507 குடுமபங்களை சேர்ந்த 85771 பேர் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் வவுனியா பிரதேச செயலகத்தின் கீழ் ஈச்சக்குளம் கிராம சேவகர் பிரிவில் 350 குடும்பங்களை சேர்ந்த 1225 அங்கத்தவர்களும், வடக்கில் 3 கிராம சேவகர் பிரிவில் 128 குடுமங்களை சேர்ந்த 488 அங்கத்தவர்களும், செட்டிக்குளம் பிரதேச செயலகத்தின் கீழ் 189 குடும்பங்களை சேர்ந்த 870 அங்கத்தவர்களுடைய ஒரு கிராமமும் பாதிக்கப்பட்டுள்ளது. இவர்களின் குடி நீர் தேவீவையினை பூர்த்தி செய்கின்ற செயற்பாடடினை அனர்த்த முகாமைத்திணைக்களம் செய்து வருகின்றது. குறிப்பாக பிராந்திய சுகாதார நிலையம் மற்றும் நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் தர சான்றிதழ் பெற்ற கிணறுகளில் இருந்து குடிப்பதற்கான நீரினை ஒரு கிராமத்திற்கு ஆகக் குறைந்தது 1000 லீற்றர் வீதமாக 30 நீர் கொள்கலன்களை வைத்து பாதிக்கப்பட்ட மக்களின் குடி நீர் தேவையினை பூர்த்தி செய்கின்றனர்.


அரசு மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்தாலும் மக்கள் அதை இலவசம் என்று வீன் விரயம் செய்கின்ற செயற்பாட்டில் ஈடுபடுவதை ஜீரணிக்க முடியாததாகும். குறிப்பாக சில வரட்சியான கிராமங்களில் குடிநீருக்காக வைக்கப்பட்ட நீரில் குளிக்கின்ற செயற்பாடுகளும் நடைபெறுகின்றது. பொதுவாக ஒரு மனிதன் 06 லீற்றர் நீரினை அருந்த போதுமானது. அவ்வாறு இருக்க தேவைக்கதிகமான நீரை மக்கள் கொண்டு செல்வத வீன் விரயம் செய்வதும் நித்தம் நடாத்தவன்னமே உள்ளது.

**அரசு மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்தாலும் மக்கள் அதை இலவசம் என்று வீன் விரயம் செய்கின்ற செயற்பாட்டில் ஈடுபடுவதை ஜீரணிக்க முடியாததாகும். சில வரட்சியான கிராமங்களில் குடிநீருக்காக வைக்கப்பட்ட நீரில் குளிக்கின்ற செயற்பாடுகளும் நடைபெறுகின்றது.**

இது இவ்வாறிருக்கையில் இவ்வரட்சியால் வீட்டுத்தோட்டம் மற்றும் தோட்ட செய்கையும் பாதிப்படைந்துள்ளதுடன் மரக்கறிகளின் விலைகளும் தற்போது அதிகரித்துக்காணப்படுகின்றது. அத்துடன் மக்கள் வெப்பத்தை தனிப்பதற்காக இளநீர் மற்றும் பழங்களை வாங்கிச்செல்வதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறான நிலைகளில் சொட்டு நீர் நீர்ப்பாசன முறையானது மரக்கறி செய்கை மற்றும் சிறு தானிய செய்கைக்கு சிறந்த ஒன்றாக காணப்படுகின்றது. ஏன் எனில் குறைந்த நீரில் கன்றுகளிற்கு தேவையான அளவு நீரை பயன்படுத்த முடியும் என்பதால்.

**இ.விஜயகுமார்**
உதவி ஆணையாளர்
கமநல அபிவிருத்தி திணைக்களம்



வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக வவுனியா மாவட்ட விவசாயிகளின் மத்தியில் பெரும் மாற்றத்தை கொண்டு வந்துள்ளது. வவுனியாவில் உள்ள குளங்களின் கீழ் உள்ள வயல்களில் வழமையாக செய்கின்ற விவசாயத்தை விட பெருமளவு குறைவாகவே செய்யப்படுகின்றது. வரட்சியின் காரணமாகவும் ஏற்கனவே இருந்த குளத்தின் நீர் ஆவியாதனினாலும் தற்போது சிறுபோகத்தினை 1013 ஏககர் அளவிலேயே விவசாயத்தினை மேற்கொள்கின்றனர். கடந்த பெரும் போகத்தில் விவசாயம் செய்தவர்களிற்கு மத்திய விவசாய அமைச்சின் மூலமாக மானியங்களினை பெற்றுக்கொடுத்துள்ளோம். வயல் செய்து அழிவடைந்த காணிகளிற்கு 6571 விவசாயிகளுக்கு 7435 ஏக்கருக்குரிய பணம் கொடுக்கப்பட்டுள்ளது. அதே வேளை வயல் செய்யாமல் கைவிட்ட விவசாயிகளுக்கு 5280 பேருக்கு 5334 ஏக்கருக்கான பணமும், மேட்டு நில விவசாயம் செய்த விவசாயிகளுக்கு 6538 பேருக்கு 4272 ஏக்கருக்கான பணம் கொடுக்கப்பட்டு மாணிய வேலைகள் முடிவுற்றுள்ளன. இருந்த போதும் விவசாயிகள் தொடர்ச்சியாக வரட்சியினால் பாதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# தமிழ்சுவை: கள்வன் மகன்

பாச மிகுதியில் தலைவனை கள்வன் மகன் என்று காதலி விளிப்பதை குறிப்பிடும் கலித்தொகை பாடல்.

அன்பிற்குரியவர்களை நாம் செல்லமாகத் திட்டுவது உண்டு அல்லவா? அப்படி சங்க இலக்கியத்தில் காதலனை, "திருட்டுப் பயல் மகனே" என்று செல்லமாகச் சொல்கிறாள் காதலி. இதை நாடகக் காட்சி போல காட்டுகிறார் கபிலர். கலித்தொகையில் வரும் அந்தப் பாடல் பற்றிப் பார்ப்போமா?

குடிக்க தண்ணீர் கேட்பது போல தலைவன் தன் வீட்டுக்கு வந்து சென்றதை தோழியிடம் சொல்வதாக அமைந்த பாடல் இது.

நானும் என் தாயும் வீட்டுக்குள் இருந்தோம். வாசலில் ஒருவன் வந்து நின்று, "குடிக்கத் தண்ணீர் தருவீர்களா?" என்று கேட்டான். உடனே என் தாய், "யாரோ குடிநீர் கேட்கிறார்கள் கொண்டுபோய் கொடு" என்றாள். வந்திருப்பது யாரென்று தெரியாமல் நானும் தண்ணீர் கொண்டு சென்றேன். வாசலில் தலைவன் நின்றுகொண்டிருந்தான்.

தண்ணீர் சொம்பை வாங்கியவன், என் முன் கையைப் பிடித்துவிட்டான். அதிர்ச்சியடைந்த நான், "அம்மா இவன் செய்ததைப் பார்" என்று கத்திவிட்டேன். அன்னை அலறியடித்து ஓடி வந்தாள்.

"என்ன செய்தான்?" என்று கேட்டாள்.

"தண்ணீர் குடிக்கும்போது விக்கினான்" என்று சொல்லி சமாளித்தேன். அவன் முதுகை நீவிவிட்டாள் அன்னை.

அப்போது, கொல்வது போல ஓரக்கண்ணால் என்னைப் பார்த்து, புன்னகையால் என்னைக் கூடினான் அந்தக் கள்வன் மகன்.

அடடா என்ன இனிமைஞ்

"உண்ணு நீர் விக்கினான்" என்றேனா, அன்னையும்

தன்னைப் புறம்பு அழித்து நீவ, மற்று என்னைக்

கடைக் கண்ணால் கொல்வான் போல் நோக்கி நகை கூட்டம் செய்தான் அக்கள்வன் மகன்.




# எது நேரம்?

## (உருவக் கதை)

பிறை

பேப்பரில "வேலைக்குஆள் தேவை"என்ற விளம்பரத்தைப் பார்த்ததும் அவர் தனது நண்பர்களுக்கு போன் பண்ணி "டேய் மச்சான் எங்களுக்கு ஏற்ற வேலையொன்று காலியாக இருக்காம். ஆட்களைத் தேடுறாங்கள் நாங்கள் போவமே" என்று கேட்டான். அவனின் நண்பர் களும் "அதற்கென்ன விண்ணப்பத் தைப் போடுவம்" என்று சொல்லி விண்ணப்பித்தார்கள். விண்ணப்பித் தவர்களில் 3 பேருக்கு நேர்முகத் தேர்வுக்கான அழைப்புவந்தது. அன்றைய நாள் மூன்று பேரும் காலையில் சீக்கிரம் எழுந்து வெளிக்கிட்டுக் நேர்முகத் தேர்வுக்குப் போனார்கள். அங்கே கூட்டம் அலைமோதியது.

மூன்றுபேரில் ஒருவர் வேளைக்குப் போய் சேர்ந்துவிட்டார். முதலாவது ஆளாக அங்கே போடப்பட்டிருந்த கதிரையில் அமர்ந்திருக்கிறார். மற்ற வர்கள் இருவரும் 10 ஆவது, 15 ஆவது அமர்ந்திருக்கிறார்கள். ஒருவர் ஒருவராக உள்ளே அழைத்து நேர்முகத்தேர்வு இடம்பெற்றது. நேர்முகத்தேர்வுக்கு வந்த எல்லோரிடம் நேர்முகத்தேர்வினை நடத்திவிட்டு வழியனுப்பினர். அந்த நிறுவனத்தில் வேலைக்கு ஆட்களை எடுத்துவிட்டார்கள் என்பது சிறிதுகாலம் கழித்துதான் இவர்களுக்கு தெரியவந்தது. அப்பொழுது முதலாவதாக சென்று நேர்முகத் தேர்வுக்குத் தோற்றியவன் சொன்னான். "முதலாவதாக வந்தும் வேலை கிடைக்கவில்லை. எனக்கு நேரம் சரியில்லை" என்றான். மற்றவர்கள் சொன்னார்கள் "நேரம் பிந்தி வந்ததால் எமக்கு வேலை கிடைக்கவில்லை" என்றார்கள். உண்மையில் எதுநேரம்.



# சங்கத் தமிழில் நகைச்சுவை

சுவாமிநாதன்

சங்கத் தமிழ் இலக்கியத்தில் நகைச் சுவை அதிகமில்லை. ஆனால் பிற்கால இலக்கியத்தில் கொஞ்சம் அதிகம். ஆயினும் படித்து ரசிப்பதற்கு ஏராளமான கவிதைகள் உண்டு. சங்க இலக்கியத்தின் பதினெட்டு (மேல் கணக்கு) நூல்களில் ஒன்றான நற்றிணையில் இருந்து ஒரு பாடல்:

**நற்றிணை**

புன்கால் நாவற் பொதிப்புற இருங்கனி
கிளைசெத்துமொய்த்ததும்பிபழஞ்
சொத்துப்
பல்கால் அலவன் கொண்டகோள்
கூர்ந்து
கொள்ளாநரம்பின் இமிரும் பூசல்
இரைதேர் நாரைஎய்திவிடுக்கும் (நற்.35)

இந்தியாவுக்கு நாவலந்தீவு (ஜம்பூத்வீபம்) என்று பெயர். தமிழ் இலக்கியத்திலும் சம்ஸ்கிருத இலக்கியத்திலும் இந்தப் பெயர் வருகிறது. ஆகவே இது ஒரு பொருத்தமான பாடல்.

ஒரு நாவல் பழம் கீழே விழுந்தது. அதைப் பறக்கும் வண்டுகள் தம் இனத்தைச் சேர்ந்தவை என்று எண்ணி அதைச் சூழ்ந்து நின்றன. அந்தப் பக்கமாக வந்த நண்டு இவை எல்லாம் பழங்கள் என்று நினைத்து அவற்றைக் கவ்வின. உடனே வண்டுகள் அனைத்தும் ரீங்காரம் செய்துகொண்டு பறந்தன. அந்தப் பக்கம் பறந்து வந்த நாரை இதைப் பார்த்து, பெரிய சண்டை சச்சரவுபோல இருக்கிறது, நாம் போய் சமரசம் செய்து வைக்கலாம் என்று சமரசம் செய்தது.


இது ஒரு நல்ல காட்சி. இயற்கையில் நடக்கும் சில நகைச்சுவை மிகு கட்சிகளைக் கண்டு வியந்த அம்மூவனார் பாடிய பாடல் இது. மேம்போக்காகப் பார்த்தால் இது இயற்கைக் காட்சி பற்றிய பாடல் என்று தோன்றும். ஆனால் இந்தக் காட்சி மூலம் ஒரு செய்தியை மறைமுகமாக உணர்த்துவது சங்கப் புலவர்களின் அகத்துறைப் பாடலில் உள்ள சிறப்பு அம்சமாகும். இதை உள்ளுறை உவமம் என்பர். இதில் புலவர் அம்மூவனார் கொடுக்கும் செய்தி: நாவற்கனியாகிய தலைவியை, நாரையாகிய தலைவன் வந்து தடைகளை நீக்கி திருமணம் நடைபெறச் செய்தான்.

எட்டுத் தொகை நூலில் உள்ள அக நானூற்றிலும் இதேபோல ஒரு நண்டுக் காதல் பாடல் வருகிறது. அதையும் ஒப்பிட்டு மகிழ்வோம். மதுரை மருதன் இளநாகனார் (380) பாடிய பாடல் இது:


**அகலிலை நாவல் உண்துறை உதிர்த்த
கனிகவின் சிதைய வாங்கிக்
கொண்டுதன்
தாழைவேரளை வீழ்துணைக்கு இடூம்
அலவன் காட்டி நற்பாற்று இதுவென
நினைத்த நெஞ்சமொடு நெடிது
பெயர்ந்தோனே
உதுக்காண் தோன்றும் தேரே இன்று
நாமெதிர் கொள்ளாமாயின் தானது
துனிகுவன்
போலாநாணுமிகஉடையன்
(அகம்380)**


பொருள்: உன் ஊர் எது என்று ஒரு பெண்ணை தலைவன் வினவினான். அவன் ஒரு காட்சியைக் காட்டினான் ஒரு நாவல் பழம் கீழே விழுந்தது. அதை ஒரு ஆண் நண்டு இழுத்துச் சென்று தன் அன்பு மனைவிக்குக் கொடுத்தது. அதை நல்ல நண்டு என்று சொல்லிவிட்டுப் போனான். இதோபார்! அவனது தேர் மீண்டும் வந்துவிட்டது என்று தலைவியிடம் தோழி கூறினாள்.



KIRUBAA LEARNERS
KIRUBAA LEARNERS
கிருபா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A)
சாரதிப் பயிற்சிப் பாடசாலை
நல்ல சாரதி
நாட்டுக்கு தேவை.
இன்றே கிருபா லேணர்ஸ் உடன்
இணைந்து கொள்ளுங்கள்.
௨ம் ஆண்டில்
கால் பதிக்கும்
தீபம் வாரமலருக்கு
எமது வாழ்த்துக்கள்...
பெண்களாலேயே
பெண்களுக்கு
பயிற்சி வழங்கப்படும்
வடமாகாணத்தின்
No:1
சாரதி பயிற்சிப்
பாடசாலை
தலைமைக் காரியாலயம்: 226, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
021 222 4353, 021 492 3200, 077 722 5292


TILKO
TILKO
JAFFNA CITY HOTEL
Mob : 077 780 393, 0777 696 443
Address: 70/6, K.K.S. Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 5969, Fax: 021 222 7291
e-mail: tilko.tilak@gmail.com Web: www.cityhoteljaffna.com


Cornerstone College (pvt) LTD
சிறுவர்களுக்கான ஆங்கில
கல்வியுடன் கணனி கல்வி
இன்றே பதிவு செய்யுங்கள்
Cornerstone College (pvt) LTD
Mobile: +94 773677976
Office : +94 812386844
E-mail: jintae98@hanmail.net
Address : 335/5 Colombo Road Kehelwella,
Kiribathkumbura, Kandy. Sri Lanka







இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி,
கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 23.07.2017 அன்று வெளியிடப்பட்டது.